Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 22

ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් மார்ச் 09-15, 2003

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 502




சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## சாதகனும் சாதனையும்



சாதகனுடைய மனநிலை சாதனையிலே அதிகாரித்துக்கொண்டு வரும்பொழுது அவனுடைய இருக்கையும், நடவடிக்கையும், சரீர உருவமும் தியானிக்கப்படும் பொருளின் உருவமாக மாறும். வெவ்வேறு இனங்கள் பரிணமிக்கின்ற முறையும் இதுவே ஆகும்.

சாதகன் கொண்ட உள்ளத்துணர்ச்சிக்கு ஏற்ப அவனது இஷ்டத்தின் வடிவமாக அவன் படிப்படியாக உருவம் மாறுகிறான்.

"பிரம்மம் ஒரு மனிதனிடத்திலே விளக்கமுறுமாயின் அந்த ஒளியினாலே வழியைக் கண்டறிந்து ஆயிரம் மனிதர் முன்னேற்றமடைவர். பிரம்மஞானம் அடைந்தவர்களே மக்களுக்கு ஞானாசிரியராகும் தகைமை வாய்ந்தவர்கள். மக்களுடைய அறிவும் சாத்திரங்களும் இதற்குச் சான்று பகர்கின்றன.

தமது சொந்த நலத்தைக் கருதிய பிராமணர்கள், இந்த நாட்டிலே குருகுல முறையை ஏற்படுத்தினார்கள். இது வேதங்களுக்கும், சாத்திரங்களுக்கும் விரோதமானது. ஆனபடியாற்றான் சமய சாதனைகள் பல செய்தும், பிரம்மஞானத்தை அடைந்து தம்மைப் பூரணப்படுத்திக்கொள்ளுவதற்கு இயலாதவர்களாய் இருக்கிறார்கள்.

விவேகானந்தரின் ஞானதீபம்-சம்பாஷணைகள்.

## நோன்பு இருத்தல்

நோன்பு என்பது ஒவ்வொரு மனிதனும் ஆன்மீகத் துடிப்புடன் இறைவனுக்காக செய்யப்படும் ஒரு பக்தியான செயலாகும், நோன்பு எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்பதை இறைவன் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். "நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்கவேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப்படுத்திக்கொள்கிறார்கள். இவர்கள் தங்களுக்குரிய கைமாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து முகத்தைக் கழுவுங்கள் அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது. மாறாக மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார்."

யசோ.

## மற்றவர் துன்பங் கண்டு மகிழாதீர்!

ஒருவர் துன்பத்தில் துவழும்போது அதனைக் கண்டு மகிழ்வோர் எம்மில் சிலர் உண்டு. அல்லாஹ் விரும்பினால் ஒரு கணத்தில் அதனை மாற்றியமைத்து, மகிழ்ந்தவனைச் சோதனைப் படுத்தவும் கூடும்.

துன்பப்படுபவனைப் பார்த்து நீ மகிழ்ந்தால் அவனே உன்னைப் பார்த்துச் சிரிக்கும் நிலைமையை அல்லாஹ்வால் உண்டாக்க முடியும்.

உன்னுடைய சகோதரனுக்கு நேர்ந்த துன்பத்தைப் பற்றி நீ சந்தோஷம் காட்டாதிருப்பாயாக. ஏனெனில் அல்லாஹ் அவனுக்கு இரங்கி உன்னைச் சோதனைக்குள்ளாக்கிவிடலாம்.

**ஆதாரம்: அல்ஹதீஸ்**

ஆகவே பிறர் துன்பம் கண்டு மகிழ்பவர்களே! இச் செயலைக் கைவிட்டுவிடுங்கள். அல்லாஹ் உங்களுக்கு அருள்புரிவான்.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.499


### பரிசுக்குரிய கவிதை

### மாறும் இயற்கை

தாயை நீயும்
சேயை நானும்
போரிலே இழந்திட்டதால்
இனி என் சேயாய் நீ
உன் தாயாய் நான்.

க.நளாயினி-நீர்கொழும்பு.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### கால்நடை! (வீறுநடை?)

பலிக்குப் பயந்து
பாலைவனம் வந்தோம்
கால் நடையாய்!
களைப்பாறும் தருணத்தில்
குண்டுடன் வருவானோ
குறி வைக்கும் மனிதன்
வீறு நடையாய்?!

ப்ரிய நேசி, களுத்துறை (தெற்கு)

### நீயே தாய்

தாயின் பாலின்றித் தவித்த கன்றுக்கு
நாயின் பால் கிட்டியதே-இப்புவியில்
சேயின் பசிபோக்கும் சீவன் எதுவோ-அதுவே
தாயின் தரம் பெற்றிடும்.

பசறையூர்-மல்லிகா பத்மநாதன்.

### பசிக்கொடுமை

பசியின் கொடுமை வயிற்றை எரிக்குதம்மா
எந்த இனமாக இருந்தால் என்ன?
தாய்மை ஒன்றுதானே
தாகம் தீர்க்க பசியை போக்க
பால் மட்டும் போதுமம்மா.

சிவலிங்கம் சுமதி-ஏறாவூர்-04.

### உங்களால் முடியுமா?

பகுத்தறிவு இல்லாவிட்டால்!
பாசமுமா இல்லை எங்களுக்கு!
உருவத்தால் வேறுபட்டாலும்
ஒற்றுமையுண்டு எங்களுக்கு!
கன்றுக்குட்டி பசியாறும்வரை..!
காத்திருப்பேன் கால் கடுக்க!

ஹப்பத்தளையூர்-மனோ.கோ.பாலன்.

### நன்றி உள்ள ஜென்மம்

தாயின் மடியில்-துளியுமின்றி
தட்டி தடவி கறந்து -கொண்டீர்
நன்றி உள்ள=ஜென்மம் இதன்
அன்பின் அணைப்பில்= உயிர்காக்கும்
என்போல் எத்தனை-பிறவி உண்டோ
என்று நீவிர்- அறிவீரோ?

ஈ.எம்.றாசிக்-பாண்டிருப்பு.

### வாலாட்டும் ஜீவன்கள்

நாள் பார்த்து கோள் பார்த்து
உள்ளதற்கும் இல்லாததற்கும்
ஏழுகட்சி(கள்) வைத்துக்கொண்டு
எது எதற்கோ சண்டையிடும்
எம் மக்கள் மத்தியிலே,
பால்சுரந்து பசி போக்கி
பாரபட்சமின்றி நன்றி காட்டும்
வாலாட்டும் ஜீவன்களை
வாழ்த்திடுவோம் நற்றமிழில்!

நா.ஜெயபாலன்-
பிபிலை.

### இன பேதம்!

சந்தர்ப்ப சூழ்நிலை
எவரையும் எவ்வாறும்
மாற்றலாம்.
எஜமானும் எடுபிடியாக
இறங்கலாம்!
பசி வந்தால் பத்தும்
பறக்கும் ஆனால் இங்கு
பதினொன்றாக
இன பேதம் கூட
இறந்து போகின்றது!

ஏ.எப்.எம்.றியாட்-
முள்ளிப்பொத்தானை.

### சொந்தங்கள்

வாழ்வினிலே
சொந்தங்களை
இழந்து தவிக்கும்
ஜீவனிரண்டு
தமக்குள்ளே
சந்தங்களை
சத்தமின்றி
பரிமாறுகின்றனவோ

வை.கோமிளா-
கிளிநொச்சி.

## கவிதைப் போட்டி இல.502



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 15.03.2003

கவிதைப் போட்டி இல.502
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### அவலம்

இனம் விட்டு இனம் மாறி
பசி தீர்க்கும் அவலம்
மனம் விட்டுத் தளர்ந்த
மனிதர்கள் நிலை போல்
சுணங்காமல் இந்நிலையை
மாற்றிவிடு இறைவா!

க.எழில்யா, கச்சாய்.

### அன்பு

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாள்
என்றான் வள்ளுவன் அன்றொரு நாள்
இன்று எஜமான் செய்த பிழை
தன்னை மறைக்க என்மீது
இரக்கம் கொண்ட இப்பிறவி
தரும் பால் குடித்து வளர்கின்றேன்.

எம்.ஆர்.எம்.ஹமீம்-கல்முனை.

### நன்றியுள்ள மிருகம்

நன்றி கெட்ட நாயே
என்று மானிடன்
தூற்றினாலும் நன்றியுள்ள
மிருகமடா மானிடா!
மானிடர்களிடமோ இனவெறி
மிருகங்களிடம் ஏது பால்வெறி?

கவிநேசன் அ.ரா.முகமட் இக்பால்-நிஷதிகல.

### சங்கமம்

வழி தவறும் மனித குல
தாய்மையோ இன்று
மலசல குழிக்குள் சங்கமம்
வழி தவறி வந்த மிருக
இன தாய்மையோ-இங்கு
இனம் மாறி சங்கமம்.

பாதிமா ரிபாஷா காதர் அரநாயக.

# உங்கள் பக்கம்

## அரச சொத்தா? தனியார் சொத்தா?

மன்னார் மாவட்டத்திலுள்ள அரச திணைக் களங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் வாகனங்கள் திணைக்கள உயர் அதிகாரிகளின் தனிப்பட்ட தேவைகளுக்கே அதிகமாகப் பயன்படுத்தப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மன்னார் கச்சேரியில் கடமைபுரியும் ஒரு உயரதிகாரியின் மச்சான் முறையானவரை விமானநிலையத்திலிருந்து ஏற்றிவரவும், பின் விமானநிலையத்திற்குக் கொண்டுபோய் விடவும் கச்சேரி வாகனம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஒரு பிரபல டாக்டரின் மகளுடைய திருமணத்திற்காக கச்சேரி வாகனங்கள் பல பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவைபோக, பல உயரதிகாரிகள் தமது வீட்டுக்குத் தேவையான கட்டில், கதிரை, அலுமாரி போன்ற பொருட்கள் உட்பட கோழிக்கூடு, பூச்சாடிகள் போன்றவற்றை அரச வாகனங்களில் ஏற்றிச் செல்வதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

அடுத்து, இரவு வேளையில் அலுவலகங்களிலேயே நிறுத்தப்படவேண்டிய இவ்வரச வாகனங்கள் உயரதிகாரிகளின் வீடுகளிலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதையும் அவதானிக்க கூடியதாக உள்ளது.

மேற்படி துஷ்பிரயோகங்கள் நடைபெறுவது அரசாங்க அதிபருக்குத் தெரிந்திருந்தும் நடவடிக்கை எடுக்கப்படாததற்குக் காரணம் புரியவில்லை.

அப்பாவி உயரதிகாரிகள் பேருந்துகளிலும், மோட்டார்ச் சைக்கிளிலும் கடமைக்கு வருவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பொதுமக்களின் தேவைகளை உடனுக்குடன் கவனிப்பதற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய அரச வாகனங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை யார் தடுத்து நிறுத்துவது.?

சு.கிறிஸ்ரி-மன்னார்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net


# வாசக[ர்] சாலை

### வெற்றியின் வெளிப்பாடு

தினமுரசின் 500ஆவது இதழ் வெளிவந்ததையிட்டு அகமகிழ்வு கொள்கின்றேன். பத்திரிகை உலகில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்து எண்ணற்ற வாசகர்களின் இதயங்களைக் கொள்ளைகொண்டு ஊடகத் துறையில் உயர்ந்து நிற்கும் முரசு. எத்தனையோ சவால்களுக்கு ஈடுகொடுத்து சாதுரியமாக இதனைப் படைத்து 10 வது ஆண்டில் பயணத்தைத் தொடர்வது வெற்றியின் வெளிப்பாடே.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

### முத்தான தினமுரசிற்கு

உனது 500வது இதழ் வெளிவந்ததையிட்டு மிக்க மகிழ்ச்சி. அத்துடன் 500வது இதழில் நல்ல விடயங்கள் சேர்த்திருந்தமை எங்களுக்கு விருந்தாக இருந்தது. 10வது வயதைப் பூர்த்தி செய்யும் உனக்கு எனது வாழ்த்துக்கள். அது மட்டுமல்ல, இனி வரும் காலங்களில் புதிய புதிய அம்சங்களைச் சேர்த்து, புதுமைப் பொலிவுடன் தினமுரசு வரவேண்டும் என்பது என்னைப் போன்ற வாசகர்களின் எதிர்பார்ப்பு!

கிருஸ்ணன் சிவா-மஸ்கெலியா.

500வது இதழில் தடம் பதிக்கும் என் இனிய முரசே! இன்னும் இரு பக்கத்தால் மேலதிக தாளாக எமக்கு வழங்கி உவகைகொள்ளச் செய்தாயே! புதுமை மிகு அம்சங்கள், பூத்துக் குலுங்கும் படைப்புக்கள் பூவுலகில் பரவும் வண்ணம் நேர்நடையால் நெஞ்சங்களில் தஞ்சம் புகுந்தாய்! அதில் 23.2.2003 இதழில் "அற்புதனின் டயரி" உதிரம் படிந்த பாதங்கள் எம் உள்ளத்தைத் தொட்டு நனைத்தது. அவரது அற்புதமான படைப்புக்கள் இன்னும் இன்னும் நினைவுகளில் மறக்கப்படா, மறக்கடிக்கப்படாச் சுவடுகளே! அந்த அற்புத இரசிகனின் செய்தியை எம் முன்வைக்கும் முரசு வட்டாரத்தற்கு என் மனமார்ந்த நன்றிகளும் வாழ்த்துக்களும். மென்மேலும் மாற்றங்கள் தொடர்க. முரசே, வாச(கர்)ங்களின் அரசே!

ப்ரியநேசி-களுத்துறை(தெற்கு)

"எங்கள் இதய முரசின் 500 ஆவது இதழ் சுப்பர். அதிலும் முன் அட்டைப்படம் மிகவும் சுப்பர்- "அற்புதனின் டயரி" தொடர் ஆரம்பமே அருமையாக இருந்தது." அதிரவைக்கும் மனிதன் எங்களையும் வியக்க வைக்கின்றது. யாழ் "நூல் நிலையம்" திறப்பதை நிறுத்தியவர்கள் பற்றி அதன் உண்மை நிலையை எங்களுக்கு அறியத் தந்த முரசுக்கு நன்றிகள். சூடு-சுவை-சுவாரசியம் அதுதான் தினமுரசின் வளர்ச்சியின் வெற்றிப்படிகளோ!

சி.பேரின்பராசா-நிலாவெளி-02.

தமிழுக்கு அழகு சேர்க்கும் வீர முரசே! உன் அம்சங்கள் அனைத்தும் சுப்பர். புதிய அம்சங்களைச் சேர்த்திருப்பது மிக்க மகிழ்ச்சி. குறுக்கெழுத்துப் போட்டியைக் கூறலாம்.

உள்ளதை உள்ளபடி கூறி உண்மையான செய்திகளை தலை நிமிர்ந்து தரணியெங்கும் தந்து மிடுக்காய் வெற்றி நடைபோடும் வீர முரசே! உன் ஓசை மாறாமல் பல்லாண்டு உன் பணி தொடர வேண்டும். அதுவே என்போன்ற ஆயிரக்கணக்கான வாசகர்களின் ஆசை.

மனிவேல் ருத்ரா-சின்ன செல்வகந்ததி.



500வது இதழை எட்டிப் பிடித்து எல்லோர் மனதிலும் நீங்கா இடம் பிடித்துவிட்ட அன்பின் முரசே! நீ தாங்கி வரும் எல்லா அம்சமும் பொன் எழுத்துக்களால் பொறிக்க வேண்டும். வரும் ஜூன் மாதம் உனக்குப் பத்து வயதாகிறது. பத்து வயதென்ன உனக்கு நூறு வயதானாலும் உன் இடத்தை யாராலும் எட்டிப் பிடிக்க முடியாது.

ஏ.சி.எம். நசார்,
கொழும்பு-13.

# பேசாலையில் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல்

## காயமடைந்த பலர் மருத்துவமனையில் அனுமதி!

தமிழக மீனவர்கள் இலங்கை யில் மன்னார் கடற்பரப்பிற்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன் பிடிப்பது தொடர்பாக நீண்ட காலமாக இருந்து வந்த முறுகல் நிலை திங்கட்கிழமை இரவு மோதலாக வெடித்ததில் தமிழக மீனவர்கள் பலர் காயமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர்.

இராமேஸ்வரத்திலிருந்து மன்னார் பகுதிக்கு மீன் பிடிக்க வந்த மீனவர்களின் 24 படகுகளைப் பேசாலை கடற்பரப்பில் வைத்து இலங்கை மீனவர்கள் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காய மடைந்த 17 தமிழக மீனவர்கள் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 55 மீனவர்கள் பேசாலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன் பிடித்தலில் ஈடுபட்டிருந்தபோது சுமார் 40 படகுகளில் சென்ற உள்ளூர் மீனவர்கள் குறைந்த பட்சம் 100 பேர் கொண்ட தமிழக மீனவர் குழுவொன்றைக் கடலில் சுற்றி வளைத்துத் தாக்கியிருக்கிறார்கள்.

தமிழக மீனவர்கள் மீதான இந்தத் தாக்குதலின்போது உள்ளூர் மீனவர்கள் பெற்றோல் குண்டுகளை உபயோகித்ததாகவும் இதனால் ஒரு படகு எரிந்து சாம்பரானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக மீனவர்கள் பலர் துப்பாக்கி முனையில் கரைக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காய மடைந்து தமிழகத்திற்குத் தப்பிச் சென்றுவிட்ட பலர் இராமேஸ் வரம், இராமநாதபுரம் மருத்துவமனை களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் அருள் மற்றும் ராஜன் என்ற இரண்டு மீனவர் களின் நிலை கவலைக்கிடமாக வுள்ளதெனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்கள் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

இதேவேளை இந்தச் சம்பவத்தையடுத்துத் தமிழகத்தின் கரையோர மாவட்டங்களான இராமேஸ் வரம், இராநாதபுரம் பகுதிகளில் பதற்றம் நிலவியது.

இராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திய பிரதேச மீனவ சங்கங்கள் இலங்கை மீனவர்களது நடவடிக்கையைக் கண்டித்துக் கோஷம் எழுப்பியதோடு இந்தப் பகுதிகளில் தங்கியுள்ள இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனையடுத்து மண்டபம் அகதி முகாம் உள்ளிட்ட இலங்கை அகதிகள் தங்கியிருக்கும் இடங்களில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தற்போது மன்னாரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மீனவர்களை விடுவிக்கும் முயற்சிகளில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் ஈடுபட்டுள்ளது.

## அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து பிரபா–பாலா பல மணி நேரம் மந்திராலோசனை

போர் நிறுத்த உடன்படிக்கையில் இன்னமும் நிறைவேற்றப்படாத அம்சங்களுக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டுமென்பதை அடுத்த கட்டப் பேச்சில் வலியுறுத்துமாறு புலிகளின் தலைவர் பிரபாகரன் அவ்வியக்கத்தின் தலைமைப் பேச்சுவார்த்தையாளர் அன்ரன் பாலசிங்கத்திடம் தெரிவித்திருக்கிறார்.

4ம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற பின்னர் பிரபாகரனை நேரடியாகச் சந்தித்து இருக்கும் பாலசிங்கம் இப் பேச்சுக்களின்போது ஆராயப்பட்ட விடயங்கள், வழங்கப்பட்ட வாக்குறுதிகள் குறித்துப் பிரபாகரனுக்கு விரிவாக விளக்கினார்.

தற்போதைய கள நிலவரம் இயக்கத்தின் இராணுவ ரீதியிலான கட்டமைப்பைத் தொடர்ந்து பேணுவதில் உள்ள யதார்த்த நிலைமைகள் தொடர்பாகப் பிரபாகரன் பாலசிங்கத்திற்கு எடுத்துரைத்தார்.

அடுத்து வரும் நாட்களில் வன்னிக்குத் தொடராக விஜயம் செய்ய விருக்கும் வெளிநாட்டு ராஜ தந்திரிகளுடன் அன்ரன் பாலசிங்கம் பேச்சுக்களை நடத்தவிருக்கிறார்.

## பாலசிங்கத்தைச் சந்திக்க முஸ்லிம் எம்.பி.க்கள் முயற்சி!

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை இக் குழு நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கைச் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது. இச் சந்திப்பின்போது சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களைத் தனித் தரப்பாகப் பங்குபெறச் செய்யும் வழிமுறைகள் குறித்து ஆராயப்பட இருந்தது.

## தூக்குக்குப் பதில் மின்சார நாற்காலி

தூக்குத் தண்டனைக்குப் பதிலாக மின்சார நாற்காலியில் அமர வைத்தல் அல்லது விஷ ஊசியை உடலில் செலுத்துவதன் மூலம் மரண தண்டனையை அமுலுக்குக் கொண்டு வர அரசாங்கம் பரிசீலிப்பதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

தூக்குத் தண்டனை உலகின் பல நாடுகளிலும் ஒழிக்கப்பட்டு விட்டதாலும் அது கொடுமையான தண்டனையென விமர்சனத்துக்கு உள்ளாகி வருவதாலும் இப் புதிய முறை குறித்து அரசாங்கம் பரிசீலிப்பதாக ஜோன் அமரதுங்க கூறியிருக்கிறார்.

## பால்மா யாருக்குக் கிடைக்கிறது?

யாழ்.குடாநாட்டில் வசதி குறைந்தவர்களுக்கு விநியோகிக்கப்படும் நிவாரணப் பொருட்களில் இம்முறை பால்மா வழங்கப் படவில்லை.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொதுமக்கள் வினவியபோது அரசாங்க அதிபரிடம் கேட்குமாறு பதில் கூறப்படுகிறதாம்.

இதேவேளை யாழ் குடாநாட்டிற்கென வழங்கப்படும் நிவாரணப் பொருட்களில் மாதாந்தம் சுமார் 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் சில உயரதிகாரிகளின் தலையீட்டால் வன்னிக்கு அனுப்பப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 5 கோடி ரூபா செலுத்த மகேஸ்வரனுக்குக் காலக்கெடு!

இந்து கலாசார அமைச்சர் ரி.மகேஸ்வரனிடமிருந்து 5 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையைப் புலிகள் கப்பமாகக் கோரியிருந்த செய்தியை முரசில் பல மாதங்களுக்கு முன்னர் வாசித்த ஞாபகமிருக்கும்.

இப்போது இந்தத் தொகையை முழுமையாகச் செலுத்தி முடிக்க மார்ச் 31ம் திகதிவரை அமைச்சர் மகேஸ்வரனுக்குக் காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

இத் தொகையை முழுமையாகச் செலுத்தாத வரையில் அவரது வர்த்தகப் பொருட்களை ஏற்றிய வாகனங்கள் கொழும்புக்கும், யாழ்ப்பாணத்திற்குமிடையில் பயணஞ் செய்வதற்குத் தடை செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கொழும்புக்கும், யாழ்ப்பாணத்திற்குமிடையிலான பொருட் போக்குவரத்து மற்றும் யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் அவரது மொத்த சில்லறை வியாபாரங்களின் 2 வருட வரிப் பணமாகவே புலிகளால் இந்தப் பாரிய தொகை கோரப்பட்டிருக்கிறது.

தனக்குச் சொந்தமான சில வாகனங்களை விற்பனை செய்து இந்தத் தொகையின் ஒரு பகுதியை அமைச்சர் மகேஸ்வரன் ஏற்கனவே புலிகளுக்குச் செலுத்தியிருக்கிறார். மீதித் தொகையை இம் மாதம் 31ம் திகதிக்கு முன்னர் செலுத்துமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை யாழ். நகரில் அமைச்சர் மகேஸ்வரனுக்குச் சொந்தமான மகாலட்சுமி வர்த்தக நிறுவனத்தின் கீழ் வரும் சில கடைகள் நீண்ட காலக் குத்தகைக்கு விடப்படுமெனக் கடந்த வாரம் யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்றில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. இவருக்குச் சொந்தமான செல்லிட தொலைபேசி வியாபாரம் ஒன்றும் வேறு ஆட்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## முஸ்லிம்கள் தனியலகு கோர வேண்டிய அவசியமில்லை!

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் தனியலகு கோரவேண்டிய அவசியமில்லையெனப் புலிகளின் மட்டக்களப்பு பிராந்திய சிறப்புத் தளபதி ரமேஷ் கூறியிருக்கிறார்.

கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கொன்றில் உரையாற்றிய அவர் தமிழ் மக்கள் சிங்கள அரசாங்கங்களிடம் அநுபவித்த துன்பங்கள், துயரங்கள் தமிழ் மக்களிடமிருந்து முஸ்லிம்களுக்கு ஒரு போதும் ஏற்படமாட்டாது எனக் கூறினார்.

முஸ்லிம்கள் தனியான ஒரு அலகு பற்றியோ, தங்களை ஆழ்வதற்கான ஒரு நிருவாகத்தை அமைப்பது பற்றியோ சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. அவர்களுக்கு எந்த அடக்குமுறைகளும் இல்லாமல் எந்தக் குறையும் இல்லாத அளவுக்கு எங்களுடைய நிர்வாக ஒழுக்கமைப்புக்களைச் செய்வதற்கு அவர்களுடன் சேர்ந்து உழைக்க நாங்கள் முன் வந்திருக்கிறோமென அவர் மேலும் தெரிவித்தார்.

## கைதிகளின் உண்ணாவிரதம் தொடர்கிறது

களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்து வரும் தமிழ் அரசியல் கைதிகளை 7ம் திகதி வெள்ளிக்கிழமை அமைச்சர் மிலிந்த மொறகொட சந்திக்கவுள்ளார்.

களுத்துறைச் சிறைச்சாலையில் 41 அரசியல் கைதிகள் செவ்வாய்க்கிழமை 5வது நாளாகவும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதற்கு முன்னர் இக் கைதிகளின் பல உண்ணாவிரதப் போராட்டங்கள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குறுதிகளின் பேரில் கைவிடப்பட்டன. சில மாதங்களுக்கு முன்னர் இக் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தபோது அவர்களை நேரில் சென்று சந்தித்து உரையாடிய அமைச்சர் மொறகொட கைதிகளை விடுவிக்க அல்லது வழக்குத் தொடர விரைவில் நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

இந் நிலையிலேயே மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கும் கைதிகளைச் சந்திக்க அமைச்சர் களுத்துறைச் சிறைச்சாலைக்குச் செல்லவிருக்கிறார்.

## கண்காணிப்புக் குழு விசனம்!

புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள படைவீரர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோரை விடுவிப்பதற்காகப் புலிகள் முன்வைத்திருக்கும் நிபந்தனைகளை ஏற்க முடியாதவையெனக் கூறியிருக்கும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு எவ்வித நிபந்தனைகளுமின்றி இவர்களை விடுவிக்கப்பட வேண்டுமெனக் கேட்டிருக்கிறது.

புலிகள் தமது கண்காணிப்புப் பணியையும் ஒப்பந்தத்தின் மூலம் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் ஏற்பதாயின் தமது பணிப்புரைகளைச் செயற்படுத்த வேண்டுமென்று கண்காணிப்புக் குழு வலியுறுத்தியிருக்கிறது.

## பாலசிங்கத்தைச் சந்திக்க ஆனந்தசங்கரி வன்னி செல்ல மாட்டாரா?

இம் மாதம் 7ம் திகதி கிளிநொச்சியில் நடைபெறவிருக்கும் தமிழ்க் கூட்டமைப்புக்கும் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கும் இடையிலான சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி பெரும்பாலும் கலந்து கொள்ள மாட்டாரெனத் தெரிய வருகிறது.

கூட்டணித் தலைமைப் பொறுப்பிலிருந்து ஆனந்தசங்கரியை விலக்குமாறு கட்சிக்குள் இருக்கும் மாவை சேனாதிராஜா, ஜோசப் பரராஜசிங்கம் போன்றோரின் சிபார்சுக்கு அமைய புலிகள் கொடுத்துவரும் அழுத்தத்தை முற்றிலுமாகக் கைவிடாத பட்சத்தில் பாலசிங்கத்துடனான இச் சந்திப்பில் ஆனந்தசங்கரி கலந்து கொள்ளப் போவதில்லையெனத் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாலசிங்கத்தைச் சந்திக்க விருக்கும் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர் வரும் காலங்களில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று அவரது அறிவுரையைப் பெறுவார்கள்.

## ஜே.வி.பி. சுதந்திரக் கட்சி விரைவில் ஒப்பந்தம்

ஒரே குழுவாகச் செயற்படுவது குறித்துத் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை நடத்திவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திடும் நிலையை எட்டியுள்ளன.

இது தொடர்பாக சுதந்திரக் கட்சியினால் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க ஆவணம் செவ்வாய்க் கிழமை ஜே.வி.பி.யிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது குறித்த ஜே.வி.பி.யின் ஆலோசனைகள் பெறப்பட்ட பின்னர் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படும். எதிர்காலத்தில் தேர்தல் உட்பட அனைத்து அரசியல் நடவடிக்கைகளிலும் ஒருங்கிணைந்து செயற்பட இக் கட்சிகள் எதிர்பார்க்கின்றன.

# முரசம்

## பிரதமரின் பெருந்தன்மையும் அரசியல் அணுகுமுறையும்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தொலைக்காட்சிப் பேட்டியொன்று அண்மையில் வெளிவந்திருந்தது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு வருடப் பூர்த்தியையடுத்து நீண்ட காலத்தின் பின் பிரதமர் இது தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளித்திருந்தார்.

இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாகவும் அதன் பின்னாலான யுத்த நிறுத்த மீறல்கள் மற்றும் பல சந்தேகங்கள் தொடர்பாகவும் எதிர்க்கட்சிகளும் பத்திரிகைகளும் எழுப்பி வந்த கேள்விகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய ஒரு அவசியத்தைப் பிரதமர் உணர்ந்திருந்ததன் காரணமாகவே இந் நீண்ட நேரப் பேட்டிக்கு முன்வந்திருந்தார்.

எவ்வாறாயினும் இப் பேட்டியில் அவர் மிகப் பக்குவமாகவும் முன்மாதிரியாகவும் நடந்துகொண்டது மெச்சத் தக்கது. வழமையாக இரு பிரதான கட்சிகளும் ஒன்றையொன்று சாடுவதும் இனப்பிரச்சினை முதற்கொண்டு முழுப் பிரச்சினைகளுக்கும் மற்றைய கட்சியே காரணமென்று சாதிப்பதும்தான் இந் நாட்டில் அரசியல் வழிமுறையாக இருந்தது. மழை பெய்யாவிட்டாலும் அதற்கு முன்னைய அரசாங்கம்தான் காரணமென்று பழிபோடும் சுபாவமே இந் நாட்டு அரசியல் தலைவர்களிடம் இருந்து வந்தது.

ஆனால் பிரதமர் ரணில் தற்போது தாம் நடத்திவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஜனாதிபதியின் முன்முயற்சியே காரணமென்று மிகுந்த பெருந்தன்மையோடு பதிலளித்திருந்தார். ஜனாதிபதியே இச் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து வைத்ததாகவும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக நோர்வே நாட்டை வரவழைத்ததாகவும், தாம் அவர் வகுத்த பாதையிலேயே தொடர்வதாகவும் ரணில் கூறியிருப்பது சிறந்த அரசியல் அணுகுமுறையாகும்.

இது எதிர்நிலை அரசியல் அணுகுமுறையை மாற்றியமைப்பதோடு மட்டுமன்றி, பொ.ஐ.மு.வினரையும் இச் சமாதான முன்னெடுப்புகளை நிராகரிக்க முடியாதவாறு செய்யும் ஒரு ராஜதந்திர அணுகுமுறையாகவும் அமைந்துள்ளது. அத்துடன் இங்கு உணரப்பட வேண்டிய முக்கியமான அம்சம் அரசியல் தீர்வொன்றைக் காண வேண்டுமானால் இரு பெரும்பான்மைக் கட்சிகளும் ஒரு பொது இணக்கத்துக்கு வர வேண்டியது அவசியம். அப்படியன்றி ஒன்றை ஒன்று நிராகரித்துச் செயற்படுமானால் என்னதான் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வுத் திட்டத்தைத் தயாரித்தாலும் அதைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாது போகும்.

எனவே இது தொடர்பாக கருத்தொற்றுமையைக் காணும் முயற்சிகளும் சமகாலத்தில் நிகழ வேண்டும். அதற்குப் பிரதமரின் இவ்வீதமான அணுகுமுறை உகந்த வழிமுறை ஆயினும் மற்றைய பிரதான கட்சிகளைக் கதவுக்கு வெளியே காக்க வைத்துக்கொண்டிருக்காது அவைகளையும் பேச்சில் கலந்துகொள்ளக் கூடியவாறு கதவைத் திறந்துவிட ஏற்பாடு செய்வதும் அவசியம்.

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பிரபா-பாலா மந்திராலோசனை

புலிகளின் அரசியல் ஆலோசகர் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் சென்ற 2ம் திகதி வன்னி வந்து சேர்ந்துள்ளார்.

கடந்த முதலாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் பின் கடைசியாக வந்தவர் தற்போது 5ம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் முடிந்ததன் பின்னரே மீண்டும் புலிகள் தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துள்ளார்.



இந்த இடைவெளிக்குள் பல அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன.

பேச்சுவார்த்தையிலும் பல்வேறு திருப்பங்கள் நிகழ்ந்துவிட்டன.

இதேவேளை அடுத்து நிகழவுள்ள டோக்கியோ பேச்சுவார்த்தையும் புலிகளுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைந்துள்ளது.

அதில் பெருமளவு நிதியுதவிகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

அதனை எவ்வளவு தூரம் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதென்று அவர்கள் ஆலோசிக்க வேண்டியுள்ளது.

அதனால் பாலசிங்கத்தின் இந்த வருகை இக் கட்டத்தில் மிகுந்த அக்கறைக்குரியதாக அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

பாலசிங்கம் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக முதற் தடவை வந்தபோது, லண்டனிலிருந்து மாலைதீவு சென்று அங்கிருந்து சீபிளேன் மூலம் நேரடியாக கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் வந்து இறங்கியது மிகப் பரபரப்பாகப் பேசப்பட்டது.

அப்போது பிரபாகரனே நேரில் சென்று பாலசிங்கத்தை வரவேற்றார்.

அன்று, இலங்கையின் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் ஆவணங்களைப் பூர்த்தி செய்து கொழும்புக்கூடாக வருவதென்பதில் புலிகள் இலங்கையின் சட்ட திட்டங்களை ஏற்றுக்கொள்வதில் இருந்த கௌரவப் பிரச்சினை காரணமாகவே கொழும்பினூடாக அல்லாமல் நேரடியாகக் கிளிநொச்சியில் வந்து இறங்கினார்.

ஆனால் இப்போது, புலிகள் அக் கௌரவப் பிரச்சினையில் விட்டுக்கொடுத்துக் கொழும்பினூடாகச் சென்று வருவதற்கு இணங்கிய பின்னர் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்கும் புலிகளின் முக்கியஸ்தர்கள் கொழும்பினூடாகப் பயணிக்கலாயினர்.

இவ் வகையில் பாலசிங்கமும் கொழும்பினூடாக வன்னி சென்றதில் முக்கியத்துவம் எதுவுமில்லை.

முக்கியத்துவம் எங்கு இருக்கிறதென்றால் பாலசிங்கத்தின் வரவையடுத்து புலிகளின் தலைவர் பிரபாகரன் பேச்சுவார்த்தைகள் மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து அவருடன் கலந்தாலோசித்து வழங்கப் போகும் அறிவுறுத்தல்களில்தான்.

பேச்சுவார்த்தைகளின் வெளிப்பார்வைக்கு அப்பால் உள்ள யதார்த்த நிலைகளையும் அதில் சர்வதேச சமூகம் மற்றும் நோர்வே மத்தியஸ்தம், இவற்றுக்கு மேலாக அமெரிக்கா, இந்தியா ஆகியவற்றின் அழுத்தங்கள், ஈடுபாடுகள் என்பவை பற்றியும், இலங்கை அரச தரப்பின் நிலைப்பாடுகள் பற்றியும், முஸ்லிம் மூன்றாம் தரப்புப் பிரதிநிதித்துவம் பற்றிய அழுத்தம் பற்றியும் எடுத்துக் கூறித் தலைவருடன் ஆராய்ந்து, எப்படிக் கையாள்வது என்பதில் தலைவரோடு இணக்கப்பாடு காணவேண்டிய அவசியம் பாலசிங்கத்துக்கு உண்டு.

ஏனெனில், பிரபாவின் அறிவுறுத்தல்களின்படி செயற்பட்டாலும் பேச்சுவார்த்தை என்ற களத்தில் வேற்றுத் தரப்பினர்களதும் வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் அவற்றைக் கையாண்டு அந்த இடத்திலான தீர்மானங்களை எடுக்க வேண்டிய ஒரு இக்கட்டான நிலை பாலசிங்கத்துக்கு உண்டு.

இதன்போது அந் நிலைமைகளை விளக்கி, மற்றத் தரப்பில் வலியுறுத்தப்படும் விடயங்களின் நியாயத் தன்மைகளின் கனதியை உணர்த்தக்கூடிய கால அவகாசம்கூட அவருக்குக் கிடைக்காதிருக்கும்.

அவ்வாறு ஒவ்வொரு சிறு சிறு விடயங்களுக்கும் தலைவரைக் கேட்டுத்தான் முடிவு கூற முடியுமெனக் கூறி நிற்பது பாலசிங்கத்தின் தகுதி, பிரதிநிதித்துவம், நம்பகத் தன்மை என்பவற்றைப் பாதிக்கும் விடயமாகிவிடும்.

இத்தகைய இக்கட்டுகளுடன் தொடர்ந்து 5 பேச்சுவார்த்தைகளைச் சமாளித்த அவர் அடுத்த சில பேச்சுவார்த்தைகளுக்கான உறுதியான ஆயத்தங்களுடன்தான் திரும்பிச் செல்ல வேண்டியவராக உள்ளார்.

இனி வரும் பேச்சுவார்த்தைகளில்தான் முக்கியமான கட்டங்கள் எட்டப்படவுள்ளன.

புலிகள் சமஷ்டித் தீர்வை ஏற்பதாகச் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் கூறியுள்ள நிலையில், அது பற்றி மேலும் அறிவைத் திரட்டிக்கொள்வதற்கென பல்வேறு நாடுகளுக்கும் சென்று அங்குள்ள சமஷ்டி அமைப்பு முறைகளைப் பரிசீலித்து வரும் நிலையில், அடுத்து வரும் பேச்சுவார்த்தையின் கட்டங்களில் அரசியல் தீர்வு பற்றிய அடிப்படை விடயங்களைப் பற்றி புலிகள் பேச வேண்டி ஏற்படும்.

அப்படியான வேளையில், தீர்வுத் திட்டம் பற்றி மேலோட்டமாக அல்லாமல் ஆழமான விவாதமொன்றை மேற்கொள்ள வேண்டி வரும்.

இங்கே, புலிகள் அது பற்றிய அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமானதாகும்.

எனவே பாலசிங்கம் அது பற்றிய தலைமையின் நிலைப்பாட்டைத் தீர்க்கமாகத் தெரிந்துகொள்வது அவசியம்.


இதே போல் தற்போது முஸ்லிம் தரப்பு ஒரு தனித்துவமான மூன்றாம் தரப்பாகக் கலந்து கொள்ள வேண்டுமென்ற கோரிக்கைகள் பலமாக முன்வைக்கப்படுகின்றன.

அரசாங்கம் இது குறித்த தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டிய இக்கட்டுக்குத் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறது.

அத்துடன் முஸ்லிம் தரப்பினர் பாலசிங்கத்தைச் சந்தித்து இது குறித்த புலிகளின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ளக் கோருகிறார்கள்.

இக் கோரிக்கைக்குச் செவிமடுப்பதா என்பதையும் தலைமையின் அறிவுறுத்தலின்படி பாலசிங்கம் முடிவுசெய்ய வேண்டியிருக்கிறது.

அத்தோடு புலிகளின் தலைமை இவ் விடயத்தை எவ்வாறு எடுத்துக்கொள்ளப் போகிறது என்பது பற்றிய ஒரு முடிவை பாலசிங்கம் தெரிவிக்க வேண்டிய அவசியமும் இருக்கிறது.



இதைவிட யுத்த நிறுத்த மீறல்கள், மற்றும் சிறுவர்களைப் படைகளில் சேர்த்தல் போன்ற விவகாரங்களில் பாலசிங்கத்துக்கு ஏற்பட்ட இக்கட்டுக்கள் பற்றியும், இயன் மார்ட்டின் போன்ற சர்வதேச அங்கீகாரம் பெற்ற மனித உரிமையாளர்களுக்கு அவர் வழங்கிய உத்தரவாதங்களைப் புலிகள் தளத்தில் கடைப்பிடிப்பது பற்றியும், மேலும் இவ் விவகாரங்களில் சர்வதேச சமூகம் ஏற்படுத்தும் தலையீடுகளைக் கையாளுவது பற்றியும் அவர் தலைமையுடன் ஆலோசிக்க வேண்டியுள்ளது.

அவற்றில் புலிகளின் தெளிவான பதில்கள் சர்வதேச சமூகத்துக்குத் தேவையாக உள்ளது.

எனவே, தலைமைக்கு நிலைமையைப் புரிய வைப்பதும், அவற்றினடிப்படையில் தலைமை தரும் நெறிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்வதும் பாலசிங்கத்தின் விஜயத்தின் பிரதான நோக்கமாகும்.

அதேவேளை முன்னைய நெறிப்படுத்தல்களை எவ்வளவுதூரம் செயற்படுத்த முடிந்ததெனவும் எவை முடியாமற் போனதெனவும் அவ்வாறு செயற்படுத்துவதில் இருந்த இடர்பாடுகள் என்னவெனவும் எடுத்துக் கூறுவதும், அவற்றில் தலைமையைத் திருப்தி செய்ய வேண்டியதும் மற்றொருபுறம் அவருக்குள்ள பணியாகும்.

ஒருபுறம் பிரபா மிகுந்த அக்கறை கொண்டுள்ள உயர் பாதுகாப்பு வலய விவகாரம் பற்றி அவரது அழுத்தம் திருத்தமான நிலைப்பாட்டை விளங்கிக் கொண்டு, அவ் விடயத்தை எவ்வாறு அணுக வேண்டும் என்ற நெறிப்படுத்தலை அவரிடம் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த பேச்சுவார்த்தைகளில் உயர் பாதுகாப்பு வலயம் குறித்து அதிக அழுத்தம் தெரிவிக்காமல் அதைத் தவிர்த்து, நிதியுதவிகளைப் பயன்படுத்துவது பற்றியே கலந்துரையாடியதாகப் புலிகளின் சில வட்டாரங்களிடையே அதிருப்தி ஏற்பட்டிருந்ததெனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

அதன் உண்மைத் தன்மை எப்படியிருப்பினும் தற்போது உயர் பாதுகாப்பு வலயம் குறித்த தீர்க்கமான முடிவுகளைப் புலிகளின் தலைமை மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது.

உயர் பாதுகாப்பு வலயம் பற்றிய புலிகளின் கோரிக்கைக்குப் படையினர் மறுப்புத் தெரிவித்ததுடன் அதற்குப் புலிகளால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத பதில் நிபந்தனைகளாக, புலிகளின் நீண்ட தூர ஆயுதங்களை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் முன்னிலையில் கண்காணிப்பில் வைக்க வேண்டுமெனக் கூறியிருந்தனர்.

இதைப் புலிகள் ஏற்காத நிலையில் அரசாங்கம் நேரடியாகப் பதிலளிக்காது, அவ் விடயம் குறித்து ஆராய மூன்றாம் தரப்பு இராணுவ நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறுவது பற்றித் தெரிவித்து அதற்குப் பேச்சுவார்த்தையின்போது பாலசிங்கத்தின் சம்மதத்தையும் பெற்றுக்கொண்டது.

ஆனால் அந்தச் சம்மதமே இந்திய இராணுவ நிபுணர் சதீஷ் நம்பியாரின் அறிக்கைக்கு வழி வகுத்தது.

சதீஷ் நம்பியார் இன்னும் தனது பூரண அறிக்கையை வெளியிடாவிடினும் அதன் உள்ளடக்கம் பற்றிக் கசிந்த சில தகவல்கள் குறித்துப் பாலசிங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

இப்போது அதன் முழுமையான அறிக்கை வெளிவரவுள்ள தறுவாயில் புலிகள் அது குறித்து எத்தகைய நிலைப்பாட்டைத் தெரிவிப்பது என்றும், பாலசிங்கம் அதை எப்படிக் கையாள வேண்டுமென்றும் பிரபாகரன் அறிவுறுத்தல் வழங்குவார்.

**தலைமைக்கு நிலைமையைப் புரிய வைப்பதும், அவற்றின் அடிப்படையில் தலைமை தரும் நெறிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்வதும் பாலசிங்கத்தின் விஜயத்தின் பிரதான நோக்கமாகும்.**

இதேவேளை பாலசிங்கம் வெளியாலும் பல சந்திப்புக்களை நிகழ்த்தவுள்ளார்.

அதில் மார்ச் 5ம் திகதி, கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர், இந்நாள் தலைவர், நோர்வே வெளிவிவகார பிரதியமைச்சர், நோர்வே தூதுவர் ஆகியோரைச் சந்திக்கும் சந்திப்புக்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கும் அதேவேளை 7ம் திகதி தமிழ்க் கூட்டமைப்புக் கட்சிகளைச் சந்திக்கவுள்ளமையும் பிரதானமான ஒரு விடயமாகும்.

சென்ற மாதம் 23ம் திகதி தமிழ்க் கூட்டமைப்பினருக்கும் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகள் பிரதிநிதிகளுக்கும் கிளிநொச்சியில் நிகழ்ந்த சந்திப்பில், கூட்டணித் தலைமை மீது அதிருப்தி தெரிவித்திருந்தது தெரிந்ததே.

மாவை சேனாதிராஜா, ஜோசெப் பரராசசிங்கம் ஆகிய கூட்டணியின் பிரமுகர்களே, தலைவர் ஆனந்தசங்கரி குறித்த கடுமையான புகார்களை முதல் நாளன்றே சென்று தெரிவித்ததாகவும் மாவை சேனாதிராஜா புலிகளின் உதவியுடன் கூட்டணியின் தலைமைப் பதவியை ஈட்டிக்கொள்ள முனைவதாகவும் கூட்டணியின் யாழ்ப்பாண வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது பாலசிங்கம் வந்திருக்கும் நிலையில் அவரிடம் இவ்வாறான சுதந்திரமான கட்சிகளின் தலைமைகளைத் தீர்மானிக்கும் விவகாரங்களை புலிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென வினயமாகக் கேட்பதற்கும் அவ் வட்டாரங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எவ்வாறெனினும் 7ம் திகதி கூட்டமைப்பினருடனான பாலசிங்கத்தின் சந்திப்பில் ஆனந்தசங்கரி கலந்து கொள்ளப் போவதில்லையென்றே தெரிய வருகிறது.

இந் நிலையில் இச் சந்திப்பில் என்ன நிகழப் போகிறதென்பது தமிழ் அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படும் விடயமாகும்.

இதைவிட இம் மாதம் 18ம் திகதி டோக்கியோவில் நிகழவுள்ள பேச்சுவார்த்தைக்கு முன்னதாக 15ம் திகதி ஜப்பானியப் பிரதிநிதிகளைப் பாலசிங்கம் சந்திக்கவுள்ளார்.

இது கிடைக்கவுள்ள நிதியுதவிகளில் புலிகளின் வேலைத் திட்டங்களுக்கான நிதிகளை உறுதிப்படுத்திக்கொள்ளும் முன்னேற்பாடாக அமையும்.

ஜப்பானியப் பேச்சுவார்த்தையில் நிதிப் பங்கீடு பற்றிய திருப்திகரமான ஒரு பெறுபேற்றைப் புலிகள் ஈட்டுவதைப் பொறுத்தே அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றங்களும் அமையுமென்பதும் இங்கு புரிந்துகொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

எவ்வாறாயினும் பேச்சுவார்த்தைகளில் உள்ள தேக்கத்தை பாலசிங்கத்தின் வன்னி வருகை நிவர்த்தி செய்யுமா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்று. ■

# "யாழ். நூலகத் திறப்பு விழாச் சர்ச்சை உண்மைகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டன"

தங்க முகுந்தன்– யாழ் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் (TULF)

**யா**ழ். பொது நூல் நிலையம் திறக்கப்படுவது தடை செய்யப்பட்டதும் அதன் பின்னர் மாநகர சபை உறுப்பினர்கள் இராஜினாமாச் செய்ததும் யாவரும் அறிந்ததே.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக ஒரு பக்கத் தகவல்கள் மட்டுமே ஊடகங்களில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தனவேயன்றி மாநகர சபை உறுப்பினர்கள் சார்பாகக் கூறப்பட்ட உண்மைகள் யாழ். ஊடகங்களாலும் சரி, கொழும்பு ஊடகங்களாலும் சரி திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டதென்பதைக் கவலையுடன் கூறவேண்டியுள்ளது. இது தொடர்பாக மாநகர சபையினாலும், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களாலும் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்ட அறிக்கைகள் பெரும்பாலும் இருட்டடிப்பு செய்யப்பட்டன. அன்றேல் திரிபுபடுத்தப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டன.

1974ல் நடந்தது போன்ற நிகழ்வுகள் நடக்கும் எனக் கூறியவர்கள்




அதைச் செய்யவும் தயங்கமாட்டார்கள். நூலகத் திறப்புவிழாவில் இரத்தக்களரி ஒன்று ஏற்படக் கூடாது. கல்விக்குப் பெயர்போன யாழ்ப்பாணத்தில் அப்படிப்பட்ட ஓர் சம்பவம் இடம்பெற்றதாக இருக்கக் கூடாது என்பதற்காகவே நாம் நிகழ்வை இரத்துச் செய்ததுடன், எங்கள் பதவிகளிலிருந்தும் ஒட்டுமொத்தமாக விலகிக் கொண்டோம்.

ஆரம்பத்தில் 1959ம் ஆண்டளவில் நூலகத்தில் இடநெருக்கடி காரணமாக மாடியீறாகக் கட்டிமுடிக்கப்படாத நிலையிலேயே அன்றைய மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பா குடிபுகும் வைபவத்தை நடாத்தினார். அதன் பின்னர் நூலகம் படிப்படியாகவே பூரணப்படுத்தப்பட்டது. இது இன்றைய இளம் தலைமுறையினருக்குத் தெரியாது.

"உலகப் புகழ்பெற்ற ஒப்பற்ற எமது உயிர் போன்ற நூலகம் ஆனி 1ம் திகதி இரவு பொலிஸாரால் தீயிடப்பட்டது. ஏறத்தாள 97.000 பெறுமதி மிக்க நூல்கள் முற்றாக எரிந்து சாம்பலானது. வணக்கத்திற்குரிய தாவீது அடிகள்-சுவாமி ஞானப்பிரகாசரின் மாணவர்-ஒப்பியல் ஆய்வாளர்-பொது நூலகம் எரிகிறது என்ற தகவல் அறிந்து அதிர்ச்சியடைந்து மாரடைப்பால் உயிர் துறந்தார். புத்தகங்களின் பெறுமதி அவருக்குத் தெரியும்..." என பாராளுமன்றத்தில் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கம் தெரிவித்தார். 04.06.1984ல் மீளளிக்கப்பெற்ற கட்டடத்தை அவர் திறந்து வைக்கும் போதும் பகுதி பகுதியாகவே நூலகம் இருந்தது. அப்போது விசேட ஆணையாளராக இருந்த திரு.சி.வி.கே. சிவஞானம் அவர்கள் அன்று வெளியிட்ட மலரில் "...இந்த அழிவைக் கண்டு அசந்துவிடாமல் அதையே ஆக்கமாக மாற்றி இந் நூலகத்தை மீளமைக்கவும், மூன்றாம் கட்டமாக மேற்குப் புறமாக இப்பொழுது திறந்து வைக்கப்படும் கட்டடத்தை அமைக்கவும்.. கீழ்தளத்தில் வாசிகசாலைப் பகுதி, சிறுவர் பகுதி, உடனுதவும் பகுதி ஆகியன இடைக்கால ஒழுங்காக 10.12.1982ம் திகதியிலும், 14.07.1983ல் இரவல் கொடுக்கும் பகுதியும் திறந்து வைக்கப்பட்டன.. இப்போது புதிய கட்டடமும், சிறுவர் பகுதியும் திறந்துவைக்கப்படுகின்றன... இம் முயற்சியில் முக்கிய பங்கு கொண்டவன் என்றவகையில் நான் மகிழ்ச்சியடைவது போல... இந் நூல் நிலையத்தை நிர்வகிக்கும் பொறுப்பும், உரிமையும் இந்த மாநகராட்சி மன்றத்திற்கு உரித்தாகியது பெருமைக்குரியது.." என்றார். ஆனால் கடந்த 13.02.2003 உதயனில் ஒரு தடவையல்ல இருமுறைகள் யாழ் நூலகம் அழிக்கப்பட்டது என்ற தகவலைத் தெரிவித்து திறப்பு விழாவை இரத்துச் செய்ய வேண்டும் எனக் கோரினார்.

16.11.2002 உதயன் 5ம் பக்கத்தில் ஜீ.ஜீ.யின் சிலையை நூலகத்தில் நிறுவ அனுமதி கேட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி அவர்கள் அதற்குப் புலிகளின் ஆலோசனையைப் பெற்றாரா? 13.02.2003 உதயன் 2ம் பக்கத்தில் பத்திரிகை வாயிலாகத் திறப்புவிழா பற்றி அறிந்ததாகப் பொய் சொல்கின்றார். அதற்கு 3 மாதங்களுக்கு முன்னர் அவரால் எழுதப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட கடிதம் ஆவணமாக இருக்கின்றது. நூலகம் திறக்கப்படவிருப்பதால்தானே அமரர் ஜீ.ஜீ.யின் சிலை வைப்பதுபற்றி எழுதியிருப்பார். யாரை முட்டாள் என நினைக்கின்றாரோ தெரியவில்லை.

தந்தை செல்வா அறங்காவல் குழு மாநகராட்சி மன்றத்திற்கு சொந்தமான இடத்தில் அதுவும் பொதுநூலகத்திற்கும் சமாதிக்குமிடையில் முன்னர் விளையாட்டு கிளப்பாக இருந்த இடத்தின் பிற்பகுதி தமக்குரியதெனவும் அதில் தந்தை செல்வா நினைவாக ஓர் நூலகத்தை அமைக்க அந்த இடத்தைத் தமக்குத் தராவிட்டால் சட்ட நடிவடிக்கை எடுப்பதாகவும் அறிவித்ததைத் தொடர்ந்து, நாம் கூட்டணி உறுப்பினர்கள் இதுபற்றி மாநகர சபைக் கூட்டத்தில் கூறிய கருத்துக்கள் குடாநாட்டுப் பத்திரிகைகளில் வெளிவராததும் கவலைக்குரியதே. அன்றைய கூட்டத்தில் நான் பொதுநூல் நிலையத்துக்கு அருகில் தனது பெயரில் நூலகம் அமைவதை பெரியவரின் ஆத்மாகூட ஏற்றுக்கொள்ளாது எனவும் அத்துடன் அவரது ஆவணங்களையும் அவர் சம்பந்தப்பட்ட சகல விடயங்களையும் தனியாக பொது நூலகத்தில் தந்தை செல்வாவின் பெயரில் ஓர் தனியான பகுதியாக ஏற்படுத்துவதற்கு சபை சகலவிதமான நடவடிக்கையையும் எடுக்கும் எனவும் தெரிவித்தேன். மேலும் சட்ட நடவடிக்கைகளுக்காக நீதிமன்றம் சென்றால் மாநகர சபையால் வழங்கப்பட்ட சமாதி அமைந்திருக்கும் பகுதியை மாநகர சபையே பொறுப்பெடுத்துச் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம் எனவும் கூறினேன்.

இன்று நூலகக் கட்டடத்தைப் பார்க்கும் எந்த ஒரு பாமரனும் கட்டி முடிக்கப்படாத கட்டடம் என்று சொல்லமாட்டான். அப்படிச் சொன்னால் அது முட்டாள்தனமானதாகும். அப்படியானால் பிரான்ஸ் நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் நூலகத்துக்கு வழங்கிய ஒரு தொகுதி நூல்களை, தற்பொழுது யாழ். கச்சேரிக்கு முன்னால் இயங்கும் பொது நூலகத்தில் அல்லது நல்லூரிலுள்ள மாநகர சபை அலுவலகத்தில் வைத்தே வழங்கியிருக்க வேண்டும். ஆனால் அவர் புதிய கட்டடத்திலேயே வழங்கினார். பத்திரிகைகளும் இதைப் படம் பிடித்துச் செய்திகள் வெளியிட்டிருந்தன. அதே பத்திரிகைகள் கட்டடத்தின் உட்பகுதியை அழகாகப் படம் எடுத்துப் பிரசுரித்திருக்கலாம். பத்திரிகைகள் இந்த விடயத்தில் நீதியாக நடுநிலையாகச் செயற்பட்டிருந்தால் மறுப்பறிக்கைகள் வருவது நின்றிருக்கும். அத்துடன் நூலகத்தையும் திறந்து வைத்திருக்கலாம். ஆனால் எல்லாம் தலைகீழாக நடந்து முடிந்துவிட்டது. வரலாற்றில் கறைபடிந்த ஒரு நிகழ்வாக பொது நூல்நிலையத் திறப்புவிழா அமைந்துவிட்டது. கல்வியறிவற்ற, பண்பாடு தெரியாத ஒரு கூட்டத்தின் கங்கணம் கட்டிய வரலாறு மாறாத உட்காயமாக அமையும். இவற்றையெல்லாம் தீர்க்கதரிசனத்தால் அறிந்தோ என்னவோ தந்தை செல்வா "தமிழரைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று கூறினாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.




**கா**லம் காலமாகப் பெண்கள் பல்வேறுபட்ட பிரச்சனைகளை எதிர் நோக்கி வருகிறார்கள். கடந்த இரு தசாப்தங்களாக நடைபெற்ற யுத்தமும்- அதனால் ஏற்பட்ட அவலங்களும், பேரிழப்புக்களும் குறிப்பிடத்தகுந்தளவு பெண்களைப் பாதித்துள்ளன. பொருளாதாரச் சுமை- உயிரிழப்புக்கள்- மன அழுத்தங்கள் பெருமளவில் பெண்களே எதிர்நோக்கினார்கள்.

யுத்த காலத்தில் இராணுவக் கெடுபிடிகளாலும் சோதனைச் சாவடிகளாலும் காணாமல்போன, அவமானப்படுத்தப்பட்ட, பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பெண்கள் என முடிவற்ற பட்டியல் ஒன்றிருக்கிறது.

மேலும் சமூக, தேச விடுதலைப் போராட்டங்களில் தம்மையும் இணைத்துக் கொண்டு இந்தப் போராட்டங்களினூடாகப் பெண்களுக்குள்ளே விழிப்புணர்வையும் அவர்கள் மீதான ஒடுக்குமுறையையும் சமூகத்திற்கு உணர்த்த முடியும் என்ற நம்பிக்கையுடன் இணைந்து கொண்ட பெண்கள், இயக்கங்களுக்குள், அவர்கள் சுயாதீனமாகச் செயற்பட முடியாமல் போனது மாத்திரமன்றி, சுதந்திரமான அமைப்பைக் கட்டியெழுப்ப முடியாமல் போனதும் துரதிர்ஸ்டமானதே.

விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் உழைப்பும் பங்களிப்பும் அதிகமாக இருந்த போதிலும் எந்த இயக்கத்தின் தலைமை அமைப்புக்களினுள்ளும் பெண்கள் இருந்ததில்லை.

புலிகளியக்கத்திலுள்ள பெண்கள் பிரிவு முழுக்க முழுக்க இராணுவவாத நோக்கு நிலையைக் கொண்டதாகும். அவர்களுக்கு சமூக, பொருளாதார விடயங்களில் செயற்படும் சாத்தியம் மிகவும் குறைவு. அவர்கள் சமூகத்துடனோ அல்லது சமூகத்திலுள்ள பெண்களுடனோ பரந்தளவிலான ஆக்கபூர்வமான தொடர்பு எதனையும் கொண்டிருக்கவில்லை என்பது துரதிர்ஸ்டமான உண்மையாகும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 2000த்திற்கும் மேற்பட்ட விதவைப் பெண்கள் வடக்கு கிழக்கில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பல்வேறுபட்ட இடர்களை எதிர்நோக்குகிறார்கள். பொருளாதாரச் சுமை, வேலைச் சுமை, குடும்பச் சுமை, தனிமை போன்றவற்றால் பாதிக்கப்பட்ட அவர்களின் வாழ்க்கை எந்த விதத்திலும் உத்தரவாதப்படுத்தப்படவில்லை. விதவைகள்- வறிய பெண்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும் அவர்களது கல்வி, உளவியல் அபிவிருத்திக்கும் மருத்துவம் சுயதொழில் - வீடமைப்புத் திட்டம், கடன் வசதி போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கும் பிறநாடுகள், சர்வதேச நிறுவனங்கள், இங்கிருக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக வழங்கும் உதவிகள் இவர்களின் வாழ்க்கையில் எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. பெரும்பாலான அரச சார்பற்ற நிறுவனங்கள் கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கி வருவதால் கிராமங்களில் வாழும் பெண்களுக்கு உதவிகள் முழுமையாகச் சென்றடைவதில்லை. இடையிலேயே கரைந்துவிடுகின்றன.


அரசியல் விவகாரங்கள், மீள் குடியேற்றம், மனித உரிமை, ஜனநாயகத்தை நிலை நாட்டும் பணிகளில் பெண்களின் பங்களிப்பு இன்று வரலாற்று அவசியமாக எழுந்துள்ளது. பெண்களுக்கென்று சுயாதீனமான பரந்தளவிலான அமைப்பொன்றும் அவசியப்படுகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ள இந் நேரத்திலாவது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள்- விதவைகள்- சிறுவர்களின் நலன்கள் தீவிர கரிசனைக்கெடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**-தாகூர்-**

யுத்தத் தவிர்ப்பு, பெண்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த வன்முறைளைத் தற்காலிகமாகத் தணித்துள்ளது. சமாதானம் நீடித்து நிலவுவதற்கான- ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படுவதற்கான சூழ்நிலைகள் உருவாகும்போது மாத்திரமே வடக்கு கிழக்கில் பெண்கள் மீதான வன்முறை பெருமளவில் கட்டுப்படுத்தப்படும். இவ்வாண்டு சர்வதேச பெண்கள் தினம் நிரந்தர சமாதானத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான பிரகடனங்களை முன்வைப்பதாக அமையட்டும்.

# அதிரடி அய்யாத்துரை



மூத்த கட்சியின்ர தலைமையை மாத்த வேணுமெண்டு வன்னிக்குள்ள இருந்து அறிக்கை வந்ததெல்லோ? கட்சி அழிஞ்சு போனாலும் பரவாயில்லை, அண்ணையைத் துரத்தித் திண்ணையை எப்பிடிப் பிடிக்கிற தெண்ட இளைய நெடுவலின் கைங்கரியம் தானாம் அது. இளைய தளபதியும் மட்டு நகர்ச் சிங்கத்தாரும் கிளிநொச்சிக் கூட்டத்துக்கு முதல்நாளே போய் நிண்டு, அண்ணையின்ர அறிக்கையை வரிக்கு வரி கிளிநொச்சிப் பொறுப்டாளருக்கு விளங்கப்படுத்தினவையாம். ரெண்டாம் நாள் கூட்டத்தில தலைவரை மாத்தோணுமெண்ட விருப்பத்தைத்தான் தம்பிமாரைக் கொண்டு சொல்லப்பண்ணி, மூண்டாம் நாள் நிண்டு நன்றியும் சொல்லிப்போட்டு வந்தவையாம்.

யாழ்ப்பாணத்துப் பேப்பரில ஒரு விளம்பரத்தைப் பாத்தியளே? ஆஸ்பத்திரி றோட்டில இருக்கிற ஒரு 'லட்சுமி' கடையை வாடைக்கு விடப் போறதாயும், மொபிரெல் சம்பந்தமான எல்லாத்துக்கும் இனி ரெலிகொம் மிட்டக் கேட்டுக் கொள்ளுங்கோவெண்டும் வலு வீரக்தியான விளம்பரம். மண்ணெண்ணை யாபாரிக்கு என்னடா நடந்துபோச்செண்டு விசாரிச்சால்...., அவரின்ரை ரெண்டு லொறியத் தடுத்து வைச்சிட்டினமாம். அதுதான் மனுசன் டென்சனாகிப் போட்டுது. பின்னை? கட்டச் சொல்லிக் கேட்ட காசு எக்கச்சக்கமாம்! வெறுத்துப் போய்த்தான் உடனடியாய் விளம்பரம் குடுத்தவர். ஆனால், யாவாரிக்குக் கோவம் ஆகுமே? அதுகும் நம்மாள் ஆதாயமெண்டால் ஆத்தையும் கட்டி இறைக்கிற கேஸ்! அடுத்தநாளே ஓடித்திரிஞ்சு காசைக் கட்டி வழக்கம்போலை வாபஸ்!

சிங்கள ரீ.வி. டிஸ்கஷன்களில, "யாழ்ப்பாணத்துக்கு வாருங்கோ, வன்னிக்கு வந்து பாருங்கோ... நிலைமை விளங்கும்" எண்டு ஜே.வி.பி.க்கும் மற்றச் சிங்கள ஆக்களுக்கும் வெட்டி விளாசிக் கொண்டிருந்தார் குமாரற்ர பொடியன். நிலைமையைப் பாருங்கோவன்! முதல்ல இவருக்கு யாழ்ப்பாணம் தெரியுமோ? யாழ்ப்பாண பஸ்ராண்டில இறக்கி விட்டால் லைபிரரிக்குத் திசைபாத்துத் தனியாய்ப் போய்ச் சேருவாரோ? அங்க இவர் போய் நிண்ட நாட்களும் இரண்டு கைவிரலுக்குள்ள அடங்கும். இந்த விறுத்தத்தில பேப்பர்ச் செய்தியளை மட்டும் வைச்சுக்கொண்டு தப்புத்தப்பாய்ப் பிரச்சினையளைப் பேசிறதுக்கு எம்.பி. எண்டு போய்ப் பார்லிமென்ற் சீற்றைச் சூடாக்கிக் கொண்டிருந்து என்ன பிரயோசனம்?

கருத்துக் கணிப்பு கணிப்பெண்டு ஒரு தொகை எஞ்ஜியோக்கள் கணிக்கிறாங்களே அதெல்லாம் வெறும் புஸ்வாணம்தானெண்டத நிஜமாக்கிப்போட்டுது அசலூர் தேர்தல்! எது? தென்னிந்தியாவில நடந்து முடிஞ்ச சாத்தான்குளத் தேர்தலத்தான் சொல்லுறன். என்ன கணிப்பெல்லாம் கணிச்சு, அம்மா இந்தா மண்கவ்வப் போறாவெண்டு றிப்போட்டுகள் எழுதினாங்கள்! சாம்பிளிங் கிம்பிளிங், வட்டம், சதுரம், சலாகை வரைபு, கிலாகை வரைபெண்டு எத்தின ஜில்மாலுகளக் காட்டிப் பேதலிக்க வைக்கிறாங்கள் உந்தக் கணிப்புக்காரர். கடைசியில காட்டி விட்டாங்களே! அடிச்ச காத்தில அம்மியும் பறந்த கணக்கா, கணிப்புக்காரற்ரை அறிக்கைகளெல்லாம் கட்டோட சேந்தெல்லே பறந்து போச்சு. இவை உண்மையக் கண்டறியிற நோக்கத்தில இல்லை, தங்கட விருப்பத்தைத்தான் உண்மையாக்கத் தெண்டிக்கினமெண்டு சொல்லுறது நிசம்போலத்தான் கிடக்கு. எங்கட நாட்டிலயும் நாலைஞ்சு கணிப்புக்காரர் கடைவிரிச்சுத்தான் இருக்கினம். நோக்கமெல்லாம்... ம்... போகப் போகத்தான் தெரியும்!

பாவம் உந்த ஈராக்கைப் போட்டு இருத்தி எழுப்பிறாங்கள். அதுக்கையும் இருக்குமெண்டு, கோவணத்தையும் அவிட்டுக்காட்டச் சொல்லி நிக்கிறாங்கள். என்னத்தைக் காட்டினாலும் பேய்க்காட்டு எண்டுறாங்கள். அங்கால கொரியாக்காறன், எட்டிப் பாத்தால் அணுகுண்டாலதான் எறிவனெண்டவுடன, கப்சிப்பெண்டு அடங்கிடுறாங்கள். கெஞ்சினால் மிஞ்சுவார் மிஞ்சினால் கொஞ்சுவாரெண்டது இதத்தானோ...?

## முற்றுப் புள்ளிக்கும் அப்பால்...

*கொய்யப்பட்ட மலர்களும்*
*மணம்வீசும்.*
*மரமோ,*
*வீழ்ந்தால் விறகாகிக்*
*கரியாகும்வரை நின்றெரியும்.*

*அரிந்தெடுத்த சந்தனக்கட்டை,*
*அது உரசும் தோறும்*
*உயிர்க்கும்.*

*இறந்த பின்பும்*
*வாழ்வுளதோ...!*

*நின்று போனது சுவாசம்,*
*நிலைத்துப் போயின விழிகள்,*
*மரத்துப் போனது தேகமெனில்...,*

*மரணத்தின் இலக்கணம்*
*நாடிபிடித்துச் சொல்லிவிடும்*
*மரித்துவிட்டான் மனிதனென்று....*

*முடிவாகிப் போனதா?*
*முற்றுப்புள்ளிக்கு அப்பாலும்*
*கவிதைகள்*
*அர்த்தம் பெறுவதில்லையா?*

*வாசம் உள்ளவரை மலரும்,*
*தீயைக் கொள்ளும்வரை விறகும்,*
*தேகம் கரையும்வரை*
*சந்தனக்கட்டையும்*
*வாழ்ந்துகொண்டிருப்பதைப்*
*புரியவைப்பதெப்படி?*

*எஞ்சி நிற்கும்*
*கேள்வி ஒன்றுதான்.*

*சிந்தனை உலகில்*
*ஜீவித்திருக்கும்வரை,*
*மனித வாழ்வில்*
*மரணம் எப்படி*
*முடிவாகிப் போய்விடும்...?*




## உதிரம் படிந்த பாதங்கள்...

### பற்றிக்கொண்டது தீப்பொறி

1980களின் ஆரம்ப பகுதியில் ஒருநாள்...

யாழ்ப்பாணத்திலிருந்து நல்லூர் கோயிலுக்குச் செல்லும் பருத்தித்துறை வீதியில் ஒரு குச்சொழுங்கை....

அந்தக் காலை நேரத்தில் வழமைக்கு மாறான ஏதோ பரபரப்பு அவ்வீடத்தில்,

குச்சொழுங்கைக்குள் சந்தடி நிரம்பியிருந்தது. புதிய முகங்கள் பல போவதும் வருவதுமாக இருந்தன. அனேகமாக குத்து மீசை முளைத்த இளம் முகங்கள் அவை. சற்று மருட்சி தேங்கிய கண்களுடன் பிரதான வீதியை அடிக்கடி நோட்டம் விட்டபடி ஒழுங்கை முகப்பில் ஒரு சிலர் வருபவர்களை அடையாளம் கண்டு ஒழுங்கைக்குள்ளே கைகாட்டி அதன் முடிவில் இருந்த 121ஏ, இலக்க, சிறிய வீட்டுக்கு வழிகாட்டிக் கொண்டிருந்தனர்.

சிறுது நேரத்துக்குள் வீட்டின் விறாந்தையில் பெரியதொரு கூட்டமே அமர்ந்திருந்தது. தெருவிலிருந்து பார்த்தால் இத்தனை பெரிய கூட்டமொன்று உள்ளே நடக்கிறதென்றே நம்ப முடியாது. அத்தனை பேரும் சந்தடியில்லாமல் அமைதியாக அமர்ந்திருந்தனர்.

பச்சை நிற பெயின்ற் அடித்து சாயம் போயிருந்த அந்த வீட்டின் திண்ணையில் திரண்டிருந்த கூட்டத்தைக் கொள்ளக்கூடியதாக இருக்கவில்லை. திண்ணையின் ஓரத்தில் அரைச் சுவர். அரைச் சுவரின் மீதும் சிலர் ஏறிக் குந்தியிருந்தனர். பலர் திண்ணையைத் தாண்டி வெளியேயும் நின்றுகொண்டிருந்தனர்.

வீட்டுக்காரரின் கண்களில் மருட்சி. திடீரென இப்படியொரு கூட்டம் அன்று காலையில் சொல்லாமல் கொள்ளாமல் தமது வீட்டில் வந்து கூடியிருப்பது ஆச்சரியமாக மட்டுமன்றி விபரீதமானதாகவும் பட்டது அவர்களுக்கு. ஒன்று மட்டும் புரிந்துவிட்டது. இதெல்லாம் தமது மகன் சுகுவின் வேலைதான். நாகரீகம் தெரிந்தவர்களாகையால் வந்து கூடியுள்ளவர்களை வெளியேறச் சொல்லாமல் என்ன நடக்கிறது என்று மருட்சி கலந்த புதுமையுடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

வந்து திரண்டவர்கள் அனேகமாக மாணவர்கள்தான் என்று அவர்களுக்குப் புரிந்திருந்ததால் சற்று நிம்மதி. என்றாலும் மகனின் போக்கில் சில காலமாக இருந்துவந்த மாறுதல்கள் பெற்றாருக்கு கவலையளித்து வந்தன. அந்த மாறுதல்களின் ஒரு நினையாப் பிரகார விளைவுதான் இந்தக் கூட்டம் என்பதும் அவர்களுக்குப் புரிந்தது.

மகன் ஏதோ நல்லதையே சிந்திக்கிறான் என்ற நம்பிக்கை இருந்தாலும் ஆபத்தாகிவிடக்கூடாதே என்ற இயல்பான பயம் அவர்களைப் பீடித்திருந்தது.

அன்றைய காலம் இன்றையது போலல்ல. அப்போதெல்லாம் ஆயுதப் போராட்டங்கள் அல்லது அதில் ஈடுபட்ட போராளிகள் பற்றி பொதுசனத்துக்கு அதிகம் தெரிந்திருக்கவில்லை. அவற்றோடு தொடர்பு கொண்டவர்களும் மிகக் குறைவு. இதுபோன்ற விடயங்களெல்லாம் மிக இரகசியமானவையாகவே இருந்தன. பிரபாகரன், உமாமகேஸ்வரன், பத்மநாபா என்ற பெயர்களே அன்று எவருக்கும் தெரியாது. பொலிஸின் கட்டுப்பாட்டிலேயே யாழ்ப்பாணம் இருந்தது. சிறிய அசுமாத்தம் இருந்தாலும் பொலிஸ் உடனே மோப்பம் பிடித்து வந்துவிடும் காலம்.

கூட்டம் நினைத்ததைவிட அதிகமாக நிரம்பி வழிந்தது. கூட்டத்தை இப்போது ஆரம்பிப்பது உசிதமெனப் பட்டது சுகுவுக்கு. அங்கிருந்த ஒரு சிலரிடம் பேசிவிட்டு கூட்டத்தின் முன்னால் சென்று எவ்வித சம்பிரதாயங்களும் இல்லாமல் தனது பேச்சை ஆரம்பித்தான்.

மெல்லிய சிறிய உருவம். கருமைசார்ந்த பொதுநிறம். எடுத்த எடுப்பில் ஒரு சாதாரண சிறு பையன்போல் தோற்றமளித்த அவன் பேச ஆரம்பிக்க மாக்கிரக்கில் கூட்டம் முழுவதும் ஒன்றித்து நின்றது. ஓரிரு வாசகங்கள் கடந்ததுமே அவனது பேச்சில் நிரம்பியிருந்த ஆழமும் செறிவும் கூட்டத்தவரை அப்படியே பிரமிக்க வைத்தன. யன்னல் வழியே நடப்பதை நாட்டமின்றி மேலோட்டமாகப் பார்த்துக்கொண்டிருந்த அவனது தாய் தந்தையர்கள்கூட அந்தப் பேச்சில் அப்படியே சொக்கிப் போயினர்.

அவன் ஒரு மேடைப் பேச்சை அங்கு நடத்தவில்லை. ஒரு பட்டிமன்றப் பேச்சைப்போலவும் அது இருக்கவில்லை. உரத்த குரலில் உணர்ச்சிகரமான தொனியில் கைவீசுக்கிப் பேசும் அரசியல் பேச்சாகவும் அது இல்லை. அங்கிருந்த மாணவர்கள் யாவருக்கும் அது புதிய அநுபவம். ஒவ்வொருவருடனும் நேருக்கு நேர் பேசிக்கொள்வதைப்போல் அவன் பேசினான். மாணவர்களது பிரச்சினைகளையே அவன் பேசினாலும் அது உள்நாட்டு அரசியலுடனும், உலகளாவிய பார்வையுடனும், கருத்தாழமிக்க கொள்கைவாதியின் பேச்சாக அது இருந்தது.

அது மாணவர்களது கூட்டம். அன்றைய காலகட்டத்தில் மாணவர்கள், குறிப்பாகத் தமிழ் மாணவர்கள் தரப்படுத்தல் முதற்கொண்டு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்தார்கள். அப்போது கல்வி வெள்ளையறிக்கை ஒன்று அன்றைய ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டது. மாணவர்களுக்குப் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் அதில் இருந்தன. இவ் வெள்ளையறிக்கை குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதே இக் கூட்டத்தின் உடனடி நோக்கமாக இருந்தது. ஆனால் அதற்கப்பால் இன்னொரு வேலைத் திட்டமும் இதன் பின்னணியில் இருந்தது.

அந்தக் காலத்தில் ஈழ மாணவர் பொதுமன்றம் என்ற மாணவர் அமைப்பு ஈழ விடுதலைப் போராட்டத்துக்காகச் செயற்பட்டு வந்தது. அதனைச் சுருக்கமாக கெஸ் என்று அழைப்பர். கெஸ் ஒரு ஆயுதப் போராட்ட அமைப்பின் முன்னணி அமைப்பாகச் செயற்பட்டு வந்தது. கெஸ்ஸை மாணவர்கள் மத்தியில் விஸ்தரிப்பதற்கான அவசியம் அவர்களுக்கிருந்தது.

மாணவர்களின் போராட்டங்களை முன்னெடுப்பதற்கூடாகத்தான் மாணவர்களை அரசியல் மயப்படுத்த முடியுமென்றும், அவர்களை செயற்பாட்டாளர்களாக உருவாக்க முடியுமென்றும், அதேவேளை நல்ல, ஊக்கமும் உறுதியும் உடைய மாணவர் தலைவர்களை இனங்காண முடியுமென்றும் அவர்கள் நம்பினர்.

அவ்வாறாக, அன்று முன்வைக்கப்பட்ட கல்வி வெள்ளையறிக்கைக்கு எதிரான மாணவர் போராட்டமொன்றுக்கான தயாரிப்புக் கூட்டமொன்றே அங்கு நடந்துகொண்டிருந்தது. எனினும் கெஸ் நேரடியாக இதை முன்னெடுப்பதைவிட பொதுவான மாணவர் அமைப்பொன்றை அமைத்து அதனூடாக இப் போராட்டத்தை முன்னெடுப்பதே உசிதமானதெனக் கருதியது. அதனால் சகல பாடசாலைகளுக்கும் சென்று விளக்கி, பாடசாலை மாணவர் தலைவர்களைத் திரட்டி மாணவர் ஒன்றியம் என்ற பெயரில் இப் போராட்டத்துக்கான மாணவர் அமைப்பொன்றை ஸ்தாபிக்கும் முயற்சியாகவே அக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

> அதுவே அற்புதனின் அரசியல் வாழ்வின் முதலாவது நுழைவாயிலாக அமைந்தது. அந்தக் கூட்டமும் அதில் அவன் சந்தித்த மனிதர்களும் அவனது வாழ்வை மிகப்பெரும் மாற்றத்துக்கு உள்ளாக்கின.....



சுகு, ஆயுதப் போராட்ட அமைப்பொன்றின் இரகசியச் செயற்பாட்டாளராக இயங்கிக்கொண்டிருந்தான். யாழ்ப்பாணத்தில் கெஸ்ஸை ஸ்தாபித்த முதன்மை உறுப்பினர்களில் அவனும் ஒருவன். சுகுவே அவ் இயக்கத்தின் சார்பில் அங்கு கெஸ்ஸிற்குப் பொறுப்பாக விடப்பட்டிருந்தான். அவ் இயக்கம்...... ஆம், அதற்கு அப்போது பெயர் வைக்கப்பட்டிருக்கவில்லை. ஈரோஸ் என்ற இயக்கத்திலிருந்து கருத்து முரண்பாட்டால் பிரிந்து வந்தவர்கள் தமக்கென ஒரு இயக்கத்தை உருவாக்கும் தயாரிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள்.

கெஸ் வெளிப்படையாக இயங்கியது. அதற்கு டேவிட்சன் தலைமை வகித்தான். டேவிட்சன் சிறந்த மேடைப்பேச்சாளன். அக் காலத்தில் மேடைப்பேச்சில் அவனுக்கு இணையாக எவரும் இருக்கவில்லை. அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களே பின்னாளில் அவனது பேச்சாற்றலைக் கண்டு திகைக்குமளவுக்கு அவன் அக் காலத்தில் சோபித்தவன்.

சுகுவின் பேச்சு முடிவடைந்ததும் கூட்டம் மறுபேச்சின்றி அவனது கருத்துக்களுக்கு உடன்பட்டது. இயல்பிலேயே மாறுபட்ட வீதத்தில் சிந்திக்கின்ற அந்த மாணவர் தலைவர்களிடமிருந்து அவனது கருத்துகளுக்கு எவ்வித மறுப்பும் எழவில்லை. பலதரப்பட்ட பாடசாலைகளிலிருந்தும் வந்தவர்களுக்கிடையே இருக்கக்கூடிய எவ்வித வேறுபாடுகளையும் அவனது அணுகுமுறை களைந்தெறிந்து அவர்களை அந்த இடத்திலேயே ஒரே குடும்பத்தவராக்கியது. அந்த மெல்லிய சிறிய உருவம் பேசி முடித்தபோது ஒரு மேதைக்குரிய மதிப்போடு அவனை வியந்து பார்த்தது கூட்டம்.

அந்தக் கூட்டத்தின் மத்தியில் அனைத்தையும் உன்னிப்பாகக் கவனித்தபடி, தனது உருண்ட பெரிய விழிகளை அகல விரித்தபடி, பேரார்வம் பொங்க சுகுவைப் பார்த்தபடி நின்றான் அற்புதன். அந்தச் சிறிய உருவத்தின் உள்ளே ஒரு ஆழமான கருத்துச் சுரங்கம் பொதிந்திருப்பதை அற்புதன் கண்டுகொண்டான். ஒரு மேடைப்பேச்சாகவும் இல்லாமல், மேதாவிலாசமாகவும் இல்லாமல், எவ்வித எடுப்பு நடப்புமற்ற சாதாரணமான உரைநடையில் துல்லியமான கருத்துக்களை எளிமையாகப் பேசி எல்லோரையும் சம்மதிக்க வைத்த அந்த மனிதன்தான் அற்புதனின் வாழ்வில் ஒரு தீப்பொறியை ஏற்படுத்திய முதல் மனிதன். அற்புதன் அளவற்ற பிரமிப்புடன் உற்சாகமாகினான். அவனுக்குள் இருந்த அசாதாரண ஆற்றல்களையெல்லாம் செப்பனிட்டுக் கொள்வதற்கான சரியான வழிகாட்டியைத் தான் கண்டுகொண்டதாக உணர்ந்தான்.

கூட்டம் தொடர்ந்தது.

அதுவே அற்புதனின் அரசியல் வாழ்வின் முதலாவது நுழைவாயிலாக அமைந்தது. அந்தக் கூட்டமும் அதில் அவன் சந்தித்த மனிதர்களும் அவனது வாழ்வை மிகப்பெரும் மாற்றத்துக்கு உள்ளாக்கின. அந்தக் கூட்டம் நிகழாதிருந்தால், சுகுவையும் சுகுவோடு இயங்கிய ஓரிரு முக்கிய நபர்களையும் அவன் சந்தித்திருக்காதிருந்தால் அவனது அறிவும் ஆற்றலும் பின்னாட்களில் இத்துணை விஸ்வரூபம் பெறுவதற்கான வாய்ப்புக்களும் அனுபவங்களும் கிடைத்திருக்காது. ஒருவேளை அவன் சாதாரண மாணவனாக கல்விப் பாதையைத் தொடர்ந்து, ஏனையவர்கள் போல் தனக்கென ஒரு தொழிலோடும் குடும்பத்தோடும் வாழ்ந்துகொண்டிருப்பானா என்றும் எண்ணத் தோன்றும். அப்படியானால் அவன் குறைந்தபட்சம் உயிரோடாவது இருக்க முடிந்திருக்கலாம். ஆனால் அதுவும் கேள்விக்குரியதே. அவனுள் இருந்த ஒரு விசை அவனை அப்படிச் சாதாரண மனிதனாக இருந்துவிட்டுப்போக விட்டிருக்குமா என்பதும் கேள்வியே. அன்றைய நாளிலல்லாவிட்டாலும், தொடர்ந்து வந்த வருடங்களில் இலங்கைத் தமிழர் அரசியலில் ஏற்பட்ட பாரிய அதிர்ச்சிகரத் துயரங்கள் எல்லாம் அவனை வாழாவிருந்துவிட்டுப் போக விட்டே இருக்காதென்பதுதான் உண்மை. எப்படியும் எதுவும் நடக்கலாமாயினும் அப்படியே அவ்வாறேதான் அவனது அரசியல் வாழ்வு சுகு வீட்டு முற்றத்தில் ஆரம்பித்தது.

கூட்டம் தொடர்ந்தது. டேவிட்சனின் மிக உணர்ச்சிவசமான உரை மாணவர்களுக்கு தம் போராட்டத்தில் சக்திவாய்ந்த உறுதுணைகள் இருப்பதாக நம்பிக்கை கொடுத்தது. அத்தோடு பல்கலைக் கழகத்திலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். ஈஸ்வரமூர்த்தி என்ற பல்கலைக் கழக மாணவர் தலைவன் தங்கள் முழு ஆதரவையும் தெரிவித்து உற்சாகமூட்டினான். இன்றைய கால முக்கிய பிரமுகர் ஒருவரும் அன்று அந்தக் கூட்டத்தில் பேசியிருந்தார். அவர்தான் முன்னாள் வட - கிழக்கு மாகாண முதலமைச்சராக பின்னாட்களில் தெரிவான வரதராஜப் பெருமாள். அன்று அவர் பல்கலைக் கழக விரிவுரையாளராக இருந்தார். மாணவர் போராட்டத்துக்கு ஆதரவழிப்பதற்காக சுகுவின் கோரிக்கைக்கு இணங்கி அக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

கூட்டத்தில் பின் வரிசையில் அமர்ந்து அவதானித்துக் கொண்டிருந்துவிட்டு பின்னர் எதுவுமே பேசாது எழுந்து சென்றுவிட்ட ஒருவர் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். அவர் குன்சி என்று அழைக்கப்பட்டார். ஆயுதப் போராட்ட இயக்தில் ஆரம்பகாலச் செயற்பாட்டாளர்களில் ஒருவராக தலைமறைவாக இயங்கிவந்த குன்சியை ஒரு சிலரைத் தவிர யாருக்கும் அங்கு அடையாளம் தெரியாது. இன்று ஒதுங்கிப்போய்

### துறுவது கொம்ரேட்

ஆன்மீகம் சார்ந்த தன் சொந்த வாழ்வில் ஈடுபட்டுவரும் அவர் அன்று தீவிரமாக இயங்கிய மிக முக்கியமான நபராக தலைமறைவு இயக்கத்தைக் கட்டியமைக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.

பலரது பேச்சுக்களின் பின்னர் கூட்டம் ஒருவாறு முற்றுப்பெற்றபோது மாணவர் ஒன்றியம் என்ற பெயரில் கல்வி வெள்ளையறிக்கைக்கு எதிரான போராட்டத்தை நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது. தொடர்ந்தும் இதுபோன்ற சில விழிப்புணர்வுக் கூட்டங்களை வெவ்வேறு இடங்களில் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

கூட்டம் கலைந்தபோது அற்புதன் சுகுவிடம் நேரே சென்றான். சுகுவுடன் தனியாகக் கதைத்துவிட்டு அவன் வீடு சென்றபோது, தான் வேறு ஒரு தளத்துக்கு உயர்ந்துவிட்டதாகவும் தனக்கென ஒரு வரலாற்றுப் பணி காத்திருப்பதாகவும் உணர்ந்தான். அன்றிலிருந்து அவனது பேச்சும் செயலும் புதியதொரு வடிவம் பெறத் தொடங்கியது.

*பாதங்கள் இன்னும் படியும்...*

# மரண தண்டனைக் கைதிகளாக ஈராக் மக்கள்

## கண்களை மூடிக்கொண்ட அரபுலகம்

**ஈராக்கிற்கு எதிரான தாக்குதலின்போது சதாம் ஹுசைன் ஒரு சட்டரீதியான இலக்கு என வாஷிங்டன் அறிவித்துள்ளது. அவருக்கு நெருக்கமான ஆலோசகர்கள், படைத்தளபதிகள் சுமார் 2000 பேரைக் கொலை செய்ய அல்லது சிறைப் பிடிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.**

"ஈராக்கிற்கு எதிராகப் போர் ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அங்கீகாரம் இன்றியமையாத ஒன்றல்ல. அதன் அனுமதி இல்லாமலேயே அமெரிக்கா செயற்படத் தயாராக இருக்கிறது. யுத்தத்தைத் தவிர்க்க உள்ள ஒரே வழி ஈராக் சுயமாகவே தனது ஆயுதங்களைக் களைவதுதான்."

அமெரிக்க ஜனாதிபதியின் இந்தக் கருத்திலிருந்து நோக்கும்போது அமெரிக்கா தனது பாரிய போர் இயந்திரத்தை ஈராக்கிற்கு எதிராகப் பிரயோகிக்கத் தயாராகிவிட்டதென்பதை மிகத் தெளிவாக உணர முடிகிறது.

இன்றைய தேதி வரையில் ஈராக்கை அண்மித்த நாடுகளில் நிலை கொண்டுள்ள அமெரிக்கத் துருப்புக்களின் எண்ணிக்கை 2 இலட்சத்துக்கும் அதிகம் என இராணுவ உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சர்வதேச சமூகத்தின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியிலும் வளைகுடாப் பகுதியைப் பிரமாண்டமானதொரு போருக்கு ஏற்ற இடமாக மாற்றியிருக்கும் வாஷிங்டன் நிருவாகம், களத்தில் உள்ள தனது படைகளுக்குத் தாக்கும்படி கட்டளையிடுவது ஒன்றை மட்டுமே பாக்கி வைத்திருக்கிறது.

சவுதி அரேபியா, குவைட், கட்டார், பஹ்ரைன், ஓமான், துருக்கி ஆகிய ஈராக்கின் அயல் நாடுகள் 6ல் அமெரிக்கப் படைத்தளங்கள் காணப்படுகின்றன. இதில் துருக்கி தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ள இராணுவ மையங்களைப் போருக்கான பூரண தயார் நிலையில் வைத்திருக்கும் அமெரிக்கா, ஈராக் மீதான தாக்குதலுக்காக துருக்கியைப் பயன்படுத்தினால் அதற்கென துருக்கிக்கு வழங்கும் சன்மானம் தொடர்பாக அந்நாட்டு அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றது.

குவைத்திலேயே அதிக அளவு அமெரிக்கப் படைகள் நிலை கொண்டுள்ளன. ஏனைய நாடுகளில் உள்ள படைத்தளங்கள் பெரும்பாலும் விமானத் தாக்குதல்களை நெறிப்படுத்தும் இடங்களாகவே பயன்படுத்தப்படும். றேடார் திரைகளில் சிக்காத அதிநவீன **F 117A, B2, f15, f16, A10** ரக விமானங்கள் இந்த நிலைகளில் பூரணத் தயாரில் காத்திருக்கின்றன.

இவற்றுக்கு மேலதிகமாக வளைகுடாவிலும், மத்திய தரைக்கடலிலுமாக அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல்கள் குறைந்த பட்சம் 5 நிலை கொண்டுள்ளன. தியடோர் ரூஸ்வெல்ட், ஹெரிட்ரூமன், கிட் ஹெரக், கொன்ஸ்டிலேஷன் மற்றும் ஆப்ரஹாம் லிங்கன் என்ற பெயர்களையுடைய இந்தக் கப்பல்கள் அனைத்திலிருந்தும் குரூஸ் ஏவுகணைகள் ஈராக்கைக் குறிவைத்து ஏவப்படவிருக்கின்றன. இவற்றுடன் 75 விமானங்களை ஏற்றிச் செல்லக்கூடிய விமானந் தாங்கிக் கப்பல் ஒன்றை பிரிட்டனும் அனுப்பிவைத்துள்ளது. ஈராக் போரில் ஈடுபடும் அமெரிக்கப் படைகளுடன் இணைந்து கொள்ள 42 ஆயிரம் துருப்புக்களை பிரிட்டன் வளைகுடாவுக்கு அனுப்பவுள்ளது. இதற்கிடையில் கிரீன் பெறஸ் என்ற அமெரிக்க விஷேட கமாண்டோ படைப்பிரிவொன்று ஏற்கனவே ஈராக்கிற்குள் ஊடுருவி போருக்கான முன் ஆயத்தங்களில் ஈடுபட்டிருப்பதாக வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

மிகவும் பலவீனமான நிலையில் இருக்கும் ஈராக்கைத் தாக்கியழிக்க அமெரிக்கா தனது முழு அளவிலான படைப் பலத்தையும் பிரயோகிக்கத் தயாராகி வருகிறது.

அமெரிக்கா கூறி வந்தது போல் ஈராக்கில் இருந்து எவ்வித இரசாயன உயிரியல் ஆயுதங்களும் கண்டெடுக்கப்படவில்லை. தமது இந்த ஏமாற்றத்தைச் சமாளித்துக் கருத்துக் கூறியிருக்கிறார் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட். ஈராக் தன்வசமுள்ள அழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களை வேறு நாடுகளுக்கு மாற்றும் வாய்ப்பிருப்பதாக கூறியிருந்தார். இதன் அர்த்தம் யாதெனில் ஈராக்கில் எவ்வித இரசாயன உயிரியல் ஆயுதங்களும் கண்டெடுக்கப்படாத போதும், "வேறு நாட்டுக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கலாம்" என்ற கற்பனாவாத எடுகோளின் அடிப்படையில் ஈராக் தாக்கப்படப் போகிறது என்பதுதான்.

ஈராக் மீது போர் தொடுக்க அனுமதி கோரும் தீர்மானம் ஒன்று தற்போது அமெரிக்காவினால் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

தீர்மானம் பெரும்பாலும் நிறைவேறாது என்பதே ஏகோபித்த அபிப்பிராயம். ஆனால் தீர்மானம் நிறைவேறாது போனாலும் தமது நிலைப்பாடு போர்தான் என்பதை ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கூறியிருப்பதை இந்தக் கட்டுரையின் ஆரம்பத்திலேயே பார்த்தோம்.

ஈராக்கிற்கு எதிரான போர் ஒன்




றிற்கு ஐரோப்பாவும், தனது நேட்டோ சகாக்களும் பூரண ஆதரவு வழங்குவர் என்றே அமெரிக்கா ஆரம்பத்தில் கருதியது. சீனா, ரஷ்யா, இந்தியா போன்றவற்றிலிருந்து எதிர்ப்புக் கிளம்பலாம் என்றே வாஷிங்டன் கருதியது. ஆனால் ஜோர்ஜ் புஷ்ஷின் போர் பிரகடனத்துக்கு ஐரோப்பாவில் இருந்துதான் கடுமையான எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.

**ஈராக்கை ஆக்கிரமிக்க அமெரிக்கா எடுக்கும் முயற்சிக்கு ஆரம்பத்தில் எதிர்ப்புத் தெரிவித்து வந்த அரபு நாடுகள் தற்போது கொஞ்சம் கொஞ்சமாக அடக்கி வாசிக்க ஆரம்பித்துள்ளன.**

இந்த விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியம் தெளிவாகப் பிளவுபட்டிருக்கிறது. வர்த்தக ரீதியிலான காரணங்களின் அடிப்படையில் ஜேர்மனியும், பிரான்ஸும் ஈராக் போரை ஒருமனதாக எதிர்த்து வருகின்றன.

ஈராக்கை ஆக்கிரமிக்க அமெரிக்கா எடுக்கும் முயற்சிக்கு ஆரம்பத்தில் எதிர்ப்புத் தெரிவித்து வந்த அரபு நாடுகள் தற்போது கொஞ்சம் கொஞ்சமாக அடக்கி வாசிக்க ஆரம்பித்துள்ளன. தமது நாடுகளில் அமெரிக்க படைத்தளங்கள் இயங்கப் பூரண ஒத்தாசை வழங்கிக் கொண்டு போரை எதிர்ப்பதாக நாட்டு மக்களுக்குப் பூச்சாண்டி காட்டும் காரியத்தைத்தான் பல அரபு நாடுகளின் அரசாங்கங்கள் செய்து வருகின்றன. ஈராக்கிற்கு எதிரான யுத்தத்திற்கு எந்த வகையிலும் அமெரிக்காவுக்கு ஆதரவு வழங்காமல் இருக்கும் இரண்டு மத்திய கிழக்கு நாடுகள், ஈரானும் சிரியாவும் மட்டும்தான். கல்ஃப் பிராந்தியத்தில் அமெரிக்காவுடன் மிகக் குறைவான உறவுகளைக் கொண்டுள்ள நாடுகளின் வரிசையில் ஈராக்கிற்கு அடுத்தபடியாக இவை இரண்டுமே காணப்படுகின்றன.

ஈராக்கிற்கு எதிரான தாக்குதலின்போது சதாம் ஹுசைன் ஒரு சட்டரீதியான இலக்கு என வாஷிங்டன் அறிவித்துள்ளது. அவருக்கு நெருக்கமான ஆலோசகர்கள், படைத்தளபதிகள் சுமார் 2000 பேரைக் கொலை செய்ய அல்லது சிறைப் பிடிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

சதாம் ஹுசைனுக்குப் பின்னர் ஈராக் நிருவாகம் எப்படியானதாக இருக்க வேண்டும் என்பது தொடர்பில் ஈராக்கில் உள்ள மாற்றுக் குழுக்களுக்கும் அமெரிக்க அதிகாரிகளுக்குமிடையில் ஏற்கனவே பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

ஈராக்கைத் தாக்கியழிக்க அமெரிக்கா எடுக்கும் முயற்சியைப் பல்வேறு தரப்புகள் பலவாறாக வியாக்கியானம் செய்கின்றன.

ஒசாமா பின்லேடனையும், அல்-கைதா அமைப்பையும் பொறுத்தவரை அமெரிக்கா ஆரம்பிக்கப்போவது மற்றொரு சிலுவைப்போர். கிறிஸ்தவத்திற்கும் இஸ்லாத்திற்கும் எதிரான போர்.

மாக்ஸிசவாதிகளைப் பொறுத்தமட்டில் இந்த யுத்தம் முற்றிலும் பெற்றோலியத்தை இலக்காகக் கொண்டது. ஈராக்கில் உள்ள எண்ணெய்க் கிணறுகளுக்காகவே அங்கே இரத்த ஆறு ஓடப் போகின்றது என்பதே இவர்களின் கருத்து.

இந்த இரண்டு கோணங்களிலும் மாறுபட்ட விகிதங்களில் உண்மை படிந்திருக்கிறது.

செப்டெம்பர் 11ம் திகதியன்றைய தாக்குதலின் பின்னர் அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கையின் இலக்கு பொதுப்படையாக 'பயங்கரவாதம்'



என அழைக்கப்பட்டாலும் உண்மையில் இது இஸ்லாமிய அடிப்படைவாதத்தையே அர்த்தப்படுத்துகின்றது.

அதன் தொடர்ச்சியாக ஈராக் மீதான தாக்குதலை ஒசாமா பின்லேடன் கருதுவதால் அவரது பார்வையில் இது சிலுவைப் போர்.

ஈராக் வசமுள்ள எண்ணெய் வளத்தை சூறையாடவே அமெரிக்கா இந்தப் போரைத் திட்டமிடுகிறது என்ற கருத்தில் கனிசமான அளவு உண்மை இருக்கிறது.

பொருளாதாரத் தடைகள் காரணமாக ஏற்கனவே நொந்து நூலாகிப் போயிருக்கும் ஈராக்கைத் தாக்கி மிகக் குறுகிய நாட்களுக்குள்ளேயே அந்த நாட்டைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்ற அதீத நம்பிக்கை.

அடுத்து, ஈராக் போரினால் அதன் அயல் நாடுகளுக்கும், பொதுப்படையாக உலகப் பொருளாதாரத்திற்கும் ஏற்படப் போகும் தாக்கத்தை அமெரிக்காவினால் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை.

ஈராக்கைக் கைப்பற்ற அமெரிக்காவுக்கு ஏற்படும் செலவு காரணமாகவே அது இநதத் திட்டத்தை இத்தனை காலம் தாமதப்படுத்தியது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

படைகளை வளைகுடாவில் நிலை நிறுத்தவும், நேரடித் தாக்குதலை நடத்தவும், ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அங்கீகாரத்தைப் பெறவும், துருக்கி போன்ற நாடுகளின் உதவியைப் பெறவும் பெருமளவு நிதியை அமெரிக்கா ஒதுக்க வேண்டியிருந்தது.

இத்தகையதொரு போருக்கு சுமார் 100 பில்லியன் டாலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. 1991ம் ஆண்டு வளைகுடா யுத்தத்தின்போது 60 பில்லியன் டாலர் செலவு ஏற்பட்டது. ஆனால் இந்தத் தொகையில், ஐரோப்பா, ஜப்பான், சவுதி அரேபியா போன்றவற்றின் கணிசமான பங்களிப்பு இருந்தது. இம்முறை நிலைமை அவ்வாறல்ல. மொத்தச் செலவையும் அமெரிக்காவும் பிரிட்டனும் மாத்திரம் பொறுப்பேற்க வேண்டி வரும்.

குறைந்த பட்சம் இந்தச் செலவுகளை ஈடுகட்டும் வரையிலாவது ஈராக்கில் உள்ள வளம் மிக்க எண்ணெய்க் கிணறுகளை அமெரிக்கா நேரடியாக தன் கையில் வைத்திருக்கும் என எதிர்பார்க்க முடியும்.

ஆனால் ஈராக்கில் நீண்ட காலம் நிலைகொள்ளும் நோக்கம் தமக்குக் கிடையாது என வாஷிங்டன் அதிகாரிகள் கூறிவருகின்றனர். ஹைட்டி, பொஸ்னியா, கொசோவா போன்ற இடங்களில் தாம் செய்த பணியை இதற்கு உதாரணமாக அமெரிக்கா காட்டுகிறது. ஆனால் இந்த நாடுகளுடன் ஈராக்கை ஒப்பிட முடியாது என்பது உலகறிந்த உண்மை.

ஈராக்கின் எண்ணெய்க் கிணறுகளைக் கைப்பற்றுவதன் மூலம் 'ஒபெக்' நாடுகளின் ஏகபோக வர்த்தக உரிமையை பறிப்பது அமெரிக்காவின் நீண்டகால நோக்கங்களில் ஒன்று என்பது பொதுவான கருத்து சவூதி அரேபியா, ஈரான் போன்ற நாடுகளில் நீண்ட காலமாக நிலவி வரும் இஸ்லாமிய பாரம்பரிய ஆட்சிமுறைகளை முடிவுக்குக் கொண்டு வர ஆரம்பகட்ட நவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஈராக் மீதான ஆக்கிரமிப்பு அமெரிக்காவுக்கு உதவும்.

ஈராக்கிற்குப் பின்னர் அடுத்த இலக்கு ஈரானாக இருக்கும் என்ற ஊகங்கள் இப்போதே வெளிப்படத் தொடங்கிவிட்டன. ஈரான் ஆட்சியாளர்களும், மக்களும் இது தொடர்பில் விவாதிக்க ஆரம்பித்துள்ளார்கள்.

இப்படியாக சமய, பொருளாதார, அரசியல் நோக்கங்கள், நீண்டகால, குறுகிய கால திட்டங்கள் பலவற்றுடன் ஈராக்கைப் பலிக்கடாவாக்க அமெரிக்கா கத்தியைத் தீட்டிக் கொண்டிருக்கிறது.

எவ்வாறெனினும் தாக்குதல் ஒன்றை ஆரம்பிப்பதாயின் அமெரிக்காவுக்கு நீண்டகால அவகாசம் இல்லை. ஏனெனில் ஏப்ரல் மாதம் ஆரம்பித்த பின்னர் வளைகுடாவில் தரைவழித் தாக்குதல்களை நடத்துவது வெளிநாட்டுப் படையணிகளுக்கு இலகுவான காரியமல்ல. வெப்பப் பாலைநிலப் பகுதிகளில் மோசமான அனற்காற்று வீசத் தொடங்கும். உயிரியல் ஆயுதத் தாக்குதல்களில் இருந்து காத்துக் கொள்ளும் நோக்கில் தடித்த சீருடைகளையும், முகக் கவசங்களையும் அணிந்து கொண்டு வளைகுடா நிலப்பரப்பில் அமெரிக்கத் துருப்புகள் போரிடுவது கஷ்டமான அநுபவமாக இருக்கும் எனச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

எனினும் விமானத் தாக்குதல்கள், ஈ-குண்டுகள் என அழைக்கப்படும் அதி நவீன இலத்திரனியல் போர் முறைகளை உபயோகித்து தரைவழித் தாக்குதலை ஆரம்பிக்க முன்னரே ஈராக்கைச் சின்னாபின்னம் செய்வதே இம்முறை யூ.எஸ். போர் வியூகமாக உள்ளது. ஆரம்ப கட்ட விமானத்தாக்குதல்கள், ஏவுகணைத் தாக்குதல்கள் மூலமாக ஈராக்கின் இராணுவக் கட்டமைப்பை முற்றிலுமாகச் சிதறடித்து விட்டால் தரைவழிப் போர் என்ற பேச்சுக்கே இடமிருக்காது என அமெரிக்கா கருதுகிறது.

எவ்வாறெனினும் குறுகிய கால வான் தாக்குதல் ஒன்றின் பின்னர் தரைப் படையினரை ஈராக்கிற்குள் அனுப்புவது ஆபத்தானதாக இருக்கும் என 1991 வளைகுடாப் போரில் அமெரிக்க விமானத் தாக்குதல்களை நெறிப்படுத்திய ஜெனரல் பஸ்டன் குளோசன் கூறுகிறார். தற்போது ஓய்வு பெற்றுள்ள இந்தப் படையதிகாரியின் கருத்துப்படி அரசியல் நோக்கங்களை நிறைவேற்றும் கால அட்டவணை ஒன்

**எம்.பி.எம். பர்ஸான்**

றின் அடிப்படையில் அமெரிக்கா அவசர யுத்தம் ஒன்றில் இறங்கியிருப்பது தவறான செயற்பாடாகும்.

யார் என்ன சொன்னாலும் ஒரு மாபெரும் அதிசயம் நிகழந்தாலன்றி ஈராக் போர் தவிர்க்கப்படுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே உள்ளது.


இவ்வாறானதொரு யுத்தம் உலக அரங்கில் ஏராளமான சிக்கல்களையும் மாற்றங்களையும் ஏற்படுத்தப் போகின்றது. பொருளாதார நெருக்கடி நேரடி விளையாக இருக்கப்போகிறது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் மத்திய கிழக்கு நாடுகளுடன் மேற்கொள்ளும் எண்ணெய் வர்த்தகம், ஈராக்குடனான தேயிலை வர்த்தகம், பொதுவாக சுயெஸ் கால்வாயூடாக நடைபெறும் போக்குவரத்துகள் தடைப்படுவதால் ஏற்படும் நஷ்டம் என ஏராளமான பாதக விளைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும்.



வேடம்பல் கோடியோர் உண்மைக் குளவென்று
வேதம் புகன்றிடுமே- ஆங்கோர்
வேடத்தை நீருண்மை யென்றுகொள் வீரென்றவ்
வேத மறியாதே

**சுப்பிரமணிய பாரதியார்–**



## பாப்பா முரசு சிறுகதை

# உன் பணி செய்து கிடப்பதே...

கருணகிரி என்று ஒரு சிறு நாடு. இந்த நாட்டு மக்கள் மிகவும் துயரத்தில் இருந்தனர். இவர்கள் அரசன் சுண்ணாம்பு ராயன்மீது கடும் கோபத்தில் இருந்தனர்.

அமைதியாக வாழ முடியவில்லை. உடமைகளைப் பாதுகாக்க முடியவில்லை. இரவில் சுதந்திரமாக நடமாட முடியவில்லை. காரணம் நாட்டில் கொலையும், கொள்ளையும் அதிகரித்து வருவதுதான்.

அரசனால் கொள்ளையர்களை ஒழிக்க முடியவீல்லை. எனவேதான் மக்கள் அரசன் மீது கோபமாக இருந்தனர்.

கொள்ளையர்களை அடக்க முடியாத அரசன் நமக்குத் தேவையில்லை என்று நாடெங்கும் மக்கள் கோஷமிட த்தொடங்கினர்.

அரசன் திடீர் என்று படுக்கையில் இருந்து எழுந்தான். "யாரங்கே," என்றான். கட்டளைக்காகக் காத்து நின்றான் சிப்பாய். "உடனே அமைச்சரை வரச் சொல்," என்றான் அரசன்.

சிறிது நேரத்தில் அமைச்சர் வந்து வணங்கினான். "மன்னா, அவசரமாக அழைத்ததன் நோக்கம்?" என்றான் அரசன்.

"மன்னா நாம் என்ன செய்வது? எல்லா முயற்சிகளும் பலனின்றிப் போயிற்றே" என்றான் அமைச்சன்.

"நாம் எப்படியாவது கொள்ளையர்களைப் பிடித்தாக வேண்டும். இல்லை என்றால் நாட்டு மக்களின் ஆத்திரத்திற்குள்ளாக வேண்டும். உடனே ஏதாவது செய்தாக வேண்டும்," என்றான் அமைச்சர்.

"அமைச்சரே, ஒன்று செய்ய வேண்டும். கொள்ளையர்கள் பற்றிச் சரியான தகவல் தந்து கொள்ளையர்களைப் பிடிக்க உதவினால் அவர்களுக்கு நாட்டில் ஒரு பங்கையும், இளவரசியையும் அளிப்பதாக அறிவித்து விடுங்கள்," என்றான் அரசன்.

"அப்படியே ஆகட்டும் மன்னா... நாளை காலையிலேயே அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன். தாங்கள் அமைதியாகத் தூங்கச் செல்லுங்கள்," என்றான் அமைச்சர்.

அடுத்தநாள் அரசனின் சிறப்பு அறிவிப்பு நாட்டு மக்களைத் திடுக்கிட வைத்தது. நாடு முழுவதும் ஒரே பேச்சுதான். கொள்ளைக்காரன் செங்கோட்டயனும் அந்த அறிவிப்பைக் கேட்டுப் பலமாகச் சிரித்தான். அவன் சீடர்களும் அவனுடன் அட்டகாசமாகச் சிரித்தனர்.

"என்னைப் பிடிக்க அரசன் முயற்சி செய்கிறானா? நல்ல தமாசு," என்றான் செங்கோட்டையன். அதைக் கேட்ட மற்றக் கொள்ளையர்கள் பலமாகச் சிரித்தனர்.

பஞ்சவர்ணம் என்ற ஒரு வாலிபன். அவனிடம் பஞ்சவர்ணக்கிளி உண்டு. அது சாதாரண கிளி அல்ல. பேசும் கிளி. அது மட்டுமா, எதைச் சொன்னாலும் அதை அப்படியே செய்யக் கூடிய அதிசயக் கிளி! அரசன் விடுத்த அறிவிப்பைக் கேட்டுச் சிரித்தான் பஞ்சவர்ணம்.

"அரசனின் அறிவிப்பைக் கேட்டாயா? கொள்ளையர்களைப் பிடிக்க உதவினால் நாட்டின் ஒரு பங்கும், இளவரசியையும் தருவாராம்!" என்றான். கிளி அவனைப் பார்த்தது. "நான் பிடித்துத் தருகிறேன்," என்றது கிளி. உடனே அரண்மனைக்குப் புறப்பட்டான் பஞ்சவர்ண, கிளியுடன்.

அரசனை வணங்கிய பஞ்சவர்ணம், "மன்னா, தேவையான சிப்பாய்களை என்னுடன் அனுப்ப வேண்டும். கொள்ளையன் செங்கோட்டையன் இருக்கும் இடத்தை என் கிளி காண்பித்துவிடும்," என்றான் அவன்.

அரசன் வியப்புடன் கிளியைப் பார்த்தான் "பஞ்சவர்ணம் சொல்வது நிஜம் தான்," என்று கிளி கூறியபோது அரசன் மேலும் வியந்து போனான்.

பஞ்சவர்ணம் கிளியுடன் அரண்மனையை விட்டுப் புறப்பட்டான். ஏகப்பட்ட சிப்பாய்கள் ஆயுதங்களுடன் அவனுடன் சென்றனர். அவர்கள் கொடும் காட்டுக்குள் புகுந்து சென்றனர். வெகுதூரம் சென்றபோது ஒரு பெரிய குகை, முதலில் கிளி அந்தக் குகையைச் சுற்றிப் பறந்தது. செங்கோட்டையனும். கூட்டாளிகளும் அங்கு இருக்கிறார்கள் என்பதை உறுதி செய்தபின் அது திரும்பி வந்தது. "பஞ்சவர்ணம்... கொள்ளையர்கள் இங்குதான் இருக்கிறார்கள்," என்றது கிளி.

சிப்பாய்கள் மெதுவாகக் குகைக்குள் சென்றனர். எதிர்பாராத நேரத்தில் திடீர் என்று புகுந்த சிப்பாய்களைக் கண்டு செங்கோட்டையனும் மற்றவர்களும் செயலிழந்து நின்றனர். சிப்பாய்கள் பாய்ந்து சென்று மடக்கிப் பிடித்தனர். அவர்கள் கொள்ளையடித்த ஏராளமான பணத்தையும், தங்க வைர நகைகளையும் சிப்பாய்கள் மூட்டை கட்டி அரசனிடம் ஒப்படைத்தனர்.


நாட்டு மக்களைக் கொள்ளையடித்து அரசனுக்கு கெட்ட பெயர் உண்டாக்கிய செங்கோட்டையனும், கூட்டாளிகளும் தூக்கிலிடப்பட்டனர்.

நாட்டு மக்கள் முன்னிலையில் பஞ்சவர்ணம் பாராட்டப்பட்டான். அறிவித்த படி நாட்டின் கால் பங்கும், இளவரசியையும் பரிசளிக்க முன் வந்தான் அரசன். ஆனால் பஞ்சவர்ணம் அதை அன்புடன் மறுத்துவிட்டான். "மன்னா, நாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று நல்ல நோக்கத்தில்தான் செயற்பட்டேன். ஒருபோதும் பரிசுகளைப் பெற நினைக்கவில்லை," என்றான் பஞ்சவர்ணம்.

அவனுக்கு ஏகப்பட்ட பரிசுகளை அளித்துக் கௌரவித்தான் அரசன். கிளியும் பாராட்டப்பட்டது.

குழந்தைகளே, பலனை மட்டும் எதிர்பார்த்துக் கடமையைச் செய்யக் கூடாது என்பதை உணர்ந்தீர்களா?

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **15.03.2003.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **487**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 484

பரிசுக்குரியவர்:
**எஸ். செந்தூரன்,**
84/10, பாரதி வீதி, திருகோணமலை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **கே. கிருபாலினி,** 407, ஏ/8, இறம்பைக்குளம், வவுனியா. | **சி. மயூரி** 78/1, ஹீரஸ்ஸகல வீதி, கண்டி. |
| **ஜே. ரம்யா,** B.I.F.22, புளூமெண்டல் தொடர்மாடி, கொழு.-13. | **பி. கவிப்பிரியா** தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை. |
| **ஜி. மிருனா,** 210/1, பழைய கல்முனைவீதி, நாவற்குளம். | **செ. பிரசலா** பாரதி வித்தியாலயம் மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு. |
| **வி. கிர்ஷாந்தன்,** மகாவித்தியாலயம், பாண்டிருப்பு. | **சி. நிருபா** சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். |
| **எஸ்.எம். அர்ஜுன்,** சித்துள்முள்ளை மகா வித்தியாலயம், கலஹா. | **எம். பிரகாஷினி** த.செ. கல்லூரி, பண்டாரவளை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. அழகான வெள்ளை மாளிகை ஆனால் உள்ளே செல்லத்தான் வாசல் இல்லை. அது என்ன?

2. தண்ணீரும் மழையும் இல்லாமல் பயிர் பச்சையாக இருக்கிறது. பாக்கு வெற்றிலை போடாமலே வாய் சிவப்பாக இருக்கிறது. அது என்ன?

3. கால் உண்டு நடக்க மாட்டேன் முதுகு உண்டு. வளைய மாட்டேன். கை உண்டு உண்ண மாட்டேன். நான் யார்?

4. மலையுண்டு கிளையில்லை பூ உண்டு மணமில்லை கன்று உண்டு பசி இல்லை. அது என்ன?

5. குளிக்காவிட்டால் சிவப்பு குளித்து விட்டால் கறுப்பு. அவன் யார்?

6. உணவு உண்ணாமல் பருப்பான் நோய் இல்லாமல் இளைப்பான். அவன் யார்?

7. செங்கல் கட்டடம் அதற்குள் பொன் கட்டடம் அதற்குள் வெள்ளி வெள்ளிக்குள் குளம். அது என்ன?

8. அண்டா பெரிய அண்டா பாதி அண்டாவில் தண்ணீர் இருந்தும் அடைப்பு இல்லை அண்டாவுக்கு அது என்ன?


9. பாலாற்றில் மேயுது கறுப்பு மீன். அது என்ன?

10 வைரத்தோடுகள் வயலில் கிடந்தன. சந்திரன் பார்த்தான். எடுக்காமல் போய்விட்டான், சூரியன் பார்த்தான் தூக்கிச் சென்றுவிட்டான். அது என்ன?

### விடைகள்

| | |
|---|---|
| 1. முட்டை | 2. கிளி |
| 3. நாற்காலி | 4. வாழை மரம் |
| 5. நெருப்பு | 6 சந்திரன் |
| 7. தேங்காய் | 8. கிணறு |
| 9. கண் விழி | 10. பனித்துளி |

## அதிசய உலகம்!



**சாலிடரி வாஸ்ப்!**

‘சாலிடரி வாஸ்ப்’ எனப்படும் ஒரு வகைக் குளவிகள், தாங்கள் இட்ட முட்டைகள் பொரிப்பதற்குள்ளாகவே தங்கள் குழந்தைகளுக்கு உணவு சேகரிக்க ஆரம்பிச்சிடும். எப்படித் தெரியுமா? இந்த அம்மாக் குளவி போய் வீடுகளின் திரைமறைவுகள், தனக்கு இஷ்டமான இடங்களில் கூடு கட்டிக்கொண்டு, சிலந்தி மற்றும் கம்பளிப் பூச்சிகளைத் தனது கொடுக்கால் கொட்டி, மயக்கமடைந்த பூச்சிகளைத் தரதரவென்று அப்படியே இழுத்துவந்து, கூட்டுக்குள் வைத்துக் கொள்ளும். அந்தப் பூச்சிகள் சாகாமல் இருப்பதால் அழுகாமல் அப்படியே இருக்கும். இந்தச் சமயத்தில் தான் இட்ட முட்டைகள் குஞ்சு பொரித்தவுடன் குட்டிக் குளவிக்கு இந்தத் தீனிகளை ஊட்ட ஆரம்பிக்கும்.

வாலில்லாத குரங்குகளிலேயே ஹூலாக் கிப்பன் என்ற வகை குரங்குகள் உள்ளன. இவை மரம் விட்டு



மரம் தாவுவதில் கில்லாடிகள். இவை எழுந்து நின்றால் இதனுடைய கை விரல்கள் தரையை தொடும்ன்னா பார்த்துக் கொள்ளுங்களேன். இந்த கிப்பன் குரங்கு ஒரு கையால் ஒரு மரக்கிளையைப் பிடித்து ‘சொயிங்’ என்று பாய்ந்து மூன்று மீட்டர் தொலைவில் உள்ள மரக்கிளையை அடுத்த கைகளால் பற்றிக் கொள்ளுமென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

பிறக்கும் போது இவ் வகைக் குரங்குகள் கறுப்பாகத்தான் இருக்கும். வளர்ந்ததும் பெண் குரங்குகள் லைட் பிரவுன் நிறமாக மாறிவிடும். வாலில்லாக் குரங்குகளிலேயே இந்த கிப்பன் குரங்கு வகை மட்டும்தான் இந்தியாவில் உள்ளது. இவை பர்மா, அஸ்ஸாம், சீனா மற்றும் பங்களாதேஷில் வசிக்கிறன.

## வாரம் ஒரு TOP TEN


**இவ்வாரம்:-** நிறை அடிப்படையில் மனித உடலில் உறுப்புகள்

| உறுப்பு | | சராசரி நிறை | |
|---|---|---|---|
| | | கிராமில் | அவுன்சில் |
| 1. தோல் | | 10,886 | 384.0 |
| 2. கல்லீரல் | | 1,506 | 55.0 |
| 3. மூளை | ஆண் | 1,408 | 49.7 |
| | பெண் | 1,263 | 44.6 |
| 4. நுரையீரல்கள் | வலது | 580 | 20.5 |
| | இடது | 510 | 18.0 |
| | மொத்தம் | 1090 | 38.5 |
| 5.இருதயம் | ஆண் | 315 | 11.1 |
| | பெண் | 265 | 9.3 |
| 6. சிறுநீரகங்கள் | வலது | 140 | 4.9 |
| | இடது | 150 | 5.3 |
| | மொத்தம் | 290 | 10.2 |
| 7. மண்ணீரல் | | 170 | 6.0 |
| 8. கணையம் | | 98 | 3.5 |
| 9. கேடயச் சுரப்பி | | 35 | 1.2 |
| 10. இனப்பெருக்கத் தொகுதி | | 20 | 0.7 |


## அறிவுத் தேடல்


சென்ற வாரப் புதிரின் விடை:
52
முக்கோணங்கள்.

## இந்த வாரப் புதிர்



இங்குள்ள மூன்று சதுரங்களை கையை எடுக்காமல், குறுக்கே செல்லாமல் ஒரே கோட்டால் வரைய வேண்டும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்க்கலாம்.





## குட்பை....

முழு உலகம் ஒன்று திரண்டு எதிர்த்தாலும் தமது இரத்த வெறி... அடங்கிப் போகாது என்பதில் அமெரிக்கா உறுதியாக இருக்கிறது. போர்... அது நிகழ்ந்தே தீர வேண்டியது என அமெரிக்கா திட்டவட்டமாக முடிவு செய்துவிட்டது.

முதலாவது படத்திலிருப்பது அமெரிக்கப் படைவீரர் ஒருவர், மத்திய கிழக்கிற்குச் செல்ல முன்னர் தனது காதலியை முத்தமிட்டு விடை பெறும் காட்சி.

தான் மீண்டு வருவேனா என்று நிச்சயமில்லாத நிலையில் காதலிக்குக் கொடுக்கும் கடைசி முத்தமாகக் கூட இருக்கலாம் என்ற நிலையில் உணர்ச்சி பூர்வமான நேரம்.

இரண்டாவதாக உள்ளது 1970ம் ஆண்டு வியட்நாமில் நங்நுவா என்ற கிராமத்தில் அமெரிக்கப் படைகள் நடத்திய அட்டூழியங்களைச் சித்தரிக்கும் ஒரு புகைப்படம்.

வியட்கொங் ஆயுதப் படையைச் சேர்ந்தவரென்ற சந்தேகத்தில் அவ்வூரைச் சேர்ந்த ஒரு சாதாரண குடிமகனை டாங்கியில் கட்டி ஊர் ஊராக இழுத்துச் செல்கிறார்கள்.

மக்களுக்கு தங்கள் மீது பயம் ஏற்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக அமெரிக்கர்கள் செய்த கொடுமைகளில் ஒரு துளியிது.

ஆனால் இந்தக் கொடூரங்களைத் தாண்டி வியட்நாம் மக்களின் மன உறுதியும் தியாகமும் உலக வரலாற்றில் அமெரிக்காவுக்கு முதலாவது தோல்வியைப் பெற்றுக் கொடுத்தது.

சுமார் 20 வருட ஆக்கிரமிப்பு முயற்சியில் தனது 58 ஆயிரம் இளம் படை வீரர்களைப் பலி கொடுத்தது அமெரிக்கா.


ஈராக் இன்னொரு வியட்நாமாகாவிட்டாலும் அது அங்கு குறைந்த பட்ச எதிர்ப்பையாவது சந்திக்குமா? அடுத்து வரும் வாரங்களில் பதில் கிடைக்கும். ■



## இரு ஒற்றுமைகள்

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி காட்டர் கியூபாவிற்கு விஜயம் செய்தபோது கியூபா அதிபர் பிடல் காஸ்ட்ரோவுடன் பேஸ் போல் **(BASEBALL)** ஆட்டத்தில கலந்துகொண்டார். காஸ்ட்ரோ கியூபாவின் பிரபல **Base Boll** ஆட்டக்காரர் **(Cotcher)** பந்து எறிபவர். காட்டருக்கு விளையாட்டு விதிமுறைகளைக் கற்றுக்கொடுக்கிறார். கியூபா ஒலிம்பிக் போட்டிகளில் பலமுறை தங்கப் பதக்கங்களை வென்று இருக்கிறது. கியூபா, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் பேஸ்போல் ஒரு முக்கியமான ஆட்டமாக இடம்பெறுகிறது.

"ஆட்சி முறை, பொருளாதார முறை என்று ஏராளமான விடயங்களில் எங்களுக்குள் முரண்பாடுகள் காணப்பட்டாலும் இரண்டு அம்சங்களில் எங்கள் நாடுகள் ஒற்றுமையாக இருக்கின்றன. ஒன்று இசை, மற்றது பேஸ் போல்..." என்று ஜிம்மி காட்டர் கூறினார்




## புகழ்

இந்த நபரை ஞாபகமிருக்கிறதா? பிரிட்டிஷ் இளவரசி டயானா உயிரிழந்தபோது அழுது கொண்டே இரங்கற்பா பாடி உலகம் முழுவதையும் அழ வைத்தவர்.

டயானாவின் தீவிர இரசிகரான எல்டன் ஜோன் தனது அபிமான இளவரசியின் மறைவையடுத்து தானே எழுதி வடிவமைத்த பாடலை நெஞ்சுருகப்பாடிப் புகழ் பெற்றவர். இவரது இந்தப் பாடல் அடங்கிய இசை அல்பம் விற்பனையிற் சாதனை படைத்தது. டயானாவின் மரணத்தோடு உலக அளவில் பலர் பிரபல்யம் பெற்றார்கள். அவர்களில் கூடுதல் அளவு புகழையும், பணத்தையும் ஈட்டிக் கொண்டவர் எல்டன் ஜோன்.

எல்டனின் இசைத்துறைச் சேவையைப் பாராட்டி பிரிட்டனில் மிகவும் பிரபலமான றோயல் அகடமி அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்திருக்கிறது.

180 ஆண்டுகளின் பின்னர்தான் இந்த அகடமி இவ்வாறானதொரு பட்டத்தை வழங்கியது என்பதன் மூலம் அல்டன் ஜோனின் கௌரவம் மேலும் உயர்த்தப்படுகின்றது.



## சிந்தாமல்... சிதறாமல்...

நீர் நிரம்பிய கண்ணாடிக் கோப்பைகளை எத்தனை அங்கங்களில் வைத்தாலும் சிந்தாமல் சிதறாமல் காப்பாற்றும் சீன வீராங்கனை. அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள பேகர்ஸ்பில்டு என்ற இடத்தில் பார்வையாளர்களைக் கவர்ந்த சிறப்புச் சாகசம் இது.

# சுடச் சுட...

விக்ரமும், திரிஷாவும் ஜோடி போடும் 'சாமி' படத்தை இயக்குபவர் ஹரி ஷூட்டிங், டைரக்டரின் சொந்த பூமியான நெல்லை மாவட்டத்தில் படு குஷியாக நடந்துகொண்டிருக்க.. அவரது காதல் மனைவியான ப்ரீத்தா விஜயகுமார் சொந்தக்காரர்கள் வீட்டில் டேரா போட்டதோடு, தினசரி சுடச்சுட சமைத்து கணவரை அசத்தினாராம்.





# இணையும் மும் மூர்த்திகள்!

திரையுலக மும்மூர்த்திகள் இணைந்து ஒரு படத்தில் கலக்க வருகிறார்கள்.

அந்த மும்மூர்த்திகள் வேறு யாரும் அல்ல. கமலஹாசன், சத்யராஜ் மற்றும் நாசர் தான். இவர்கள் மூன்று பேரும் இணைந்து ஒரு படத்தில் நடிக்கவுள்ளனர்.

படத்திற்கு 'சண்டியர்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏற்கனவே நடிகர் பிரேம் நடித்து 'சண்டியர் வர்றாரு' என்று ஒரு படம் வந்துவிட்டதால் படத்தின் பெயர் மாறலாம் எனத் தெரிகிறது.

படத்தைக் கமல் அல்லது நாசர் ஆகியோரில் ஒருவர் இயக்கலாம் என்றும் கூறப்படுகிறது. இருப்பினும் இது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவில்லையாம்.

விரைவில் படப்பிடிப்பு ஆரம்பமாக உள்ளதாம். கிருத்தியாசமான தெனாவட்டான பட்டணி தான்

# 'ஜூலி'க்கு குவியும் வாய்ப்புகள்!

'ஜூலி கணபதி' படத்தில் சக்கை போடு போட்டுள்ள சரிதாவுக்கு ஏகப்பட்ட பட வாய்ப்புக்கள் வந்துள்ளன.

ஒரு காலத்தில் தமிழ் சினிமாவை ஆட்டுவித்த முக்கிய நடிகைகளுள் சரிதாவும் ஒருவர். பல்வேறு வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடித்தவரான சரிதா பின்னர் தனது சொந்த மாநிலமான கேரளாவைச் சேர்ந்த நடிகர் முகேஷைத் திருமணம் செய்துகொண்டு செட்டிலாகிவிட்டார்.

கல்யாணத்திற்குப் பிறகு தமிழ் சினிமா ஹீரோயின்களுக்கு டப்பிங் கொடுக்க ஆரம்பித்தார். பிரண்ட்ஸ் படத்தின் மூலம் மீண்டும் தமிழில் ரீ என்ட்ரி ஆனார். அடுத்தடுத்து சிறிய ரோல்களில் நடித்து வந்த அவருக்கு பாலுமகேந்திராவின் ஜூலி கணபதியில் அட்டகாசம் செய்யும் முரட்டு மனைவி வேடம்.

மிகவும் குண்டாகி மெகா சைசில் இருந்தாலும் தனது நடிப்பால் அனைவரையும் கவர்ந்துவிட்டார் சரிதா. இந்தப் படம் சரிதாவுக்கு மீண்டும் மாடக்கெட்டை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. பல படங்கள் அவரை அணுகி வந்துள்ளதாம். இத்தனை நாட்களாகப் படங்களே இல்லாமல் வீட்டில் இருந்த சரிதாவுக்கு இது இன்ப அதிர்ச்சி தந்துள்ளதாம்.





# கிளு கிளு சுஜா

படமே ஒருவித பரவசத்தை ஏற்படுத்தக் கூடியது என்பதால், விநியோகஸ்தர்கள் மத்தியில் 'இளசு புதுசு ரவுசு' படத்துக்கு நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது. 'ப்ளஸ் 2' படத்தின் கதாநாயகி சுஜா இதில் ஆடைக் குறைப்பு செய்து கிளுகிளுப்பாக நடித்துள்ளார். இவருடன் கரிஷ்மா, பாயல் போன்ற இளம் நடிகைகளும் போட்டி போட்டு கவர்ச்சி விருந்து படைத்துள்ளனர். இதில் நீச்சல் உடையில் தோன்றும் சுஜா, இரசிகர்களை சர்க்க கவர்ச்சி என்ற ஆயுதத்தை யூஸ் பண்ணுவேன். என்கூட எந்த மும்பை நடிகையாலும் போட்டி போட முடியாது என்று சவால் விடுகிறார்.

# நடிகரைப் போல் இரசிகர் புகைப்பிடிப்பதில் மும்முரம்

புகை பிடிப்பதுபோல் நடித்து இளைஞர்களைக் கெடுப்பதில் ரஜினி, ஷாருக்கான், சிரஞ்சீவி போன்ற நடிகர்கள் முன்னணியில் இருப்பதாக சர்வதேச சுகாதார அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

இந்திய சினிமாவினால் ஏற்பட்டுள்ள சிகரெட்டின் தாக்கம் குறித்து உலக சுகாதாரஸ்தாபனம் நடத்திய ஆய்வொன்றிலிருந்து இந்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த 10 ஆண்டுகளில் திரைப்படங்களில் புகைக்கும் காட்சிகள் 64 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

திரைப்படத்தில் சிகரெட் பிடிப்பதில் ஷாருக்கான் முன்னிலையில் இருக்கிறார். ரஜினி, சிரஞ்சீவி ஆகியோர் அடுத்தபடியாக உள்ளனர்.

தமது அபிமான ஹீரோக்கள் புகைத்துத் தள்ளும்போது தாமும் புகைப்பதில் தப்பில்லை என்று கருதும் இரசிகர்கள் விரைவில் புகைப் பிடிக்கும் பழக்கத்திற்கு ஆளாகிறார்கள்.

இவ்வாறான காட்சிகளில் நடிக்கும் பிரபல நடிகர்கள் சிகரெட் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து பெருந் தொகைப் பணம் பெறுவதாகக் கூறப்படுகிறது.

# மினி சினி

* நீண்ட இடைவெளிக்குப் பிறகு 'உதிராத பூக்கள்' என்ற ஒரு படத்தை இயக்க இருக்கிறார் 'உதிரிப் பூக்கள்' இயக்குநர் மகேந்திரன். இந்தப் படத்தில் எம்.பி.பி.எஸ். படிக்கும் பிரெஞ்சு மாணவி ஹீரோயினாக நடிக்க இருப்பதைத் தெரிவித்த அவர் ஹீரோவைப் பற்றி மூச்சுவிடவில்லை. அவர் கருணாஸ்தான் என்பது இப்போது வெளிவந்துவிட்டது.

* 'குஞ்சி கூனன்' என்ற மலையாளப் படத்தின் தமிழ் ரீமேக் உரிமையை ஏ.வி.எம். நிறுவனம் வாங்கியிருக்கிறதாம். மலையாளத்தில் வசூல் களம் ஜெயித்த இந்தப் படத்தில் திலீப் ஹீரோவாக நடித்தார். தமிழில் ஹீரோவாக நடிப்பது விக்ரம்.

* 'சுயேச்சை எம்.எல்.ஏ.' என்ற படத்தை குருதனபால் இயக்குகிறார். அரசியலைக் கிண்டல் செய்து எடுக்கப்படுகிறதாம் இப்படம். இந்த அரசியல் காமெடி படத்தில் சத்யராஜ் நடிக்கிறாராம்.

* பிரபுவும் பிரபுதேவாவும் இணைந்து நடித்த 'சார்லி சாப்ளின்' படத்தின் தெலுங்கு ரீமேக் சூப்பர் ஹிட்டாகி இருக்கிறதாம். தெலுங்கில் ஸ்ரீகாந்தும் வேணுவும் நடித்திருக்கிறார்கள்.

* நான் ஹீரோயினாக நடித்தபோது யாரிடமும் வாய்ப்புக் கேட்டுப் போனதில்லை. அதே போல இப்போதும் நான் வாய்ப்புக் கேட்டுப் போவதில்லை. என்னைத் தேடி வருகிற வாய்ப்புகளை மட்டும் பிடித்திருந்தால் ஒப்புக்கொண்டு நடிக்கிறேன். எனக்கு முழுநேர நடிகையாக இருக்கணும் என்ற சூழ்நிலை இல்லை என்று கூறுகிறார் நடிகை ரஞ்சிதா.

* மனிதர்கள் மனிதர்கள் தான். கடவுள் கடவுள்தான். மனிதர்களைக் கடவுளோடு இணைத்துப் பார்ப்பது தவறு. ஒரு வேளை எனக்குக் கோயில் கட்டினா சத்தியமா நான் அங்க போகமாட்டேன் என்று கூறி வருகிறார் நடிகை ஷெரின்.

* திருச்சி மலைக்கோட்டையிலும் ஸ்ரீரங்கத்திலுமாக தொடர்ந்து 20 நாட்களுக்கு 'திருடா திருடி' படத்தின் ஷூட்டிங் நடத்திவிருக்கிறார்களாம்.

* 'காஷ்மீர்' படத்தில் விந்தியாவின் கவர்ச்சி நடனம் ஒன்று இடம்பெற்றுள்ளது. ஹோட்டல் கிளப்பில் விந்தியா ஆடும் இந்த ஆட்டத்துக்குப் பின்னணி பாடி இருக்கிறார் அனுபமா.

* 'தத்தி தாவுது மனசு' படத்தில் மும்தாஜை தவிர ஊர்வசி பட்டேல் என்ற மும்பை அழகியும் கவர்ச்சிக் களத்தில் இறங்கியிருக்கிறார்.

# அஜித்துடன் நடிக்க மீரா ஜாஸ்மின் மறுப்பு

மலையாளக் குயில் மீரா ஜாஸ்மினைப் பற்றிக் கோடம்பாக்க வட்டாரத்தில் உலவும் லேட்டஸ்ட் தகவல் இது: நடிகர் ஷாமுடன் இணைந்து 'பாலா'வில் நடித்தார் மீரா. படம் வெற்றிபெறவில்லை. எனினும் சம்பளம் அம்மணி பெருந்தொகை ஒன்றைக் கேட்டார். 50 லட்சம் கேட்டதாய் பேச்சு. இரண்டு வருடங்களுக்கு முன்பு ஜோதிகாவும் இதே போன்று 50 லட்சம் கொடுத்தால்தான் கால்ஷீட் தருவேன் என்று அடம்பிடித்தார். இதனால் அவருக்குப் படவாய்ப்புகள் இல்லாமல் வீட்டில் முடங்கினார். பின்னர் படிப்படியாக தனது சம்பளத்தைக் குறைத்துக் கொண்டார்.

தமிழில் 'ரன்' வெற்றிக்குப் பிறகு மீராவுக்கு நல்ல பெயர் இருப்பதால் அஜித், தனது புதிய படமான 'மகா' திரைப்படத்தில் நாயகி வேடத்திற்கு மீராவை சிபாரிசு செய்தாராம். இயக்குனரும் மீராவைத் தொடர்பு கொண்டு ஒப்புதல் கேட்டிருக்கிறார். அஜித்துடன் நடிக்க மறுத்ததோடல்லாமல் இயக்குனரை மரியாதைக் குறைவாக நடத்தி அனுப்பிவிட்டாராம்.

இதனால் நொந்துபோன இயக்குனர், மீரா கதாநாயகி என்றால் தான் படத்திலிருந்து விலகிக்கொள்வதாகக் கூறியுள்ளார்.

இதனால் தற்போதைக்கு மகாவில் நடிக்க இயக்குனரே ஒரு நடிகையைத் தேர்வு செய்து கொள்ளுமாறு அஜித் கூறி விட்டாராம்.

இது குறித்து மீரா பிரபல வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், அஜித் கேட்ட தேதிகளில் எனக்கு வேறு படத்தின் படப்பிடிப்புகள் இருந்தன. அதனால் தற்போது அவர் படத்தில் நடிக்க இயலாது எனத் தெரிவித்திருந்தேன். அஜித், விஜய் படங்களில் நடிக்க ஆவலாக இருக்கிறேன் என்றார்.



# சினி வி

## காதோடு சொ

## ...சிட்

## ...ழுகிறோம்

முழுக்க முழுக்க கிராமத்து கதையொன்றைச் சொந்தமாகத் தயாரிக்கப் போகிறார் அசல் கலைஞன். படத்தில் சண்டித்தனம் செய்ய முரட்டுக்காளை ஒன்று தேவை. தமிழகத் ... ஒன்றிலிருந்து காளையை விலைக்கு ... சென்னையில் இறங்கிவிட்டார். மொத்தச் ...

... முழுக்கப் பரவ, அசல் கலைஞனை ... படமெடுத்து நொந்துபோன தயாரிப் ... 'இதுவே நம்ம தயாரிப்பா இருந்தா ...ப்ளைட்ல ஏத்திட்டு வரச் சொல்லி விருப்பாரு. ம்.. சொந்தப் படமாச்சே... சக்குப் பையை அவிழ்ப்பாரா?' என்று பார்ப 'போரிடமெல்லாம் புலம்பி வைக்கிறார்.



மனோஜ்-ரதி
படம்: பல்லவன்



## அஜீத்துக்கு அக்கா, சிலம்பரசனுக்கு அம்மா

திருமணம் ஆனவுடனே கதாநாயகி நிலையிலிருந்து கேரக்டர் ஆர்ட்டிஸ்டாக தூக்கி எறியப்பட்டு விட்டார் ரஞ்சிதா. ஒன்றிரண்டு படங்களில் தலைகாட்டிய அவர், கணவர் ராகேஷ் வசிக்கும் காஷ்மீர் பகுதியில் சில காலம் வசித்தார். இராணுவத்தில் பணிபுரிபவர் என்பதால், அடிக்கடி அவர் இடம் மாறினார். இதனால் சென்னையில் தன் பெற்றோர்களுடன் தங்கியுள்ள ரஞ்சிதா, ஜே.என். பங்கஜ் மேத்தா தனது பவர் மீடியா அண்ட் கோ சார்பில் தயாரிக்கும் 'ஆஹா எத்தனை அழகு' படத்தில் நாசர் ஜோடியாக நடித்துக் கொண்டிருக்கிறார்.

தெலுங்குல ஒரு சீரியல் பண்றேன். தமிழ்ல 'ஆஹா எத்தனை அழகு' படம் மட்டும் தான் பண்றேன். அஜித்துக்கு அக்கா கேரக்டர்ன்னு சொல்லி கேரளா கூட்டிட்டு போனாங்க. அங்க பார்த்தா ஏழு வயசு பிள்ளைக்கு அம்மாவா நடிக்கச் சொன்னாங்க. என்னால அம்மா கேரக்டர்ல நடிக்க முடியாதுன்னு சொல்லி, 'ஜனா' படத்துல இருந்து விலகிட்டேன். அப்புறம் ஏ.வெங்கடேஷ் டைரக்ஷன்ல 'தம்' படத்துல சிலம்பரசனுக்கு அம்மாவா நடிக்க கேட்டாங்க. முடியாதுன்னு சொல்லிட்டேன். கல்யாணம் ஆனாலே கதாநாயகி அந்தஸ்து பறிபோயிடுது. இதுக்கு என்ன காரணம்னு இதுவரைக்கும் என்னால புரிஞ்சுக்க முடியல என்று நிஜமாகவே வருத்தப்பட்டார் ரஞ்சிதா.

## இளைய தளபதியின் ஒத்திகை

'இளைய தளபதி' என்று இரசிகர்களால் தூக்கி வைத்து கொண்டாடப்படும் காலத்தில் தி.மு.க.வின் பக்கம் வைத்து எல்லோராலும் பார்க்கப்பட்டவர். சமீப காலமாக அவரது பார்வையில் அ.தி.மு.க. பக்கம் தாவ ஆரம்பித்திருப்பதாக கோடம்பாக்கத்தில் பரபரக்கிறார்கள். 'வசீகரா' படத்தில் ஒப்பந்தமான பிறகு பேச்சு. 'தோட்டத்துக்கு வேண்டிய சிலரின் வற்புறுத்தலால்தான் அந்தப் படத்திற்கு விஜய் ஒப்புக் கொண்டார்" என்று அப்போதே பேச்சு உண்டு. அதை நிரூபிக்க லேட்டஸ்ட்டாக போரூரில் தான் திறந்த திருமண மண்டப விழாவுக்கு அவர் வி.ஐ.பி.க்களை அதிகளவில் அழைத்திருந்தார் விஜய்.

## 'கண்ணிலே ஒரு மின்னல்'

'கண்ணிலே ஒரு மின்னல்' ...என்ற புது முகங்கள் நடிக்கும் ... ஒன்றை ஸ்வேதா மூவீஸ் என்ற ... நிறுவனம் தயாரித்து வருகிறது. ...னில் குமார், பிரவீன் குமார், ரக்ஷா, ...லோபோ ஆகிய புதுமுகங்கள் இப்படத் ...ரதான பாத்திரமேற்று நடிக்கின்றனர்.

## ...ப்பு வேட்டையில் ஆஷிமா

... ஒப்புக்கு சப்பாணியாக வந்துபோன ஆஷிமா ... இன்னொரு படம் 'அலாவுதீன்'தான். அந்தப் பட... வராததால் ஊருக்கே திரும்பிப் போனார். ...தைத் தயாரிப்பாளர் தூசி தட்டியதால் திரும்பி ... நான்கு நாட்கள்தான் வேலை. ஆனால், அது ...க்கென ஒரு மனேஜரை நியமித்திருக்கும் ஆமிஷா, ... வேலையில் இறங்கியிருக்கிறார் அவ்வளவு

## ...த்துத் தாயாக சுஹாசினி

...அம்மா வேடமா கூப்பிடு ராதிகாவை... ரேவதியை' ...என்று சொல்வதுதான் பாரதிராஜாவின் வழக்கம். ...போது மகன் மனோஜை வைத்து பிரயத்தனத்தில் இயக்கிக்கொண்டிருக்கும் 'ஈரநிலம்' படத்தில் சுஹாசினியை அம்மாவாக்கினார் பாரதிராஜா. சும்மா சொல்லக்கூடாது. வழக்கமான தன்னுடைய படபடப்புடன் கிராமத்து தாய் வேடத்தில் கலக்கிக்கொண்டிருக்கிறாராம் சுஹாசினி.

## மனைவிதான் என் ட்ரீம் கேர்ள்–விக்ரம்

எனக்கு சினிமா சிநேகிதிகள்னு யாரும் கிடையாது. எப்பவும் என் ட்ரீம் கேர்ள் என் மனைவிதான். நான் 'யாரோ'வா இருக்கும்போதே என்னைக் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க. இப்போ நான் ஹீரோவானது கூட பாதி அவங்க பிரேயர்; மீதி என் உழைப்பு. என்று ஏராளமாய் மனைவி புராணம் பாடியிருக்கிறார் விக்ரம்.

## லக்கி ஸ்டாரான லைலா

"சினிமாவில் நான் நடிக்க ஆரம்பித்த புதிதில் அன்லக்கி ஸ்டார் என்றார்கள். திடீர்னு நான் லக்கி ஸ்டாராயிட்டேன். ஆடியன்ஸால் ஒரு லக்கி நடிகையை அன்லக்கி நடிகையாகவும் அன்லக்கி நடிகையை லக்கி நடிகையாகவும் எப்படி மாற்றிப் பார்க்க முடிகிறது என்று எனக்குத் தெரியவில்லை" இது லைலாவின் புலம்பல்.

## மும்தாஜின் புதிய அவதாரம்

சில்க் ஸ்மிதாவின் மறைவுக்குப் பிறகு தமிழ்ச் சினிமா உலகில் அவரது இடம் வெற்றிடமாகவே இருந்து வந்தது. விடுவார்களா நமது தயாரிப்பாளர்கள்? மும்பைக்குப் பறந்த டி. ராஜேந்தர் அங்கிருந்து மும்தாஜ் என்ற கிளியை அழைத்து வந்து 'மோனிஷா என் மோனலிஸா' படத்தில் கதாநாயகியாக அறிமுகப்படுத்தினார்.

மும்தாஜ் பின்னர் விஜய்யுடன் இணைந்து குஷியில் ஒரு பாடலுக்கு நடனமாடினார்.

கதாநாயகியைவிட கவர்ச்சி நாயகியாக தமிழில் ஒரு ரவுண்டு வருவார் என தமிழ் சினிமா உலகம் பரவசப்பட்டது. குஷியில் வரும் கட்டிப்புடி... கட்டிப்புடிடா... பாடலின் மூலம் தமிழ் சினிமா இரசிகர்களைக் கவர்ச்சியால கட்டிப்போட்டார் மும்தாஜ்.

மும்தாஜுக்கு இரசிகர்களிடம் பலத்த வரவேற்பு இருப்பதைப் புரிந்துகொண்ட இயக்குனர்கள் தமது படங்களில் மும்தாஜ் நடனம் இருக்கும் வகையில் பார்த்துக் கொண்டார்கள்.

மூன்று வருடங்களுக்குப் பிறகு, மும்தாஜ் தனது பாதையை மாற்றி, மீண்டும் நாயகியாக நடிக்க முடிவெடுத்துள்ளார்.

'தத்தித்தாவுது மனசு' என்ற படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார் மும்தாஜ். தயாரிப்பாளர் யார் என நினைக்கிறீர்கள்? மும்தாஜின் முன்னாள் மனேஜர் ரியாஸ் அகமதுதான்.

இப்படத்தில் மும்தாஜுக்கு ஆக்ஷன் வேடம். அதே சமயத்தில் கவர்ச்சிக்கும் பஞ்சமிருக்காது என்கிறார்கள்.

கட்டிப்புடி... கட்டிப்புடிடா மற்றும் மல.. மல.. பாடலுக்கு இசையமைத்த தேவா 'தத்தித்தாவுது மனசு' பாடலுக்கும் இசையமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படத்தைப் பற்றி இயக்குனர் அழகுராஜ் சுந்தரம் கூறுகையில், சென்னையில் நடைபெற்ற உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இப்படம் தயாரிக்கப்படுகிறது. வடிவேலு பொலிஸ் இன்ஸ்பெக்டராக வந்து நகைச்சுவையில் கலக்கவிருக்கிறார்.

கவர்ச்சிக்கு சோனா, சிந்தூரி மற்றும் அர்ச்சனா என மூவர் கூட்டணி இணைந்து நம் கண்களுக்கு விருந்தளிக்கிறார்கள்.

மேலும் அபிநயஸ்ரீ மற்றும் அவரது அன்னை அனுராதாவும் இப்படத்தில் நடிக்கவிருக்கின்றனர்.

மும்தாஜ் இப்படத்தைப் பற்றி கூறுகையில், கவர்ச்சி வேடத்தில், ஒரு பாடலுக்கு மட்டும் நடனமாடுவது எனக்கு போரடித்து விட்டது.

நல்ல வேடம் கிடைத்தால் நாயகியாக நடிக்கலாம் என்றிருந்தேன். ரியாஸ் அகமது நல்ல திரைக்கதையுடன் என்னைச் சந்தித்து கதாநாயகியாக நடிக்க கேட்டுக் கொண்டார். உடனே ஒப்புக் கொண்டேன். இப்படம் எனக்கு நல்லதொரு புகழைப் பெற்றுத் தரும் என நம்புகிறேன் என்றார். ஏப்ரல் மாதத்தில் இப்படத்தை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.



ஜீவா-ஷாமிலி
படம்: ஆசை ஆசையாய்

## விஸ்வரூபம் எடுக்கும் 'த்ரீரோஸஸ்' பூகம்பம்

'த்ரீரோஸஸ்' விவகாரம் பெரிதாக வெடிக்கும்போல் இருக்கிறது. தொடையழகி ரம்பா இதுவரை தன் படம் தாமதமாவதற்கு காரணம் லைலா கால்ஷீட் தரல... ஜோதிகா கால்ஷீட் தரல... தந்தாலும் ஒவரா டார்ச்சர் பண்றாங்க என்ற ரீதியில் புகார்களை அடுக்கிக் கொண்டிருந்தார்.

லேட்டஸ்ட்டாக தயாரிப்பாளர் சங்கத்தில் லைலா மீது புகார் கொடுத்திருந்தார் ரம்பாவின் அண்ணன் வாசு. லைலா அப்படியெல்லாம் செய்யுற பார்ட்டி இல்லையே என்று ஆச்சரியத்தோடு கூப்பிட்டு விசாரிக்க பொரிந்து தள்ளியிருக்கிறார் லைலா!

நான் பலமுறை காத்திருந்தும் ஷூட்டிங்க்கு கிளம்பற மாதிரி தகவல் இருக்குமே தவிர... கிளம்பவே மாட்டாங்க. இன்னிக்குக் கிளம்பலாம், நாளைக்குக் கிளம்பலாம்னு காத்துக்கிட்டிருப்பேன். ஒரு போன் பண்ணித் தகவல்கூட சொல்லமாட்டாங்க. வெட்டியா எதுக்குக் காத்திருக்கணும்னு கிளம்பிப் போயிடுவேன். அப்புறம் நான் வரலேன்னு சொன்னா என்ன அர்த்தம்.

இது மாதிரி ஒரு அனுபவம் ரம்பாவுக்கு ஏற்பட்டிருந்தால் பரவாயில்லைன்னு சும்மா இருந்திருப்பாரா. சக நடிகைங்கறதுக்காக நானும் ஜோதிகாவும் எவ்வளவோ விட்டுக் கொடுத்திருக்கோம். பல நேரங்கள்ல சொந்தக் காசைச் செலவழிச்சு ஹோட்டல் மில் கட்டியிருக்கோம்! அவங்களுக்கு மட்டும் நல்ல காஸ்ட்யூம், எங்களுக்கெல்லாம் படு கேவலமான காஸ்ட்யூம்னு! அவங்க அவமானப்படுத்தினதுக்கு அளவே கிடையாது. மொத்தத்தையும் எடுத்துவிட்டால் ரம்பா தலைகாட்டவே முடியாது. என்று ஆதங்கத்தைக் கொட்டியிருக்கிறார் லைலா.

எண்ணற்ற அழிவுகளுக்கு
நானே
மூலமாகிப் போன
வரலாற்றுத் துயர்களோடு
இன்னும்தான் வாழ்கின்றேன்.
***
புதையுண்ட
புராதன நகரங்களின்
கோட்டையைச் சுற்றிக்கிடக்கும்
எலும்புக்கூடுகள் எழுந்து வந்து
கொச்சையாய்க் கேட்கும்
கேள்விகளின் வலியோடு
இன்னும்தான் வாழ்கின்றேன்.
***
பாவப்பட்ட இந்த உடலின்மீது
எத்தனை முறைதான்
இரட்சகரும்
புனிதத் தீர்த்தத்தை
தெளித்துத் தெளித்து
சோர்ந்து போவார்.
***
லிலா எலும்பிலிருந்து தோன்றி
விலக்கப்பட்ட கனியை உண்டு
ஆதியிலேயே
தவறுகளின் தொடக்கமாகிப்போன
நெருடலோடு
இன்னும் வாழ்கின்றேன்.
***
முயங்கும் நேரங்களில்
மயங்கிச் சொருகும்
விழிகளாடும் ஒரு
வஞ்சம் பிறக்கும்.
அழிந்து பிறக்கும் உலகத்திலே
எல்லாம்
மறுதலையாய் மாறவேண்டுமென்று,
அழிவுகளுக்கு ஆதாமே
மூலமாகிப் போகும் களிப்பினிலே
கைகொட்டிச் சிரித்து
கணக்கை சமன் செய்து கொள்வேன்.

யு.சகானா–அக்கரைப்பற்று.

## வறுமையே கொடுமை

காய்ந்து கறுத்துப்போன
பருத்த உதடுகள்
அந்த பிஞ்சுக் கன்னத்தில்
ஒத்தடமாய்
மொய்த்துப் போன பின்னும்
அடங்கிப் போகாத அழுகை,
***
கடவுளுக்குப் பால்வார்க்கும்
கண்ணிய மகான்களின்
கருணைக் கரங்கள்
நீட்டப்படாததால்
பாலுக்கு அழும்
பரிதாபக் கொடுமை.
***
கோயில் உண்டியலில்
கொட்டிப் போடும் வள்ளல்கள்
விட்டெறிந்த ஐம்பது சதத்து
இனிப்பு உருண்டை
குழந்தையின் இதழ்களில்
உருண்டு புரண்டு
கொஞ்சிப் போனபின்னும்
பசி அடங்காத் துடிப்பு.
***
பிஞ்சுக் கண்கள்
கெஞ்சிப் பார்க்கும்
சின்ன வயிற்றின்
பெரிய தவிப்புகளை
அறிந்து கொள்ள முடியாது
காற்றுப் போன பலூனாய்
கவனிப்பின்றிக் கிடக்கும்.
தாய்மையின்
அமுத ஊற்றுக்கள்.
***
கண்ணீரும் உமிழ்நீரும்
கலந்து போகும்
கன்னத்துச் சாரலை
அழுக்கு முந்தானையின்
கிழிந்த பாகங்கள்
அடிக்கடி உரசிப்போக,
தாயவள்
கருணைக் கண்களின்
ஏக்கக் கண்ணீர்
மார்பாற்றைத் தாண்டியும்
ஓடிக் கொண்டிருந்தது.
அந்த பஸ்ஸும்
ஓடிக் கொண்டிருந்தது.
***
இத்தனைக்கும் இடையே
பசியை அறியாத
பகட்டு நெஞ்சங்களும்
தொந்திகளை
தொண்டைவரை நிரப்பிவிட்டு
குறட்டைவிட்டுத் தூங்கும்
ஜவான்களும்
பாலகனின் அழுகைக்காய்
பரிகசிக்கும் ஏச்சு.
சின்னச் சின்னதாய்
கொண்டக்டரின் புறுபுறுப்பு.
***
தன்மானம் காக்க
தாயவளின்
எத்தனை எத்தனையோ
ஆருமில்லா ஆராரோக்கள்
பசி அடங்காக் குழந்தையை
அடிக்கிறாள்.
அடித்தபின்
கண்ணீர் வடிக்கிறாள்.

நாஸீர்.எம்.இர்ஷாத்–
தி/தோப்பூர்–03.

## அம்மா!

அவள் துகிலில்
தொட்டில் கட்டி
நான் துயில தாலாட்டுப்
பாடினாள்...
என் தலை கோதினாள்...
***
தன் உதிரம் பாலாக்கினாள்
பரிவோடு
பாசத்தையும் சேர்த்து
எனக்கு ஊட்டினாள்...
***
நான் பசியாற அவள்
பசியோடு
காத்து நின்றாள்
அப்போதும் புன்னகை
பூத்து நின்றாள்...
***
தோல்விகள் என் மனதைத்
துளைத்த போதெல்லாம்
என்னை நிமிர்த்தியது
அவள் தான்...
"தோல்விகள் வெற்றியின்
படிகள்" உணர்த்தியதும்
அவள்தான்...
***
அம்மா!
உயிர் தந்தவளுக்காக
நான் வரையும்
முதல் கவிதை இது...
***
கருவில் நான் வளர
இடம் தந்தவளுக்காக
நான் வழங்கும்
நன்றியுரை இது...
***
ஈரைந்து மாதங்கள்
தன்னலம் மறந்து என்னைச்
சுமந்தவள்...
அவளைப் புகழ்ந்து
பாடுகின்றேன்...
அவள் பாசத்திற்கு நான்
தலை வணங்குகின்றேன்....

எம்.என்.ஆர். ஹஸன்–
டோகா– கட்டார்.

## கனவுகளின் கீறல்!

விடியலின் விளிம்பில்
விந்தை பல சேர்த்து
வியக்க வைத்து
கிழிந்து செல்லும் கனவுகள்
எந்தன் நினைவில் நில்லாது
கரை சேரா ஓடம் போல...!
***
கனவுகளின் சங்கமிப்பில்
கனவுத் தேவதையாக
கண்களை வருடி விட்டு
மெல்லிடையசைய
மேலாடை பொங்கி
கண்ணில் கலைந்து
கனவு கிள்ளிச் செல்லுதே...!
***
கருக் கொண்டவள் சிதைவுற்று
விழியசைவில் பிரசவித்தாள்
கண்மணி துயர் கொண்டு
தூக்க மின்றி துடிதுடிக்க
சிந்தையின்றி துயில்பவள்
சில தூரம் சிறகடித்தாள்!

என்.பிறேமசீலன்–
கோண்டாவில், வடக்கு.

## விழிப்புறு!


விழி!
விழித்தெழு...
***
இருண்டு கிடப்பது
இதிகாசமல்ல–நம்
சமூகம்!
***
தட்டு!
தோள்களில் படிந்திருக்கும்
தூசுகளையல்ல,
தூங்கிக் கொண்டிருக்கும்
சகாக்களை!
***
எழு!
ஏழ்மை ராணி...
***
நன்றாக(த்)
தலைக்குளி!
தலைவர்களைக் கண்டால்
அரிப்பெடுக்காதிருக்க!
***
கூட்டம் சேர்!
தலைவனுக்கு(க்)
கோஷம் போடவல்ல,
***
தலைகால் புரியாது
வெளிவேஷம் போடும்
தலைமைகளையெல்லாம்
தலைக்கவிழ்க்க!
***
நீயும் தீக்கொளுத்து
நின் தீய குணங்களுக்கு!
***
குண்டு வை!
குறுக்கு வழிகளை மட்டும்
இனங்கண்டு!
***
படி!
புத்தகங்களை மட்டுமின்றி
மனிதர்களையும் சேர்த்து!
***
வாழ்க்கை
வாழ்வதற்குத்தான்
வாழ்ந்து–பின்
வல்லவனாய், நல்லவனாய்
மடிவதற்கும் தான்!
***
சிரி!
எவரையும்
ஏளனம் செய்யவல்ல,
சிநேகம் கொள்ள!
***
ஆணவமகற்று!
அறிவுசார்
நிகழ்வுகளைக் கொறி!
***
தறி!
தன்மானம் தறி
இன்னும்
தகைமைகள் தறி!
***
இறுதியாய்–
மனிதனாய் மரி!

துரைராஜ் பிரபாஹர்–
ஹப்புத்தளையூர்.

## பேனா நண்பர்கள்



பெயர்:
கே.எம். சிவகுமார்
வயது: --
முகவரி:
P.O.BOX- 665
AL HAFUF:- 31982
AL HASSA, K.S.A.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
மு.அ.மு. உவைஸ்
வயது: 25
முகவரி:
139/சி, நூறானியா
பள்ளி தெற்கு வீதி,
அக்கரைப்பற்று.01
பொழுது போக்கு:
ரி.வி., பேனா நட்பு.



பெயர்: எஸ்.எச். நாஸர்
வயது: 27
முகவரி:
165/1பீ, மாதவன் வீதி,
கல்முனை-03.
பொழுது போக்கு:
பத்திரிகை,
வானொலி, கவிதை.

## வரன் பார்க்க வருவோமடா...!

அதோ!
இறைவன்
இறங்கி வருகிறான்
மண்ணில்
***
முதிர் கன்னியரின்
முகாரி ராகம் அவன் காதில்
இசைத்தட்டாய் சுழல்வதால்
பொறுக்க முடியவில்லைப்போலும்
அவனால்...!
***
பாவையரைப் பிரித்து
ஆடவரைப் பெருக்கிவிட்டேன்.
பூவையரே!
பாரில் நீவீர் இனி
பாஞ்சாலிகளே...!
***
ஆண்டவன் அருளிவிட்டார்
அதிர்ஸ்டலாபச் சீட்டை
அரிவையர்க்கு!
***
பட்டுவேட்டி கட்டி
பதவிசாய் உட்கார்ந்து
கட்டுக்கட்டாய் நோட்டும்
கன்னியையும் சேர்த்து
முத்துக் குளித்த
முந்திய காலம்
***
போச்சுடா மவனே...
கோவணம் கட்டி
குனிந்து நிமிர்ந்து
பணப் பட்டி பெருக்கு
பட்டுச் சேலை கட்டி
பணப்
பெட்டி தட்டிப் பார்த்து
பெண்கள் நாங்கள் வருவோமடா
வரன் பார்க்க...!
***
என்ன இது
புதுக்கதை?
இதயத்தில்
இரயில் ஓடுகிறதா
மாப்பிள்ளைமாரே?
***
கருவிலேயே
பரிசோதித்து
பெண் சிசுக்களை அழித்தால்...
நாளை இது நடக்காதா?
நிச்சயம் நடக்கும்!

பொ.விஜயா–
சம்பூர்.

## தேன் கிண்ணம்

## தேடிப் பெற்றவை

## பிரபலம் என்ற உந்து சக்தி!

எழுத்துக்கு அப்பாற்பட்ட சொந்த விஷயங்களில் ஒரு எழுத்தாளன் வேறு விதமாக இருக்கலாம். மோசமான குடிமகனாகக் கூட இருக்கலாம். நான் சந்தித்த எழுத்தாளர்கள் பலர் அடிக்கடி கண்ணாடி பார்த்துக் கொண்டு தன்னைப் பற்றியே பேசிக்கொண்டு இருக்கிறார்கள். ஒருவர் ராத்திரி பன்னிரண்டு மணிக்குத் தன் கதையை–இரைந்து என்னைப் படிக்கச் சொல்லிக் கண்களில் நீர்வரக் கேட்டுக்கொண்டிருந்தார். சில எழுத்தாளர்கள் வேளாவேளைக்குக் குளிக்காதவர்களாக, போகக்காரர்களாக, மோசமான கணவர்களாக, கல்நெஞ்சக்காரர்களாக, ஏமாற்றுவித்தைக்காரர்களாக இருக்கிறார்கள். மற்றவர் எழுத்தை மதிக்காதவர்கள், குழந்தைகளைச் செவிட்டில் அறைபவர்கள், சோரம் போகிறவர்கள் இப்படிப் பல பேர். இவர்களையெல்லாம் பேட்டி கண்டு அவர்களிடமிருந்து தேங்காய் விலையிலிருந்து திருக்குறள் வரை அபிப்பிராயம் கேட்பதின் மனோதத்துவம் என்ன?

திருக்குறள் மலிவுப்பதிப்புக்கு அப்புறம் அதிகமாகப் "பிரபலமானவர் விலாசங்கள்" விலைபோவதற்கும், எனக்கு வரும் ஆறு கடிதங்களில் நான்கு என் புகைப்படத்தையும் கையெழுத்தையும் கேட்பதற்கும் காரணம் என்ன? காரணத்தில் இலேசான சோகம் இருக்கிறது. பிரபலம் என்பதே எல்லாரும் விரும்புவது. இதில் ஏதும் தப்பில்லைத்தான். இது ஒரு விதமான உந்துசக்தி. ஆழமாக யோசித்தால் ஏதாவது ஒரு விதத்தில் நான் தனிப்பட்டவன், மற்றவர்களிடமிருந்து வேறுப்பட்டவன் என்று நிரூபிக்க மரணத்தை வெல்லும் ஆசைதான் பிரபலம். நான் ஒரு மனித எறும்பல்ல, கொஞ்சம் வித்தியாசப்பட்டவன் என்று ஏதாவது ஒரு விதத்தில் காட்ட விரும்புகிறோம். அதற்காகத்தான் ஒருவன் பின்பக்கமாக முந்நூறு மைல் நடக்கிறான்: கவிதை எழுதுகிறான்; கென்னடியைக் கொல்கிறான். ஒருத்தி இருபத்து நான்கு மணி நேரம் குச்சுப்புடி ஆடுகிறாள் அல்லது பாம்புடன் வாழ்கிறாள். கொஞ்சம் நிதானமாக யோசித்தால் மனித வாழ்வின் அத்தனை உன்னத இயக்கங்களிலும் 'நான் சற்று நேரமாவது' தனிப்பட்டவன் என்று காட்ட விருப்பம். இருப்பதை உணரலாம். இந்த ஆசையில் திளைப்பதுதான் பிரபலமானவர்களைப் பற்றி அறிந்துகொள்ளும் விருப்பமும். இவனும் என்னைப் போல் ஒருவன்தான்; ஏதோ ஒரு அதிருஷ்டத்தால், தற்செயலாக இவன் மேல் வெளிச்சம் பட்டிருக்கிறது. எனக்கும் இம் மாதிரி அமைந்தால் நானும்... இத்தியாதி நிறைவேறாத ஆசைகளுக்கு ஒரு விதமான தார்மீகம் ஏற்படுத்தும் முயற்சிகள். இப்படி இல்லையெனில் என்போன்ற எழுத்தாளர்களைப் பேட்டி காண வருவதற்கு வேறு நியாயமில்லை.

**(விவாதங்கள், விமர்சனங்கள் என்று நாலுக்கு எழுத்தாளர் சுஜாதா எழுதிய முன்னுரையிலிருந்து.)**

## சிறப்புக் கவிதை

**கவிதை நெஞ்சங்களுக்கு!**

தந்தையின் மரணத்தை விரும்பாதவர் யார்?" என்று றொஸ்ரோயெவ்ஸ்கியின் நாவல் ஒன்றில் கேட்கப்படுகிறது. குடும்பத்தினதும், குலத்தினதும் தலைமைப் பொறுப்பைத் தன் பெயரின் கீழ் எடுத்துக்கொள்வதற்குத் தடையாகத் தந்தை இருந்துகொண்டிருக்கிறார் என்பது இதன் அடியாழத்தில் வெளிப்படும் மறைவிருப்பம் என்பதாகப் பல உளவியல் காரணங்களையும் தேடிச் சொல்லலாம்.

எப்படியிருந்தாலும், தந்தை மகனுக்கிடையேயான விலகல் என்பது தலைமுறை இடைவெளி காரணமாகவோ, சிந்தனை மாற்றம் காரணமாகவோ, மரபுக்கும் புதுமைக்குமான முரண்நிலையாகவோ பல சந்தர்ப்பங்களிலும் வெளிப்பட்டே தீருகிறது. அவ்வாறான வெளிப்பாடுகளைத் தந்திருக்கும் நான்கு கவிஞர்களின் கவிதைகள் இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக....

அப்பா
உன்னுடைய மனிதமுகம் கழன்று
கழுதைப் புலியாகி
நெடுநாட்களாயிற்று
எனக்கு மூலம் நீதான்
எனினும்
பறவைகள் ஒருபோதும்
முட்டைக்குத் திரும்புவதில்லை.
என் சிறகுகளை அறுக்க
வாளோங்கியவன் நீ
நான்
வாள்முனையில் காலுதைத்துப்
பறக்கத் தொடங்கியவன்.
என் சங்கீதத்தின் ஊற்றை
அடைத்தவன் நீ
எனினும்
இரத்தத் துடிப்புகளுக்கு
இடையில் அது எதிரொலிக்கிறது.
உன் போதையும
புறக்கணிப்பும்
பொறுப்பின்மையும்
நிராதரவாய் உன்னைக்
கொல்லலாம் ஒருநாள்.
நான்
வெறும் வழிப்போக்கனாய்
போகலாம்.
எனக்கு உன்னிடம்
பகையில்லை
அன்பைப் போலவே.

**சுகுமாரன்**

அப்பாவைப் போலத்தான்
எல்லோருமே
என்னை நடத்துகிறார்கள்.
ஏரோப்ளேன் பொம்மை
கேட்டால்
உடைந்து விடுமென்று
குச்சிமிட்டாய் தருவார்.
மேலே படிக்கணும் என்றால்
படிச்சவன் பாட்டைக்
கெடுத்தானென்று
சமாதானப்படுத்தி
சைக்கிள் கடை வைத்துத் தருவார்.
எப்படியும்
இன்றுவரை
கேட்டது கிடைக்காமல்
கிடைத்தது பிடிக்காமல்
வாழப் பழகிக் கொள்ள
வாய்த்திருக்கிறது
மனசு.

**வித்யாஷங்கர்**

"வாங்கன்னு என்னடா
மரியாத வேண்டிக் கெடக்கு
அந்த சாதிகெட்ட நாய்க்கு?
செபாஸ்டியனாம் செபாஸ்டி...
செவுடன்னு கூப்புடு."
***
"அப்பா உங்க அப்பா
வயசிருக்குமேப்பா அவருக்கு?"
***
"திமிரு புடிச்ச கழுதே
மெத்தப் படிச்சவன் மாதிரிப்
பேசினே...
மென்னியத் திருவிப்புடுவேன்.
அவனுங்கள எங்க வெக்கணுமோ
அங்கதான்டா வெக்கணும்
இப்பப் புரியாது போ."
***
விழுந்த அறையை விட
ஆழமாய்ச் சுட்டது காரணம்.
***
ஆதிக்கப் பார்த்தீனியம் எனக்குள்
வேர்விடா வகையில் பண்பட்டுப்
போனது
என் பத்தாவது வயது.
***
இருபத்தொன்பதில்
வலி மறைந்துவிட்டாலும்
வடு வலிக்கிறது
யுகங்களின் ரணமாய்.

**நாசர்**

அப்பாவை
வெறுத்து வந்திருக்கிறேன் நான்
குடும்பத்தை
கவனியாமல் இருந்தவர்
விலைமகளுக்கு
விற்றுப் போட்டவர்
வசை
சொல்லியிருக்கிறேன்.
சண்டை போட்டு
வீட்டை விட்டு ஓடிப்போயிருக்கிறேன்.
ஆனால் யோசிக்கும் வேளையில்...
எல்லாவிதத்தலும்
அப்பாவைப் போலத்தான் நானும்.
விவரம் தெரிந்த பிறகு என்னை
வெறுக்கலாம் என் பிள்ளைகளும்
நிச்சயம் என்னால்
தாங்கிக்கொள்ள முடியாது அப்போது.

**விக்ரமாதித்யன்**

# வீட்டு வைத்தியம்

☛ கொட்டைப்பாக்கும், கொழுந்து வெத்தலையும் போட்டா வாய் மணக்கிறது தெரியும். வெற்றிலையைப் பற்றித் தெரியாதது இன்னும் இருக்குங்க...

குழந்தைகளுக்கு சளித் தொல்லையா? கொழுந்து வெத்திலையை நல்லெண்ணெயில் விளக்கில் வாட்டி சாறு பிழிந்து, கொடுத்தால் சளி குறையும்.

வெற்றிலைச் சாறு, வேப்பிலைச் சாறு இரண்டையும் சம அளவு எடுத்து குழந்தைக்குப் புகட்ட குழந்தையின் கக்குவான் இருமல் உடனே நிற்கும்.

ஐந்து பெரிய வெற்றிலை, ஐந்து வேப்பிலை, கற்பூர வில்லை ஒன்று, மூன்றையும் ஒற்றைத் தலைவலிக்கு பற்று போல் தலையில் போட்டால் நாளடைவில் ஒற்றைத் தலை வலி குணமாகும்.

வெற்றிலையை நல்லெண்ணெய் விளக்கில் வாட்டினால் துவளும். அந்த இளம் சூட்டுடன் அடிப்பட்ட வீக்கத்தின் மீது போட்டால் வீக்கம் வடியும்.

வெற்றிலை, கிராம்பு இரண்டையும் தண்ணீர்விட்டு அரைத்து மருதாணி போல அரைத்து, அதில் பத்து சொட்டு யுகலிப்டஸ் ஆயில் விட்டு வெயிலில் காய வைக்கவும். காய்ந்த வில்லைகளைச் சுத்தமான தேங்காய் எண்ணெயில் போட்டு வைத்து அந்த தேங்காய் எண்ணெயைத் தலைக்கு தடவி வந்தால் பொடுகு அண்டாது. முடியும் உதிராது.

ஆஸ்துமா, ஈஓனோபிலீயா, இழுப்பு, மூச்சிரைப்பு நோயாளிகள் வெற்றிலையை அடிக்கடி மென்று சாறை விழுங்கினால் இவற்றின் பாதிப்புகள் மட்டுப்படும்.

☛ தேனம்மா... தேனம்மா... வீட்டு மருந்தாகும் தேனம்மா... இஞ்சியை சாறு எடுத்துத் தெளிய வைக்க வேண்டும். அந்தத் தெளிந்த சாறில் 30 மி.லி எடுத்து அதனுடன் ஒரு கிராம் லவங்கப் பட்டையையும், ஒரு கிராம் திப்பிலி பொடி, தேன் சேர்த்து அருந்தினால் தீராத விக்கல் நோய் நீங்கும்.

ஆலமரப் பாலை ஒரு தேக்கரண்டி எடுத்து அதனுடன் ஒரு தேக்கரண்டி தேனைக் கலந்து அருந்தினால் வயிற்றுப் புண் குணமாகும்.

ஒரு தேக்கரண்டி தேனை நீரில் கலந்து தொடர்ந்து சில நாட்கள் அருந்த.. வயிற்று எரிச்சல், வயிறு இரைச்சல் குணமாகி விடும்.

சிலந்தி கட்டிகள் மீது தேனும் சுண்ணாம்பும் கலந்து பூசினால் கட்டி பழுத்து உடையும், உடைந்த பின்னர் புண் மீது தேனைத் தடவினால் விரைவில் புண் ஆறும்.

முருங்கைப் பூக்களைப் பாலில் வேக வைத்து, சிறிது தேன் கலந்து அருந்தினால் நரம்புகள் வலிமை பெறும், தாது பலம் பெருகும். தாம்பத்திய சுகக் கோளாறு நீங்கும்.


கடுமையான சிறுநீர் கடுப்பிற்கு அதிமதுரத் தூளைத் தேனில் கலந்து சாப்பிடலாம். குண்டாக இருப்பவர்கள் இளைக்க குளிர்ந்த நீரில் தேன் கலந்து சாப்பிட வேண்டும். ஒல்லியாக இருப்பவர்கள் சதை பிடிக்க சுடுநீரில் தேன் கலந்து சாப்பிடலாம்.

# நடுத்தர வயதுப் பெண்களுக்கு

**ந**டுத்தர வயது என்பது பல பெண்களைப் பொறுத்தவரை ஒரு சாபம். அத்துடன் வாழ்க்கையே முடிந்துவிட்டதாக நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால் நடுத்தர வயது என்பது உடலளவிலும், மனதளவிலும் பக்குவப்பட்ட காலகட்டம். இதன் பிறகு தொடங்கப்போகிறது வித்தியாசமான வாழ்க்கை என்பதை அவர்கள் உணர வேண்டும்.

* பெண்களுக்கு இயல்பிலேயே நடுத்தர வயதில் மெனோபாஸ், இரத்த அழுத்தம், இதய நோய், கருப்பை வியாதிகள், சருமப் பிரச்சனை என ஏகப்பட்ட பிரச்சனைகள் வருகின்றன. வயசாகி விட்டாலே இப்படித்தான் என அலட்சியமாகவிடாமல் சரியான மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

உடல் எடை திடீரெனக் கூடுவதும், குறைவதும் நடுத்தர வயதுப் பெண்களுக்கு சகஜமாக ஏற்படும். அந்தந்த வயதுக்கேற்ப உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொள்வதன் மூலம் மேற்சொன்ன பிரச்சனையைச் சரியாக்கலாம். நடுத்தர வயதுக்காரர்கள் அரிசி உணவைக் குறைத்து, கோதுமையால் செய்யப்படும் உணவுகளை அதிகம் சேர்த்துக் கொள்ளலாம். வாரம் இரு முறை கேழ்வரகு உணவுகளைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் சர்க்கரை வியாதியைத் தவிர்க்கலாம்.



* நடுத்தர வயதுப் பெண்களுக்குத் தினம் நடைப் பயிற்சி அவசியம். வேகமாக நடக்க முடியாவிட்டாலும் மெதுவாக தினம் சிறிது தூரம் நடக்கலாம்.

இந்த வயதில்தான் பெண்களுக்கு மெனோபாஸ் ஏற்படுகிறது. அதனால் பல பெண்களுக்கு முகத்தில் கருந்திட்டுகள், புள்ளிகள், ரோம வளர்ச்சி போன்றவை தென்படலாம். அழகு மற்றும் மருத்துவ சிகிச்சை இவற்றுக்குப் பலன் தரும்.

* நடுத்தர வயதைத் தொடும் பெண்களுக்கு டபுள் சின் எனப்படும் தாடைச் சதை அதிகம் வரும். பியூட்டி பார்லர் சென்று இவற்றுக்கென முறையான ஃபேஷியல்கள் மற்றும் மசாஜ் செய்து கொண்டால் அவற்றைக் குறைத்து அழகாகலாம்.

* தினம் காலையில் எழுந்ததும் சிறிதளவு தேங்காய் எண்ணெயை அல்லது வைட்டமின் எண்ணெயை எடுத்து முகம், கழுத்து மற்றும் கை, கால்களில் சுருக்கங்களின் மேல் தடவி, ஊறிக் குளித்து வரலாம். வயதாவதன் அறிகுறிகளையும், சருமம் வறண்டு போவதையும் தவிர்க்க இது உதவும்...

# சுகமா தோழி

**பி**த்தப் பையில் கற்கள் இன்று பல பெண்களுக்கு வருகின்ற பிரச்சனை. இந்தப் பித்தப்பை கற்களைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கு முன்பு-பித்தப் பையைப் பற்றித் தெரிந்துகொள்வது நல்லது. பித்தப்பையானது கல்லீரலில் இருந்து உற்பத்தியாகும் பித்தநீர் என்ற ஜீரண நீரை இரு வேளை உணவுக்கு இடையே சேமித்து வைக்க உதவுகிறது.

பித்தப் பை கற்கள் என்பது சிறு கற்கள் போன்ற ஒரு படிமானப் பொருள்.

உட்கொள்ளும் உணவில் கொழுப்புச் சத்து அதிகமாக இருப்பது, உடல் பருமனாக உள்ளவர்கள் திடீரென்று உடல் இளைப்பது, கருத்தடை மாத்திரை அதிகம் உபயோகிப்பது போன்ற காரணங்களால் பித்தப் பையில் கற்கள் வரலாம். பெண்கள்தான் இதனால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

இரத்தத்தில் உள்ள சிவப்பணுக்கள் விரைவாக உடைவதாலும் பித்த நீர்ப்பையில் பாக்டீரியா அல்லது குடல் புழுக்கள் சேர்வதாலும்கூட இக் கற்கள் உண்டாகலாம்.

## அறிகுறிகள் என்ன?

பித்தப்பை கற்களால் வரும் முதல் தொல்லை வாயுத் தொல்லை. சாப்பிட்ட பிறகு வயிற்றின் மேல் பாகத்தில் வலது புறம் வலி உண்டாதல், மஞ்சள் காமாலை, கடினமான வயிற்றுவலி ஆகிய அறிகுறிகள் ஆகும்.

பித்தக் கற்களை அல்ட்ரா சவுண்டு சோதனை மூலம் எளிதாகக் கண்டறிய முடியும். நூறில் ஒரு சிலருக்கு மட்டுமே சி.டி.ஸ்கேன், எம்.ஆர்.ஐ ஸ்கேன் தேவைப்படும்.

பித்தப் பை கற்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வது நல்லது. அவ்வாறு செய்யாவிட்டால் பித்தப்பை கல் பித்த நாளத்தில் விழுந்து அடைத்துக் கொள்ளும். இதனால் மஞ்சள் காமாலை உண்டாகவும் வாய்ப்பு உள்ளது. இன்னும் சிலருக்கு பான்கிரியாட்டிஸ் என்ற கணைய அழற்சி உண்டாகலாம்.



இது உண்டாகும்போது நோயாளிக்கு மிகக் கடுமையான வலி உண்டாவதுடன் சிறுநீரகம், நுரையீரல் போன்ற உறுப்புகள் பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. வேறு சிலருக்கு நாட்பட்ட கற்களால் பித்தப் பையில் புற்றுநோய்க் கட்டிகள்கூட உருவாகலாம். அலட்சியம் செய்யாமல் பித்தப்பை கற்களைக் களைய முனைய வேண்டும். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் சர்க்கரைநோய் உள்ளவர்கள் உடனடியாக சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் அவர்களுக்குப் பித்தப்பை விரைவில் அழுகிவிட வாய்ப்பு உள்ளது.

பித்தப்பை கற்களுக்கு மருந்துகளால் குறைவான பலனே கிடைக்கும். மாத்திரை சாப்பிடுவதை நிறுத்திவிட்டால் கற்கள் உடனே திரும்பவும் உற்பத்தியாகிவிடும். இந்த மாத்திரைகளின் விலையும் அதிகம்.

பித்தக் கற்களினால் ஏற்படுகின்ற மஞ்சள் காமாலை சாதாரண நிலையில் இருந்தால் அதனை மருந்து மூலிகையினால் சரி செய்யலாம்.

தீவிர பித்த நாள அடைப்புக்குக் காரணமான பித்தநாள கற்களுக்கு எண்டாஸ் கோப்பி முறையோ (அ) அறுவைச் சிகிச்சையோ தேவைப்படும்.

இன்றைய நாளில் பித்தப் பை கற்களை அகற்ற வயிற்றைக் கிழிக்காமல் மிகச் சிறிய ஊசி போன்ற துவாரங்கள் மூலம் துல்லியமான காமிரா ஆகியவற்றை உபயோகித்துச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதனால் ஒரு சொட்டு இரத்தம் கூட வீணாவதில்லை.

பித்தப்பை கற்களுக்கு பித்தப் பையையும் அகற்ற வேண்டியது அவசியம். ஏனெனில் பித்தப்பை சுருங்கி விரியாமல் கெட்டுப் போவதால்தான் இவ்வாறு கற்கள் உற்பத்தியாகின்றன. பழுதடைந்த பித்தப்பை உள்ளே இருப்பதால் உடல் நலத்துக்குக் கேடுகள்தான் விளையுமே அன்றி பயன் ஏதுமில்லை. எப்படி அப்பெண்டிகஸ் என்ற குடல்வாலை அகற்றுவதால் ஒருவருக்குப் பாதிப்பு ஏற்படுவதில்லையோ அது போல பித்தப் பையை எடுப்பதாலும் எந்தப் பாதிப்பும் இல்லை.

செல்வாஸின் 7
சல்வார் பரிசுப் போட்டி
நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்
SELVAS
No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328
மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் Bk
பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்:..........................
உண்மை–நேர்மை–வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 15- 03-2003
அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
கிண்ணியா வாசகிக்கு அதிஷ்டம்!
இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்
ஏ. பர்ஸானா,
38/3, குலாம் ரசூல் ஒழுங்கை, கிண்ணியா-05.
பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# எண்ணமிடல் மட்டுமே விளைவாகாது

வெவ்வேறு காலங்களில் வாழ்ந்து சென்ற ஆன்மீகப் பெருமக்களிடமும் இருந்து வந்த ஒரு வார்த்தை "சும்மாயிரு" என்பதாகும். அதாவது, "துன்பந்தரும் விகார எண்ணங்களில் இருந்து விடுபட்டுச் சுதந்திரமாக இருக்கப் பழகிக்கொள்" என்பது அதன் விளக்கம்.

இந்த வகை ஆன்மீக அறிவுரைகள் காலப்போக்கில் மருவி, "எண்ணியது கிடைக்கும், நீ பெற வேண்டியதை எண்ணினால் மட்டும் போதும்" என நம் மக்களுக்குக் கற்பிக்க முனையும் போலி ஆன்மீகவாதிகளின் தவறான வழிகாட்டல்களால், கைவரப் பெறாத ஒன்றைப் பற்றி வெற்று நம்பிக்கையுடன் வாழாவிருக்கும் மக்கள் கூட்டத்தையும் நாம் வாழும் சூழலில் கண்டு வந்திருக்கிறோம்.

இதுவும் ஒரு வித்தியாசமான அணியினைச் சந்திக்கும் அநுபவம்.

அமெரிக்காவில் இன்னமும் ஒரு கிறிஸ்துவப் பிரிவு உள்ளது. அரை நூற்றாண்டுகளுக்கு முன்னர், அதில் மிகப் பெரும்பாலோர் நம்பிக்கை கொண்டிருந்ததால் அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இந்தப் பிரிவுக்கு 'கிறிஸ்துவ அறிவியல்' என்று பெயர். எண்ணமிட்டால் மட்டும் போதுமானது. நீங்கள் எதுவும் செய்ய வேண்டாம் என்பதே இந்த அறிவித்தலின் பிரதான கோஷம்.

இந்தப் பிரிவினரைப் பெரும்பான்மையாகக் கொண்டவர்கள் வாழும் சமூகத்தில் நடந்த சம்பவம் இது.

வழமையாகத் தமது ஞாயிற்றுக்கிழமைக் கூட்டங்களுக்கு செல்லும் மூதாட்டி ஒருத்தி, பல வாரங்களாகக் கூட்டத்துக்குச் சமூகமளிக்காதிருந்த வயோதிபர் ஒருவரைப் பற்றி வழியில் அவரது மகனிடம் விசாரித்துக் கொண்டிருந்தாள்.

"உனது தந்தைக்கு என்னவாயிற்று? எங்கள் ஞாயிற்றுக்கிழமைக் கூட்டங்களுக்கு அவர் இப்போது வருவதில்லையே"!

"அவருக்கு உடல் நலம் சரியில்லை"

பெண்மணி சிரித்தாள். "என்ன அபத்தம். அவர் தனக்கு உடல்நிலை சரியில்லை என்று எண்ணிக் கொண்டிருக்க வேண்டும். எண்ணமிடுவது மட்டுமே காரணமாகிறது. அந்தக் கிழவனிடம் சொல். 'உனது வாழ்நாள் முழுவதும் நீ கிறிஸ்துவ அறிவியலின் அங்கத்தினராக இருந்து வந்திருக்கிறாய். இந்தச் சாதாரண விஷயத்தைப் புரிந்து கொள்ளவில்லையே! உனக்கு உடல் நலம் சரியில்லை என்று எண்ணுவதை நிறுத்து. நீ சுகமாகி விடுவாய்.'"

"நீங்கள் சொன்னதைப் போய் அவரிடம் சொல்கிறேன்" என்றான் பையன்.

ஒரு வாரம் கழித்து அவள் மீண்டும் அந்தப் பையனைச் சந்தித்தாள்.

"என்னவாயிற்று? இந்த வாரம்கூட அவர் கிறிஸ்துவ அறிவியல் ஞாயிற்றுக்கிழமைக் கூட்டத்துக்கு வரவில்லையே!"

பையன் சொன்னான். "மேடம்! இப்போது அவர்தான் இறந்து விட்டதாக எண்ணுகிறார். அவர் மட்டுமல்ல, அக்கம் பக்கத்தினர் அனைவருமே அவர் இறந்துவிட்டதாக எண்ணுகிறார்கள். எனவே அவர்கள் அவரைப் புதைத்து விட்டனர். நான் அயலவர்களிடம் "பொறுங்கள் அவர் ஒருவேளை எண்ணமிட்டுக் கொண்டிருக்கலாம்" என்று, எவ்வளவோ எடுத்துச் சொல்ல முயன்றேன். ஆனால், அவர்கள் என்னைப் பைத்தியக்காரன் என்று நினைக்கிறார்கள்."

## இலக்கிய நயம்

## தருவது முழடில்யன்

# உன் மெல்லுடலும் மென்மொழியும் என் உணர்வைக் கிள்ளிவிட....

துறையின் கீழ்ப் படி ஒன்றில் கால்களை நீருக்குள் நனையவிட்டு அமர்ந்திருந்தான் அங்கையன். அவனுக்கு இரண்டு படிகள் மேலே செளமிகா அமர்ந்திருந்தாள். மெல்ல வீசிய காற்று நீரினுள் வட்ட வட்டமாகக் கோலம் போடுவதைப் பார்த்தவாறு இருவரும் வெகு நேரம் இருந்தனர். செளமிகா மெல்ல மௌனத்தைக் கலைத்தாள்.

"என்னவோ பேச வேண்டும் என்று வரச் சொல்லியிருந்தீர்கள்..." என்று இழுத்து நிறுத்தினாள்.

அங்கையன் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

முழங்கைகளை முழங்கால்களில் ஊன்றியவாறு குனிந்து அமர்ந்திருந்த அவளது பக்கவாட்டுத் தோற்றம் தெரிந்தது. கைதேர்ந்த ஒரு சிற்பியினால் உருவாக்கப்பட்ட சிலையை நினைவுபடுத்தினாள். அவள் முதுகு குனிந்திருந்ததால் மேல் சீலை பக்கவாட்டில் இடைவெளி கொடுத்துச் சரிந்திருந்தது. அங்கே கிடைத்த காட்சியால் நிலைகுலைந்த அங்கையன், அவசரமாகப் பார்வையை மீண்டும் நீர்நிலைக்குத் திருப்பிக்கொண்டு, "ம்... என்ன அவசரம்?" என்றான்.

"உங்களுக்கென்ன? இருப்பீர்கள். நான்தான் போய்ப் பேச்சு வாங்க வேணும்..."

அவளது மென்மையான சிணுங்கல் அவனுக்குள் இனந்தெரியாத பரவசத்தை நிறைத்தது. மீண்டும் அவளைப் பார்த்தான்.

புஷ்பச் சூவியலாரத் தோன்றிய அவள் மென்னுடலைக் கடித்துக் குதறிவிட வேண்டுமென்று வெறி எழுந்தது. மிகுந்த முயற்சியோடு தன்னை அடக்கிக்கொண்டு, "ம்.. போகலாம்" என்றான்.

"சரி, நான் போகிறேன்" என்று செளமிகா எழுந்தாள். பதற்றமடைந்த அங்கையன் அவள் கையைப் பற்றி இழுத்தான். மேல் படியில் நின்றிருந்த செளமிகா தடுமாறி அவன் மேல் சரிந்தாள். அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்ட அங்கையனுக்கு மூச்சு நின்றுவிடும் போலிருந்தது. அவன் முகத்துக்கு நேரே அவள் கழுத்து இருந்தது. தலையைச் சற்றுத் தாழ்த்தினான். அவளது மேலாடை வீழ்ந்து, தன் முகத்துக்கு வெகு அருகிலிருந்த கவர்ச்சி பந்தங்களால் சிறிது நேரம் பிரமை தட்டிப்போன நிலையிலிருந்தான் அங்கையன்.

செளமிகா சுதாகரித்துக்கொண்டாள். பற்றிய அவள் கையை விடுவிக்காத அங்கையன் அவளைத் தன்னருகில் இருத்தினான். வலது கை அவள் இடையில் அழுந்திக் கிடந்தது. அவன் தேகம் அவள் பின்புறத்தில் நெருங்கியிருந்தது.

"தனியே சந்திப்பதே எவ்வளவு சிரமமாயிருக்கிறது. வந்தாலும் உடனேயே திரும்பிப் போவதைப் பற்றியே பேச ஆரம்பித்துவிடுகிறாய்."

"உங்களுக்கென்ன, உங்களை யார் பேசப் போகிறார்கள்? என்னை... பிறகு வீட்டை விட்டே வெளியே வர முடியாதபடி செய்துவிடுவார்கள்..." குழைவாகச் சொல்லியபடியே இடையில் விளையாட முற்பட்ட அவன் விரல்களை மென்மையாகப் பிடித்து அகற்றிவிட்டாள் செளமிகா.

அவள் கையை ஏமாற்றிவிட்டு மீண்டும் சென்று அவள் வயிற்றில் பதிந்தது அங்கையன் கை. வயிற்றின் மென்மலர்த் தசையை மெல்ல அழுத்தியபடியே, "நாளைக்கு நடக்கப்போவதை நாளை பார்த்துக் கொள்ளலாம்" என்றான் இனிமையாக.

"ஆ...ஹ்.... உங்களுக்கென்ன?" என்றபடி அவசரமாய்த் திரும்பினாள். திரும்பிய வேகத்தில் அவள் எழில் உடலில் பெரும்பகுதி அவன் மேல் பட்டுவிடவே அங்கையன் ஒரு கணம் நிலை கலங்கிப்போய் அவளைப் பார்த்தான். செளமிகா முகத்திலும் மயக்கமான புன்முறுவல் ஒரு கணம் தோன்றி மறைந்தது.

மறு கணம் அவனை விட்டு விலகி அமர்ந்துகொண்டாள். அங்கையன் தன் வலது கையால் அவள் இடையைச் சுற்றி வளைத்து இழுத்தான்.

செளமிகா அவன் கையின் மீது செல்லமாகத் தட்டினாள்.

"ஏன் தொடாமல் உங்களால் பேச முடியாதா?"

"முடியாது"

"முடியாதா?"

"ஆமாம்... காதலுக்குத்தான் கண்ணே கிடையாதே. அதனால் இப்படித் தொட்டுத் தொட்டுப் பார்த்துத்தானே அறியவேண்டி இருக்கிறது."

இடது கையால் அவளது கன்னத்தையும் தொட்டுத் திருப்பினான்.

"ம்...காதலுக்குத்தான் கண் கிடையாது. போகிறவர் வருகிறவர்களுக்கெல்லாம் கண் இருக்கிறது, தள்ளி உட்காருங்கள்" என்று சொல்லிச் சிரித்தாள் செளமிகா.

அவள் சிரித்த முறையும், சிரிக்கும்போது கண்களில் துளிர்விட்டு மின்னிய ஒளியும், அசைந்த அவள் மலருடலின் ஸ்பரிசமும் அங்கையனை நிதானமிழக்கச் செய்தன.

முரட்டுத்தனமாக அவளை இழுத்து முகத்தை மார்புக்குள் புதைத்தான். செளமிகா மெல்ல அவன் தலையைப் பின்னால் தள்ளி, "யாராவது வந்துவிடப் போகிறார்கள்..." என்றாள்.

அங்கையன் அவள் சொன்னதைக் காதில் வாங்கிக்கொள்ளும் ஸ்திதியில் இல்லை.

"காதலுக்குக் கண்கள் மட்டுமல்ல, காதுகளும் இல்லைப் போலிருக்கிறது" என்று சிரித்தபடியே அவனை மெல்ல விலக்கினாள். "நான் போகிறேன்.நாளைக்குப் பார்க்கலாம்." என்று இதமாகச் சொல்லியபடியே எழுந்தாள்.

"ஊஹும். உன்னை விடமாட்டேன்" என்று அங்கையன் சின்னக் குழந்தை போல அடம்பிடித்தான்.

"கண்ணா, நாளைக்கும் நான் வர வேண்டுமல்லவா?" என்று கேட்டு, அவன் தலைமயிரைக் கோதினாள்.

"ஹூம்... உன் உடல் மட்டுமில்லை, பேச்சும் மென்மைதானடி. மென்மையாகப் பேசியே என்னை உன்மத்தம் கொள்ள வைக்கிறாய். இந்த மெல்லுடலும் மென்மொழியும் உணர்ந்த என் நெஞ்சம் என் புலன்களனைத்தையும் ஆவேசமாகத் தூண்டிவிடுகிற சமயத்தில் என்னை விட்டு நழுவுகிறாய்.. உன்னை எப்படி நான் போக விடுவேன்?"

**உடம்பட்டு நீப்பார்**
**கிளவி மடம்பட்டு**
**மெல்லிய வாதல்**
**அறியினும் மெல்லியால்**
**நின்மொழி கொண்டு**
**யானோ விடுவேன்.**

*(கலித்தொகை. 13:15-17)*

## சிந்தியா பதில்கள்

**☛ சிந்தியா! கடவுள் என் முன்னே தோன்றினால், எனக்கு நிறைய அறிவைத் தரும்படி கேட்டுக் கொள்வேன். ஏனென்றால், அறிவு இருந்தால் மற்றெல்லாவற்றையும் சுலபமாகப் பெற்றுக் கொள்ள முடியும்தானே! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

- ஐ.ஆர், பிரிட்டி, கித்துள்.

உண்மைதான்! ஆனாலும், நான் பணத்தைத்தான் கேட்பேன். அவரவர்கள் தங்களிடம் இல்லாததைத்தானே கேட்டுக்கொள்ள வேண்டும்.

☒☒

**☛ மகளிர் தினம் வருகிறது. பெண்கள் சார்பான ஜோக் எதுவும் சொல்வீர்களா?**

- ச. வசந்தமலர், பிட்டமாறுவ

கணவன் மனைவிக்கிடையில் சண்டை நடந்து கொண்டிருந்தது.

அவன்: (கோபத்தோடு ) இப்போழுதுதான் தெரிகிறது, பெண்களைக் காக்காய் கழுகு என்று ஏன் சொல்கிறார்கள் என்பது.

அவள்: எதற்காக?

அவன்: உங்கள் காட்டுக் கூச்சலைக் கேட்டுத்தான்.

அவள்: அதற்காக இருக்க முடியாது. நாங்கள் புழுக்களைப் பொறுக்குவதால்தான்.

☒☒

**☛ மார்ச் 8, பெண்கள் தினம். ஆண்கள் தினம் எப்போது?**

- ஆர். சஜீவன், அனுராதபுரம்.

அடுத்த மாதம் முதலாம் திகதி.

☒☒

**☛ பாகிஸ்தானை 'சுப்பர் சிக்ஸ்'க்குள் வரவிடாமல் செய்வதற்கும், இங்கிலாந்தைக் கொண்டு வருவதற்குமென அவுஸ்திரேலிய அணியினர் விளையாடிய முறையைப் பார்த்தீர்களா?**

- எம். ரவீந்திரன், கொழும்பு -6.

கிரிக்கெட்டைக் கேலிக் கூத்தாக்கியிருக்கிறார்கள். அசாருதீன், குரொஞ்ஞே செய்ததைவிட மிகக் கீழ்த்தரமான ஏமாற்று இது. உலகெங்குமுள்ள கிரிக்கெட் இரசிகர்களும், குறிப்பாக, ஆசிய நாட்டவரும் இதைக் கடுமையாகக் கண்டிக்க வேண்டும்.

☒☒

**☛ பாகிஸ்தானுடனான போட்டியில் சச்சின் மற்றும் இந்திய வீரர்களின் அடி எப்படி?**

- எம். வஸீம், கண்டி.

அடிக்காவிட்டால் எரிப்பார்கள் என்று தெளிந்த ஞானம்.

☒☒

**☛ அழகிய தத்துவம் எது?**

- க. தயாளன், பொன்னரசன்குளம்

சந்தேகம் என்ன? அழகான ஒருவர் சொல்லியிருப்பதுதான். "முதல் காதல் தோல்வியில் மனசு ஒடிஞ்சிடக் கூடாது. அடுத்த காதலில் தவறு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள அது உதவும்." - சொன்னவர் சிம்ரன்.



**☛ முதுகின் முக்கால்வாசிப் பாகம் தெரிய சட்டையணியும் பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

- க. அஜந்தகுமார், அக்கரைப்பற்று 7.

முதுகெலும்புள்ளவர்கள். அதுதான் தைரியமாகக் காட்டுகிறார்கள்.

☒☒

**☛ பெல்ஜியம், கனடா, சுவிஸ், ஜேர்மனி என்று எல்லா நாடுகளுக்கும் போய் சமஷ்டி அரசியலமைப்பை ஆராய்ந்து வந்தார்களே.... எதைத்தான் நமது நாட்டுக்குத் தெரிவு செய்திருக்கிறார்கள்?**

- வீ. தர்மகுலம், வவுனியா.

முதலில் பக்கத்து நாட்டையாவது எட்டிப் பார்த்துவிட்டு, இங்கேயும் மாநில அரசாங்கம், மத்திய அரசாங்கம் என இரண்டு அரசாங்கங்கள் இருக்கலாம் என்று ஒத்துக்கொண்டு பெரும்பான்மையினக் கட்சிகளில் எந்தக் கட்சியாவது சொல்லட்டும் பார்க்கலாம்.

☒☒

**☛ சிந்தியா, சமீபத்தில் என்ன வாசித்தீர்கள்?**

- தனோ கோபாலன், ஹப்புத்தளை

தினப்பத்திரிகையொன்றின் ஞாயிறு இதழில் ஆரம்பமாகியிருக்கும் குந்தி கேஷாத்திரம். 'துரோணர்' என்ற புனைபெயரில் ஈழத்தின் முக்கிய முன்வரிசைக் கவிஞர்களில் ஒருவர் எழுதுகிறார் என்பதாகத் தெரிகிறது.

செல்லரித்துச் செல் லும் தேசத்தின் சிதைவுகள் ஒன்றும் நோயின் குறியல்ல, தியாக நோன்பின் பொறி என்று போருபதேசம் செய்யும் மனோமயன் யார்? இந்த மனோமயனின் நாவெடுத்த உணர்ச்சிச் சுழல்வில் அள்ளுண்டு மயங்கும் அர்ச்சுனர்கள் யார்? எதிரி பாசறையில் போய் நிற்கும் தர்மக் குவிவுக் கர்ணர்கள் யார்? போரின் முன் செய்வதறியாது களைத்து மண்டி யிடும் அர்ச்சுனர்களைப் போர் எவ்வாறு பயன்படுத்திக் கொள்கிறது? குந்தியின் வாய்க் கட்டை அவிழ்த்தல் ஏன் அவசியம்? அதைத் தடுத்து நிற்போர் யார்? என்றெல்லாம் நமக்குள் அமுக்கி வைக்கப்பட்டிருக்கும் விவாதப் பொறிகளை மெல்லக் கிளப்புகிறது சென்ற வாரம் ஆரம்பித்திருக்கும் இந்தக் கவிதைத் தொடர்.

இன்றைய அச்சச் சூழலின் அழுத்தம் உருவாக்கி வைத்திருக்கும் மந்தைக் கருத்துக்களுக்கும், ஆவேச எழுச்சிப் போலி மிதப்புகளுக்கும் வெளியே நின்று நமது பிரச்சினைகளின் அடியாழத்தைக் கண்டு கொள்ளவும், நமது இந்தத் துக்கங்களுக்கு எங்களிடமேயே இருக்கும் காரணங்களைத் துணிச்சலோடு சொல்லவும் முன்வருமானால் - நம் காலத்திற்குரிய சிறந்த இலக்கியப் பிரதியொன்று நமக்குக் கிடைக்கலாம்: எங்கள் நிலைமையை குழப்பங்களை சரியானபடி பதிவு செய்யும் காவியமாக வீரியக்கூடியது இந்தக் கவிதைத் தொடர் என எதிர்பார்க்க வைக்கிறது.

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் குளியலறை உபகரணங்களை

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்

*Sterling* SERIES



**Naveen Ceramic** No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

எமது புதிய காட்சியறை
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

# அமிர்தாஞ்சன்




இதமான நிவாரணம் ஆண்டு முழுவதும்!

Importer : Tel : 739899,715700

## தபால் மூலம் இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

டிப்ளோமா ஆசிரியரினால் தபால் மூலம் தையல், பெயின்டிங், மணப்பெண் அலங்காரம் பயிற்றுவிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய நீண்ட கடித உறையுடன் இன்றே தொடர்பு கொள்ளவும். அத்துடன் வெளிநாட்டவர்களும் பங்குகொள்ளலாம். பயிற்சியின் முடிவில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும். மாத்தளை மாநகரிலே நவோதயக் கல்வி நிலையத்தில் நேரடியாகவும் பயிற்றுவிக்கப்படுகின்றது.

**Director:-Mrs.Sithy Kamila Rafi, No:- 41 Vihara Road, Matale.**

விளம்பரப் பகுதி

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்ப விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3000 | ரூ.1500 | ரூ.750 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3650 | ரூ.1800 | ரூ.900 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2600 | ரூ.1300 | ரூ.650 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D.Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளை, தபாற் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும். உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத்தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@dialogsl.net edmurasu@dialogsl.ne

---

கண் வைத்திய
நிபுணர் மூலம்
கண் பரிசோதனை செய்து
விரும்பிய வகையிலான
பிரேம்களைக் கொண்ட
மூக்குக்
கண்ணாடிகளை
குறைந்த
செலவில்
பெற்றுக் கொள்ள
ஒரே நிறுவனம்



விழி உங்களிடம்
அதன் ஒளி
எங்களிடம்

**அப்பலோ ஒப்ரிசியன்**

**APPOLO OPTICALS**

317 பி, காலி வீதி
வெள்ளவத்தை,
கொழும்பு- 6.
தொலைபேசி: 074-516609

No.298A,
George R.De Silva Mw,
(Khairaz Complex)
Kotahena, Colombo-13.
T.P: 074-610459

## வெள்ளவத்தை

(கொழும்பு தெற்கு)

*Eric Rajapakse*
Opticians

நீங்கள் அடுத்த முறை மூக்குக்கண்ணாடி அல்லது கண்டாக்ட் லென்ஸ் வாங்கும்போது மூக்குக்கண்ணாடி தயாரிப்பில் விற்பன்னர்களும் கண்டாக்ட் லென்ஸ் தயாரிப்பில் கைதேர்ந்தவர்களுமான எம்மை நாடுங்கள்.

இல.539, காலி வீதி, வெள்ளவத்தை
(ரெக்ஸி பெற்றோல் நிலையத்திற்கு எதிரில்)

தொலைபேசி:
01-362971,553877

பிரதி வியாழக்கிழமைகளில் முன் அனுமதியுடன் கண் வைத்திய நிபுணர்களைச் சந்திக்கலாம்

## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**

142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக

**Tel: 074-519754**

## தெய்வீக மருத்துவம்

**National Theiveega Sakthy Foundation**
**International Interregious Traditional**
**& Medical & Divine Service**
சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Government Approved Charity Regd No: - HA/4/BT/219

**டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P, J.P. (SL)**

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த, காதலர்கள் கணவன் மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீயபழக்கம், மனிதத் தீமை, மருந்திடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன திங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்)

Theiveegam SriLanka
Head Office
Batticaloa.

Tele / Fax:065-24825, 078 610098
வெளிநாட்டவர்களுக்கு,
Tele / Fax: - 0094 78610098

மட்டக்களப்பிலும் சந்திக்கலாம்

"வாழ்வினிருளை நீக்கிஒளியையேற்றுவோம்"
" DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE "

---




## இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி

மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர்.
டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.

1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஔடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.





**★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை**

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.

**★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

**★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.**

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஸ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

**உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள**

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில் 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும், P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையாவது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அற்புத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது, உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவும்.

குறிப்பாகச் **"செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்"** என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.

**★ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.**

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின் சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.

**★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்.**

பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

**★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி**

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்**

மதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.

**★ கொழும்ப அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்ப.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளிநாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

**★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்ப.**

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வுலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றிள்.

**★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.**

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

**★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.**

அன்புள்ளம் கொண்ட ஐயாவுக்கு, சுரேஷர் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரிகத்தின் சக்தியால் என் காதலிஎன்னை வந்து அடைந்து விட்டாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

**★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்**

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது. வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய பற்றுநோய்.**

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக பற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின்அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.

*உலக மாந்திரீக சக்கரவர்த்தி.*

**Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.**
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162. Kotahena Street. Colombo-13.
T.P. 342464, 344832, 342463, 470615, 431137. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy . @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-5.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே. தொடர்பு காலை 6.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. (இலங்கை நேரப்படி)
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

நுவரெலிய கிளை.

33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, Fax: 009452-22508
w.w.w. imexpo lanka . com. drpk samy.

## அங்கம் 10

"அய்யா நீங்க இருங்க... நான் போய் என்னன்னு பாக்கறேன்..."

நாகசாமி அங்கிருந்து வேகமாகப் புறப்பட்டார்.

வாழைத் தோட்டத்தில் வழக்கமான ஆடிக்காற்றின் ஆவேச விளையாட்டு...

'உய்ய்... உய்ய்' என்று ஒரு விதமான சத்தம்.

மாளிகைப் பணியாளர்கள் சிலர் சூழ்ந்திருக்க அந்தோணி விரைத்துப் போய்க் கிடந்தான். உயிர் எப்பொழுதோ போய்விட்டிருந்தது.

காலில் கட்டுப் போட்டு, கத்தியால் கீறி இரத்தத்தை உறிஞ்சி முதலுதவி எல்லாம் செயயப்பட்டிருந்தும் பலனில்லை.

சற்றுத் தள்ளி அவனைக் கடித்த பாம்பையும் அடித்துப் போட்டிருந்தார்கள்.

நாகசாமி நெற்றியைத் தேய்க்கத் தொடங்கினார்.

'ப்ச்ச...!' நாகசாமி பாம்புக்காக வருந்தினாரா இல்லை அந்தோணிக்காக வருந்தினாரா என்பதுதான் தெரியவில்லை!

பெரியவர் பொன்னம்பலம் கைகளைக் குத்திப் பிசைந்து கொண்டார். அந்த ஏரியா போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்திருந்தார். பொன்னம்பலம் வருந்துவதைப் பார்த்து "நீங்க எதுக்கு அநாவசியமா கவலைப்படறீங்க. இட் ஈஸ் ஆக்சிடெண்ட். யார் என்ன பண்ண முடியும். சொல்லுங்க பார்ப்போம்."

என்று ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்.

"நீங்க என்ன சொன்னாலும் என் மனசு சமாதானப்பட மாட்டேங்குதுங்க. அந்தோணி ரொம்ப நாளா இங்க கார்டனரா இருக்கான். அவன் அப்பாவும் இங்கதான் இருந்தாரு. அவன் ரிட்டையர் ஆகிப் போகும்போது பையனுக்கு வேலை கேட்டான். சரின்னு போட்டுக் கொடுத்தேன். அவனை மாதிரி 58 வயசு வரை இவனும் இங்க வேலை பார்த்து ரிட்டையர் ஆகியிருந்தா சந்தோஷப் பட்டிருப்பேன். இப்படி அநியாயமா செத்துப் போயிட்டானுங்களே...!"

# திரும்பும் அம்புகள்

"என்னய்யா... என்ன நடந்துச்சு?" என்று சுற்றி இருப்பவர்களைப் பார்த்துக் கேட்டார்.

ஒருவன் விளக்க ஆரம்பித்தான்.

"அய்யா, அந்தோணி பாம்பு பாம்புன்னு கத்தற சத்தம் கேட்டு ஓடி வந்தேங்க. வந்து பார்த்தப்போ இந்தப் பாம்பு அவன் காலை வளைச்சுகிட்டு நின்னுகிட்டிருந்துச்சுங்க.

எங்களுக்கு என்ன பண்றதுன்னே தெரியல. அதை அடிச்சு துரத்த ஒரு கம்பைத் தேடி எடுத்துகிட்டு வரதுக்குள்ள அது நல்லா நாலு போடு போட்ருச்சுங்க. ஒரு மாதிரி கஷ்டப்பட்டு கால் மேலயே அடிச்சோம். எவ்வளவு அடி வாங்கியும் விலகாம எங்களைப் பார்த்து சீறி எங்களையும் கடிக்க வந்துச்சுங்க.

எப்படியோ ஒரு வழியா அதை அடிச்சு போட்டோம். அப்பால அந்தோணி இலை அறுக்க வெச்சுருந்த கத்தியாலையே கொத்துப் பட்ட இடத்துல கீறி நான் தாங்க ரத்தத்தை உறிஞ்சினேன். இருந்தும் பிரயோஜனமில்லீங்க. விஷம் விறுவிறுன்னு ஏறி..."

அவன் ஏற்ற இறக்கமுடன் சொல்லிவிட்டு அவன் கண்களிலும் கண்ணீரைத் தேக்கினான்.

"சரி... அவன் தலை எழுத்து இப்படி பாம்புகிட்ட கொத்துவாங்கிச் சாகணும்னு இருக்குது. என்ன பண்ண? எதுக்கும் டாக்டரை அனுப்பறேன். அவர் வந்து பார்த்து சட்டப்படி செய்ய வேண்டியதை செய்யட்டும். இல்லேன்னா அய்யாவுக்குத்தான் பேர் கெட்டுப் போகும்... நீங்க இங்கையே இருங்க."

நாகசாமி வருத்தமும் எதார்த்தமும் கொப்பளிக்கப் பேசிவிட்டு அங்கிருந்து விலகத் தொடங்கினார். விலகும்போது அந்தப் பாம்பை ஒரு பார்வை... ஆறடி நீளத்தில் கைப்பருமனில் இருந்தது! அதை பிய்த்துப் பிடுங்கிப் போட்டிருந்தார்கள்.

பொன்னம்பலத்திடம் நிஜமாலுமே வருத்தம் கொப்பளித்தது.

"அதுக்கு என்ன பண்ண...? அவன் தலை எழுத்து அப்படி ஆயிடிச்சு. விடுங்க. எதுக்கும் பாம்பு பிடிக்கறவங்களவிட்டு உங்க காம்பவுண்டுல பாம்புங்க இருந்தா பிடிச்சுகிட்டு போகச் சொல்லுங்க. அதுதான் இப்ப உங்களால பண்ண முடிஞ்சது."

இன்ஸ்பெக்டர் சொல்லிவிட்டு கை குலுக்கிவிட்டுப் புறப்பட்டு போனார்.

நாகசாமி மௌனமாக அருகில் நின்று கொண்டிருந்தார்.

"நாகசாமி... நம்ம அக்கவுண்டண்ட் கிட்ட அந்தோணி பொண்டாட்டிக்கு நஷ்ட ஈடா ஒரு லட்ச ரூபாயை சேர்த்து கொடுக்கச் சொன்னேன்னு சொல்லுங்க. ஏதோ என்னால முடிஞ்சது..." என்று தலையைக் குனிந்து கொண்டார் பொன்னம்பலம். நாகசாமி மறுபேச்சு பேசாமல், "சரிங்க" என்றபடி கிளம்பினார்.

**'விதியும் பாம்பும் ஒரு வகையில் ஒன்றுதான். மகுடி வாசித்து பாம்பைப் பிடித்து கூடையில் அடைத்து வைக்கிற மாதிரி விதியையும் புத்தி சாலித்தனமாக நமக்கு சாதகமாக அடக்கி வைத்து சாதுர்யம் காட்டலாம்! அதனால் விதி நமக்கு அடங்கி அடிமைப்பட்டுவிட்டதாக மட்டும் உருகிவிடக்கூடாது.**

**அதன் விஷப்பற்கள் நம்மைக் கடிக்க எப்பொழுதும் காத்திருக்கும்...'**

(அம்புகள் தொடர்ந்து வரும்..)

**இந்திரா சௌந்தர்ராஜன்**

# அமெரிக்கக் கூடாரத்துக்குள் புகுந்துவிட்ட ஒட்டகம் 03

## பின் லேடன் 'அதிரவைக்கும் மனிதன்'

**அதிர்ச்சி 03**

**2003** பெப்பரவரி 12 ஆம் திகதி!

அமெரிக்காவின் சீ.ஐ.ஏ. தலைமையலுவலகத்தின் சராசரி வேலை நேரம். பரபரப்பு மங்கிக் கொண்டிருந்த மாலைநேரம்.

சாட்லைட் போன்களுடனான விறைப்பான பாதுகாப்பில்....

சுற்றிவர தடிமனான புல்லட் புரூஃப் கண்ணாடியால் வேயப்பட்ட சுவடும், தரை முழுக்கக் கனகச்சிதமாய் விரிக்கப்பட்டிருந்த புஷு புஷுக் கார்ப்பெட்டுமாய் இருந்த படுவிஸ்தாரமான அந்தத் தனியறையில், விசாலமான 'வார்னிஷ்' டேபிளையொட்டிய 'வாட்டர்பெட்' தனமான, அமர்ந்தவுடனேயே சடக்கென்று உள்வாங்கிக் கொள்கிற வீல் சேரில் சாய்ந்து அமர்ந்திருந்தார் ஜோர்ஜ் டெனட். அமெரிக்க உளவுப் பிரிவின் புலி என அழைக்கப்படும், சீ.ஐ.ஏ.யின் பணிப்பாளர் நாயகம்.

மனதை விஸ்வரூபித்து உடம்பில் வளர்ந்து வரும் இனம்புரியாததொரு வலி அவரது விழிகளின் உயிரை விரட்டி, முகத்தில் எக்கச்சக்கமான கவலை ரேகைகளை வரைந்திருந்தது. ஐஸ்கிறீம் குளுமையான ஏசியிலும்... உடம்பு, மனசு முழுக்கவும் சுடர்விட்டுப் படர்ந்திருந்தது புழுக்கம். ஏதோ தொய்ந்து போய்க் கொண்டிருந்தார் ஜோர்ஜ் டெனட்.

இந்தத் தொய்வுக்கும், மன இறுக்கத்துக்கும், புழுக்கத்துக்கும் காரணம்...

-ஒஸாமா பின் லேடன் அலைஸ் ஒஸாமா பின் மொஹம்மட் பின் லேடன், ஷேய்ச் ஒஸாமா பின் லேடன், த பிரின்ஸ், த அமீர், அபூ அப்துல்லாஹ், முஜாஹிட் ஷேய்க், ஹாஜி, த டிரெக்டர் என வெவ்வேறு விதமாக அழைக்கப்படும் ஒரே நபரான-அதிரவைக்கும் மனிதன் ஒஸாமா பின் லேடன். சுற்றிவர நிறைய விறகுக் கட்டைகளோடு கொழுந்து விடும் நெருப்பு.

நேற்றைய தினம்- பெப்ரவரி 11ஆந் திகதி, 150 நாடுகளில் வெவ்வேறான 70 மொழிகளில் வெளியிடப் பட்ட ஒஸாமாவின் அல்ஜெஷீரா அறிக்கையை- அதன் உள் அர்த்த யதார்த்தங்களையும், ஆபத்துக் களையும் சிந்திக்காமல் சிறுபிள்ளைத் தனமாக விட்டுவிட முடியாது என்பதை நினைத்து... நினைத்து, தம் எதிரி... எதிரியின் நடவடிக்கைகளை அழிக்க என்ன செய்யலாம் என்பதை அலசி, மூளையைக் கசக்கிப் பிழிந்து யோசித்ததிலேயே ஜோர்ஜ் டெனட் நிரம்பவும் குழம்பித் தொய்ந்து போயிருந்தார்.


சி.ஐ.ஏ. வளர்த்த கடா ஒஸாமா, தம் மார்பிலேயே பாய்வதா?

"அமெரிக்காவில் வடக்கிலிருந்து தெற்கு வரையும், கிழக்கிலிருந்து மேற்கு வரையும் அச்சத்தினால் நிரப்பப்பட்டுள்ளது. நாம் அன்று அநுபவித்ததைப் போல அமெரிக்கா இன்று அநுபவிக்கிறது. அதற்கு நாம் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். நிச்சயமாக பலஸ்தீன மக்கள் நிம்தியாக வாழாத வரை அமெரிக்காவில் அமைதி கிடையாது"

என்று சதாவும் ஒலிக்கும் ஒஸாமாவின் குரல், இந்தக் கணமும் நொந்த மனசுக்குள் மீன்முள்ளாய் வந்து சொருக, ஜோர்ஜ் டெனட்டின் விழிகள் கொவ்வைப் பழங்களாகச் சிவந்தன. நாற்காலியின் நுனிக்கு நகர்ந்து கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

எகிறும் இரத்த ஓட்டத்துக்கு அவசரமாக ஏதாவது ஆறுதல் வேண்டும்.

அவசியமாகவும் உணர்ந்ததில், 'ராத்மென்ஸ்' சிகரட்டொன்றை எடுத்து, உதடுகளுக்கிடையில் பொருத்தி தீக்கொளுத்திக்கொண்ட ஜோர்ஜ் டெனட், அதே அவசரத்தோடு டேபிள் மீது தயாராகயிருந்த போத்தலைப் பளபளக்கும் கண்ணா



**❝ நாம் அன்று அநுபவித்ததைப் போல அமெரிக்கா இன்று அநுபவிக்கிறது. அதற்கு நாம் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். நிச்சயமாக பலஸ்தீன மக்கள் நிம்தியாக வாழாத வரை அமெரிக்காவில் அமைதி கிடையாது❞**

**என்று சதாவும் ஒலிக்கும் ஒஸாமாவின் குரல்....**

**தருவது- இப்னு மாஜிதா**

டித் தம்ளரில் கவிழ்த்து, கொஞ்சம் ஸ்காட்ச் விஸ்கியை ஊற்றி மடக்கென்று தொண்டைக்குள் சரித்துக் கொண்டார். ஸ்கொட்லாந்தின் ஸ்காட்டீஸ் மலையில் ஊற்றெடுக்கும் தெளிந்த நீரில் கலந்த இந்த 'மால்ட்' அவருக்கு ரொம்பப் பிடிக்கும். அவரது ஃபேவரிட் தங்கத் திரவம்.

குறுகிய நேரம் புத்துணர்ச்சியாய் சிகரெட் நிகோட்டின் புகையை ஆத்மார்த்தமாய் உள்ளிழுத்து, இரசிக்கும் மனோநிலையில் இல்லாமலும் வளையம் வளையமாக வெளியே விடும் அந்த செக்கன் நேரத் தருணத்தில்தான். சங்கீதமாய் அந்தக் குரல் கேட்டது.

"சார்!"

அதீத குழப்பமும், கொஞ்சமே கொஞ்சம் மயக்கமுமாய் இருந்த ஜோர்ஜ் டெனட் விழிகளை விரிக்க, பக்கத்தே நேர் எதிராக-டேபிளுக்கு அடுத்த பக்கமாய் இருபத்திரண்டு வயதுக்குள் தெரிந்த அவரது பிரத்தியேகச் செயலாளர். பெயர் லிண்டாவோ என்னமோ... காதலுக்குள்ளே கரைந்து உருகும் இரவுகளில் நிச்சயம் ஒரு வெடிகுண்டாக மாறி ஒத்துழைப்பாள் என நினைக்கத் தூண்டுகிற தோற்றம்.

மார்பகத்தைப் பெரிதாக்கி அழகுபடுத்திக்கொண்ட இரண்டு லட்சம் அமெரிக்கப் பெண்களில் இவளும் ஒருத்தியாக இருப்பாள் போலும். அழகாய்... இரண்டு பட்டன்கள் திறந்துவிட்ட றோஸ் நிற ப்ளவுஸை விட்டுத் திமிறிக்கொண்டிருந்த மார்பழகில் கொஞ்சம் போதையாய் இருந்தவள், அபாயகரமாக உயர்த்தி அணிந்திருந்த கறுப்புநிற ஸ்கர்ட்டை விட்டு விலகித் தெரிந்த மரவள்ளிக்கிழங்கு நிற வழவழப்பான நீண்ட கால்களுக்கு, மெலிதான கண்ணாடித் துணியில் சாக்ஸ் அணிந்திருந்தாள்.

ப்ளீச்சிங் செய்யப்பட்ட ப்ரவுன் கலர் தலைமயிரில் கழுத்துக்கு மேலே ஜூலியா ராபர்ட்ஸையும், கழுத்துக்குக் கீழே 'பேவாட்ச்' புகழ் பமீலா அண்டர்சனையும் ஞாபகப்படுத்திக் கிறங்கடித்தாலும், ஜோர்ஜ் டெனட் அவளை வெறித்தனமாக இரசிக்கும் அல்லது மனசுக்குள்ளேயாவது அசிங்கப்படுத்திப் பார்க்கும் மூடில் இல்லாததால்....

"உனக்கும் நேரமாயிட்டுது டியர். தவிர, எனக்கும் கொஞ்சம் தனிமை தேவைப்படுகிறது. நீ போகலாம் என்றார். சுருதி செத்துப்போன குரலில்.

பின்புற அகல-அழகுப் பிரதேசத்தை சடக்கென்று ஒரு வெட்டு வெட்டி, கார்ப்பெட் புல்தரையில் குதிக்கால் செருப்புக்கள் அமிழ அமிழ அந்த இளமைப் புயல் நடந்து மறைய, ஜோர்ஜ் டெனட் இன்னுமோர் பெக் ஸகாட்ச் விஸ்கியைத் தொண்டைக்குள் சரித்துக்கொண்டார்.

வலது கையில் தீப்பந்தத்தையும், இடது கையில் 1776 ஜூலை 4 என்று பொறிக்கப்பட்ட சுதந்திரப் பிரகடனக் கல்வெட்டையும் ஏந்தி, டேபிளின் மீது நின்றிருந்த மினி சுதந்திரதேவி-லிபர்ட்டி சிலையின் வயிற்றில் பொதிந்திருந்த எலக்ட்ரானிக் கடிகாரம், நேரம் 5.00 மணி என்று இசைவெள்ளம் எழுப்பியதையும் கூட ஜோர்ஜ் டென்ட் தன் செவிப்பறைக்குள் வாங்கியதாக இல்லை.

தனது மட்டும் என்றில்லாமல் உலகளாவிய மக்கள் அனைவரினதும் வாழ்வில் ஏ:தோ, எப்படியோ இனிமையான வஸ்துக்கள் சொற்பமாகி வருவதை அவர் தனக்குள் உணர்ந்து கொண்டிருந்தார். வாழ்க்கை சுவாரஷ்யமற்று ஏதோ இயந்திரத்தனமாகக் கழிவதாகவும் தோன்றியது.

**இன்னும் அதிரும்....**

# என்றோ எழுதிவைக்கப்பட்ட உலகின் தலைவிதி

**03**

## நொஸ்ரடாமஸின் அதிசய ஆரூடங்கள்




பிரமிக்க வைப்பது
ராஜகுமாரன்


**சென்ற இதழிலிருந்து....**

நொஸ்ரடாமஸிற்குப் பேய் பிசாசுகளுடன் தொடர்பு இருப்பதாக வதந்தி பரவுகிறது. அப்படியானவர்களை சமூகத்திற்கு வேண்டாதவர்களாக ஒதுக்கிச் சிறையில் அடைப்பது, கொல்வது அன்றைய கால வழக்கம். அதனால் நொஸ்ரடாமஸின் பாட்டன்மார் அவனை மருத்துவத் துறையில் சேர்ந்து பயில நிர்ப்பந்திக்கின்றனர். அக்காலத்தில் பிளேக் நோய் பரவுகிறது. நொஸ்ரடாமஸின் வைத்தியத்திற்கு ஆதரவு பெருகுகிறது. ஏனைய வைத்தியர்கள் பொறாமையின் நிமித்தம் நொஸ்ரடாமஸ் மந்திர தந்திரங்கள் செய்வதாகப் பழி சுமத்துகின்றனர். யூலியஸீசர் சீலிங்கர் என்ற வேதாந்தி அவ்வேளை நொஸ்ரடாமஸிற்கு கைகொடுத்து ஏஜென்ஸ் நகருக்கு அழைத்து, மருத்துவமனையொன்றை கட்டிக் கொடுக்கிறார். ஏஜென்ஸ் நகரின் செல்வந்தர் ஒருவர் தனது மகளை நொஸ்ரடாமஸிற்கு திருமணம் செய்து கொடுக்கிறார். ஆனால் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. அன்றைய தினம்....

***அதிசயம்-3***

பிரான்ஸில் பரவிய கொடிய நோய் ஏஜென்ஸ் நகரை விட்டு வைக்கவில்லை. நொஸ்ரடாமஸ் இரவு பகலாகக் கண்விழித்துத் தனது மருத்துவமனையில் பிளேக் நோயாளிகளுக்கு மருத்துவம் பார்த்துக் கொண்டிருந்தான். நோயாளிகளிலேயே தனது முழுச் சிந்தனையையும் செலுத்திக் கொண்டிருந்தான். ஆனால் அவனுக்குத் தனது வீட்டுக்குள்ளேயே அபாயம் புகுந்து விட்டது தெரியவில்லை.

பின்நாளில் உலகையே ஆச்சரியப்பட வைத்த அந்த ஆரூட மேதைக்கு அன்றைய தினம் தன் மனைவிக்கு வாய்த்திருந்த விதியை ஏனோ கண்டு கொள்ள முடியவில்லை.

அவனது அந்த அழகிய மனைவியும் இரு குழந்தைகளும் பிளேக் நோயால் பீடிக்கப்பட்டனர். அதை நொஸ்ரடாமஸ் தெரிந்து கொண்ட போது காலம் கடந்துவிட்டது. அவன் அவர்களுக்கு வைத்தியம் செய்யத் தொடங்கும் முன்னரே மனைவியும் குழந்தைகளும் நோய்க்குப் பலியாகி மடிந்தனர்.

நொஸ்ரடாமஸ் பித்துப் பிடித்தவன் போல் ஆனான். அவனுக்குத் தனது தொழிலிலேயே கவனம் செலுத்த முடியவில்லை. நாட்டு மக்களையெல்லாம் எந்த நோயிலிருந்து காப்பாற்றுவதற்கு அவன் அல்லும் பகலும் உழைத்தானோ, அந்த நோய் தனது சொந்தக் குடும்பத்தையே பசியாறியபோது தடுத்து நிறுத்த முடியாது போய் விட்ட அதிர்ச்சி அவனை அவனிலிருந்தே பிரித்து எறிந்து விட்டது. இன்ப துன்பங்களுக்கு வசப்படாத மோன நிலைக்கு அவனது மனதை இட்டுச் சென்றது.

ஆனால் விதி அவனை விடுவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டது. விதியையே வேவு பார்க்க வந்தவன் என்று விதிக்கே விளங்கி விட்டது போலும். விளையாட்டை விளையாடித் தீர்ப்பது என்று இறங்கிவிட்டது விதி!

அவனது மனைவிக்காக அவளது தந்தை கொடுத்த பணம் பொருள் எல்லாவற்றையும் நொஸ்ரடாமஸிடமிருந்து மீட்டெடுக்க சட்ட நடவடிக்கையில் அவளது உறவினர்கள் இறங்கினார்கள். இறுதியில் அவன் தனது உயிர்போல் கருதி வந்த மருத்துவமனைக் கட்டடத்தை அவனிடம் இருந்து பறித்துக் கொண்டனர்.

அப்போதும் விதிக்குத் திருப்தி ஏற்படவில்லை. முன்பு அவன் மீது, பொறாமை கொண்ட வைத்தியர்களால் குற்றம் சாட்டப்பட்டபோது அவனுக்குக் கை கொடுத்து உதவி ஏஜென்ஸ் நகருக்கு அவனைத் தருவித்த வேதாந்தி யூலியசீஸர் சீலிங்கருடனும் நொஸ்ரடாமஸிற்கு மனத் தாங்கல் ஏற்பட்டது. அவன் மீது நெடும் பகை கொண்டிருந்த மதகுருமார் நொஸ்ரடாமஸ் பேய் பிசாசுகளுடன் சகவாசம் கொண்ட சூனியக்காரன் என்ற பழியைத் தருணம் பார்த்திருந்து சுமத்தினர்.

நொஸ்ரடாமஸ் நிம்மதியிழந்தான். ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் மகிழ்ச்சியும், துக்கமும், அமைதியும், சிக்கலும், மாறிமாறி வந்தாக வேண்டும் என்பதை நொஸ்ரடாமஸ் நம்பினான். ஏஜென்ஸ் நகரில் தொடர்ந்து தங்கினால் பிரச்சனைகள் இன்னும் அதிகரிக்கும் என்று அவன் உணர்ந்தான் எங்காவது போய் காலத்தைக் கடத்தலாம் என முடிவு செய்தான்.

இதனைத் தொடர்ந்து ஆறு வருடங்கள் பல நாடுகளுக்கும் சென்று அலைந்து திரிந்தான். லோறென், வேனிஸ், சிசில் போன்ற நகரங்களில் வலம் வந்தான். அங்கெல்லாம் கடற்கரைகள். திறந்த வெளிகள் போன்றவற்றை நாடிச் சென்று இரவு நேரங்களில் விண்வெளியையே ஆராய்ந்து கொண்டிருப்பான்.

விண்கோள்களின் நடமாட்டமே பூமியில் பலதரப்பட்ட மாற்றங்களை ஏற்படுத்துகின்ற நம்பிக்கை அவனுக்கு சிறுவயது முதலே இருந்தது. அவன் அந் நாடுகளில் இருந்த தத்துவ மேதைகளை நாடிச் சென்று சந்தித்து நீண்ட நேரம் உரையாடுவான். அவன் அந் நாட்களில் பெற்றுக் கொண்ட அறிவும், அநுபவமும் அவனுக்குள்ளேயே ஓர் அதிசய ஆற்றலை மிக வேகமாக வளர்த்து வந்தது. அவன் அவ்வப்போது கூறும் விடயங்கள் யாவும் அச்சொட்டான தீர்க்கதரிசனங்களாகின. இதைக் கண்டு மக்கள் அவனிடத்தில் ஓர் அதிசய சக்தி இருப்பதாக உணர்ந்தனர். அவனால் கவரப்பட்டனர். அவனது பெயரும் புகழும் நாடுகள் தோறும் பரவத் தொடங்கின. ஆனாலும் அவன் தனது மருத்துவத் துறையையும் கைவிட்டு விடவில்லை. அதுவே அவனுக்கு ஜீவனோபாயத்துக்கான மார்க்கமாக இருந்தது.

**பன்றிகளுக்கு எழுதப்பட்டிருந்த விதி:**

ஒரு நாள்...

நொஸ்ரடாமஸ் தனது செல்வந்த நண்பனான மொன்சியர் டீ ஃபுளோறன் பிள்ளே என்பவரது பண்ணையில், அவருடன் உரையாடிக் கொண்டு நடந்து கொண்டிருந்தான்.

அப்போது இரு பன்றிக் குட்டிகள் அவர்கள் முன்னால் எதிர்ப்பட்டன. நொஸ்ரடாமஸின் ஆரூட சக்தியை பரீட்சித்துப் பார்க்கவேண்டுமென நெடுநாளாய் எண்ணியிருந்த அந்தப் பண்ணைக்காரருக்கு உடனே ஒரு எண்ணம் தோன்றியது. நொஸ்ரடாமஸைப் பார்த்து எதிர்பாராத கேள்வி கேட்டார்.

"நண்பனே! உனக்கு உண்மையிலேயே எதிர்வு கூற முடியுமென்றால் இதோ இந்தப் பன்றிக் குட்டிகளின் தலைவிதி என்னவென்று சொல் பார்ப்போம்" என்றான்.

நொஸ்ரடாமஸ் அதை வேடிக்கையாக எடுக்கவில்லை. ஒரு கணம் தாமதித்தான். பின்னர் பன்றிக் குட்டிகளை உற்று நோக்கினான். அவற்றில் ஒன்று வெள்ளை, மற்றையது கறுப்பு. சிறிது நேரம் கண்களை மூடி தீவிரமாகச் சிந்தித்துவிட்டுச் சொன்னான். "அதோ அந்தக் கறுப்புப் பன்றிக் குட்டியை இன்று நாம் ஆகாரமாக உண்ணப் போகிறோம்! வெள்ளைக் குட்டி இன்றே ஓநாய்க்கு இரையாகப் போகிறது!"


(பிரமிப்புகள் தொடரும்)

---

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

(அரசியல் தொடர்)

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**




தேனீர் கேட்டுக் குடித்துவிட்டு...

சிவசிதம்பரத்தின் பகிடியைக் கேட்டுச் சிரித்து முடிந்ததும் அமிர்தலிங்கம் நேரே விஷயத்துக்குப் போனார். "தம்பியள்! நாங்கள் கன நாட்களுக்கு இருக்கமாட்டம். இந்த நாட்டிலை வாழுற தமிழ் மக்களைக் காக்கிற பொறுப்பு இனிமேல் உங்களுடையது தான். உங்கடை பலத்திலைதான் எங்கடை மக்களின் வருங்காலம் தங்கியிருக்குது. அதை நீங்கள் எப்பவும் மனத்திலை வைச்சிருக்க வேணும்," என்று விஷயத்தை ஆரம்பித்தார் அவர்.

அடுத்து, தமிழ் இயக்கங்கள் எல்லாம் ஒற்றுமைப்பட வேண்டிய அவசியத்தை அவர் எடுத்துச் சொன்னார். இயக்கங்கள் தங்களுக்குள்ளே மோதிக்கொள்வதால் இவ்வளவு காலமும் மிகவும் கஷ்டப்பட்டு கட்டி எழுப்பிய சர்வதேச ஆதரவும் அனுதாபமும் கரைய ஆரம்பித்துவிட்டன என்பதையும் இயக்கங்களுக்கிடையிலான மோதலைப் பயன்படுத்தி மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டிய அதிகாரங்களைக் கொடுக்காமல் அரசாங்கம் காலம் கடத்துவதாகவும் அமிர்தலிங்கம் சொன்னார்.

"நாங்கள் இதுவரை போராடிப் பெற்ற பலாபலன்களை எங்களுக்குள்ளை சண்டை பிடிச்சு இழந்து விடக் கூடாது," என்று அவர் எச்சரிக்கை செய்தார்.

தமிழ் இயக்கங்கள் சேர்ந்து செயற்பட வேண்டும் என்றும் அத்தகைய ஒழுங்கில் புலிகளுக்குமுதலிடம் வழங்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

"அதிலை எந்த விதமான சந்தேகத்துக்கும் இடமில்லை. உங்களாலைதான் இந்த நிலைமையை எங்களால் அடைய முடிந்தது. அதை எங்களுக்குள் வீணாகச் சண்டை பிடித்துப் போட்டடிக்கக் கூடாது. அதுதான் எங்கடை கவலை," என்று சொல்லி முடித்தார் அமிர்தலிங்கம்.

அமிர்தலிங்கமும் மற்றக் கூட்டணித் தலைவர்களும் தமிழ்க் இயக்கங்களும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்பதில் அப்பொழுது அக்கறை கொண்டிருந்தனர். தமிழ் இயக்கங்களிடையே- குறிப்பாக இந்திய அமைதி காக்கும் படையை (ஐபிகேஎவ்) எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருந்த புலிகளுக்கும் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஆதரித்த ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.என்.டி.எல்.எவ்., புளொட், ரெலோ ஆகிய இயக்கங்களுக்குமிடையே- அப்பொழுது பலத்த மோதல்கள் நடந்து கொண்டிருந்தன.

1987 ஜூலை 29ம் திகதி இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தியும் கைச்சாத்திட்ட இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து தமிழ்போராளி இயக்கங்களுக்கிடையே இந்த மோதல்கள் தீவிரமாகின. இலங்கை- இந்திய சமாதான ஒப்பந்தத்தை தயக்கத்துடன் முதலில் ஏற்றுக்கொண்ட புலிகள் இயக்கம் பின்பு ஐ.பி.கே.எவ்.வுடன் போரிட்டது. மற்ற மூன்று குழுக்களும் ஐபிகேஎவ்வுடன் இணைந்து செயற்பட்டன.

தமிழர்களைப் பலவீனப்படுத்தி இலங்கை- இந்திய ஒப்பந்தத்திலிருந்தும் அதன்கீழ் அமைக்கப்பட்ட மாகாண சபைக்கு அதிகாரங்களை ஒப்படைக்கும் பொறுப்பிலிருந்தும் விடுபடுவதற்கு இலங்கை அரசாங்கம் இந்த மோதலைப் பயன்படுத்த ஆரம்பித்தது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி 1987 டிசம்பர் 31க்குள் நடத்தப்பட வேண்டிய வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தல் புலிகளுக்கும் ஐ.பி.கே. எவ்.வீற்குமிடையே ஏற்பட்ட மோதலின் விளைவாக 1988 நவம்பர் 19ல்தான் நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட ஈபிஆர்எல்எவ்-ஈ.என்.டி. எல்.எவ். தலைமையிலான வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகத்தை புலிகள் இயக்கம் எதிர்த்தது. ஈ.பி.ஆர். எல்.எவ்., ஈ.என்.டி.எல்.எவ். கட்சிகளும் ஐ.பி. கே.எவ்.வுடன் இணைந்து புலிகளை எதிர்த்துப் போரிட்டன. இவற்றால் தமிழ் மக்கள் இன்னற்பட்டதோடு அவர்களின் அரசியல் பலமும் குன்றியது.

சிவசிதம்பரம் இதைச் சுட்டிக்காட்டினார்.

"மக்கள் சரியாகக் கஷ்டப்படுகிறார்கள்" என்று சொன்ன அவர் பிரேமதாசவைப் பற்றியும் எச்சரிக்கை செய்தார்.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தையும் அதன் மூலம் உருவாக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபையையும் அப்போது பிரதம மந்திரியாக இருந்த ரணசிங்க பிரேமதாச கடுமையாக எதிர்த்தார்.

1989 டிசம்பர் 19ல் நடந்த ஜனாதிபதி தேர்தலில் யு.என்.பி. வேட்பாளராகப் போட்டியிட்ட அவர் தான் தேர்தலில் வெற்றி பெற்றால் ஐ.பி.கே.எவ்.வை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை திருத்தப் போவதாகவும் வாக்குறுதியளித்தார்.

தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியானதும் அவ் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அவர் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தார். 1989 பெப்ரவரி 15ல் பாராளுமன்றத் தேர்தலை நடத்தி தன்னைப் பலப்படுத்தியபின் அவர் இந்தியப் படையை வெளியேற்றுவதற்கான சூழலை உருவாக்க ஆரம்பித்தார். அதன் முதல்படியாக புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப் பேச்சுக்களின் போது இந்தியப் படையை வெளியேற்றும் விடயத்தில் ஒத்துழைக்க இரு பகுதியினரும் இணங்கினர்.

அந்த இணக்கத்தை மே 24 அமைச்சரவைக் கூட்டத்தில் பிரேமதாசா தெரிவித்தார்.

"இந்தியப் படையை வெளியேற்ற வேண்டும். புலிகளும் அதையே விரும்புகிறார்கள்.

இந்தியப் படையை வெளியேற்றிவிட்டால் ஜே. வி.பி.யின் கிளர்ச்சி காற்றுப்போன பலூனாகிவிடும்" என்றார் பிரேமதாச. அவ் விடயத்தை விவாதிக்க விசேஷ மந்திரிசபைக் கூட்டம் ஒன்றை நடத்துவதென்று முடிவுசெய்யப்பட்டது.

அந்த விசேட கூட்டத்துக்கு பிரேமதாச காத்திருக்கவில்லை. கொழும்புக்கு வெளியேயுள்ள பத்தரமுல்லையிலுள்ள சித்தவிவேகாராமை என்ற பௌத்த விகாரையில் ஜூன் முதலாம் திகதி நடந்த மத வழிபாட்டின்போது பேசுகையில் இந்தியா தன் படைகளை ஜூலை மாத முடிவுக்குள் மீளப் பெற்று விடுவதைக் காண விரும்புகின்றேன் என்று கூறினார்.

"இந்தியப் படைகள் இங்கே வந்து ஜூலை 29துடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன. எனவே இந்தியா தனது படைகளை ஜூலை மாத முடிவீற்குள் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். கடைசி இந்திய போர் வீரர் ஜூலை முடிவதற்குள் இலங்கையை விட்டுப் போவதை நான் விரும்பு கிறேன்," என்று பிரேமதாச சொன்னார்.

பத்தரமுல்ல பேச்சையடுத்து இரண்டு நாடுகளுக்குமிடையே சொற்போர் வெடித்தது. அத் தகராறு பற்றிப் பேசுவதற்குத்தான் இந்திய வெளியுறவுச் செயலரான தேஷ்முக் வந்தார்.

இந்த விருந்துக்குத் தான் போகவேண்டியிருப்பதை அமிர்தலிங்கம் நினைவூட்டினார்.

சரோஜினி பிஸ்கட் கொண்டு வந்து பரிமாறினார். "என்ன குடிக்கிறியள்?" என்று அவர் விசுவிடம் கேட்டார். விசுவை அவருக்கு முன்பே தெரியும்.

"தேத்தண்ணி தாருங்க அக்கா?" என்றார் விசு. அமிர்தலிங்கமும் தேனீர்தான் கேட்டார்.

சிவசிதம்பரம் தனக்கு ஒன்றும் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். அவர் ஒரு இருதய நோயாளி.

சிவசிதம்பரம் தலையிட்டுச் சொன்னார்: "தம்பி! எங்கடை கவலையை உங்கடை தலைமைத்துவத்து வத்துக்குச் சொல்லுங்கோ."

அதைச் செய்வதற்கு இரண்டு பேரும் இணங்கினர்.


இணைந்து எழுதுவது
த. சபாரத்தினம்
+
அம்பி மகன்


சரோஜினி தேனீர் கொண்டு வந்தார். விசுவும் அலோசியசும் மரியாதையாக எழுந்தனர். தேனீரை வாங்கிக் கொண்டு ஆசனத்தில் அமர்ந்து அமைதியாகக் குடித்தனர். இருவரும் எழுந்து கோப்பைகளை மேசைமீது வைத்தனர்.

ஒரே நேரத்தில் இருவரும் ரீவோல்வர்களை இழுத்து...

அமிர்தலிங்கத்துக்கு தலையில் சூடு விழுந்தது. யோகேஸ்வரனின் நெஞ்சை குண்டு துளைத்தது.

சிவசிதம்பரத்தின் வலது தோளைப் பிய்த்துக் கொண்டு போனது ஒரு ரவை.

சிதறிய இரத்தத் துளிகள் தேனீர்க் கோப்பைகளுக்குள்ளும் விழுந்தன.

(தொடர்ந்து வடியும்....)

# முரசு தரும் 'உலகக் கிண்ணப்' போட்டியில் வெல்லுங்கள்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கும் நிலையில் இப் போட்டி குறித்து போட்டி ஒன்றை நடத்த முரசு தீர்மானித்துள்ளது.

கீழே உள்ள 6 கேள்விகளுக்குச் சரியான பதிலை எழுதி 2003.03.10ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவையுங்கள்.

சரியான விடைகளை எழுதி அனுப்பும் வாசகர்கள் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்படும் 10 பேருக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.

விடைகள் வந்து சேர வேண்டிய முகவரி:




'ஸ்போர்ட்ஸ்'
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 1772, கொழும்பு.

**கேள்விகள்**

1. இறுதிப் போட்டிக்குத் தெரிவாகப் போகும் அணிகள் எவை?
2. கிண்ணத்தைக் கைப்பற்றப் போகும் அணி எது?
3. இச் சுற்றுப் போட்டியின் (Man of the series) தொடர் நாயகனாகப் போகும் வீரர் யார்?
4. இச் சுற்றுப் போட்டியில் அதிக விக்கட்டுக்களைக் கைப்பற்றப்போகும் வீரர் யார்?
5. இச் சுற்றுப் போட்டியில் அதிகூடிய மொத்த ஓட்டங்களைப் பெறப் போகும் வீரர் யார்?
6. போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்படப் போகும் வீரர் யார்?

# ஸ்போர்ட்ஸ்

## தென்னாபிரிக்க அணியினால் மழையை வெல்ல முடியவில்லை!

உலகக் கிண்ணத்திற்கும் தென்னாபிரிக்கா அணிக்கும் என்ன தான் இப்படியொரு எட்டாப் பொருத்தமோ தெரியவில்லை. இம்முறையும் தென்னாபிரிக்க அணி துரதிர்ஷ்டவசமாக போட்டித் தொடரில் இருந்து வெளியேறி இருக்கிறது.

திங்கட்கிழமை நடைபெற்ற இலங்கை அணியுடனான லீக் போட்டி மழை காரணமாக இடை நிறுத்தப்பட்டு போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டதோடு தென்னாபிரிக்காவின் உலகக் கிண்ணக் கனவு கலைந்தது.

இப்பொழுது பி பிரிவில் இலங்கை அணி 18 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்திலும், நியூஸிலாந்து, கென்யா ஆகிய அணிகள் இரண்டாம், மூன்றாம் இடங்களிலும் உள்ளன. தென்னாபிரிக்கா 14 புள்ளிகளுடன் போட்டித் தொடரிலிருந்து வெளியேறுகிறது.

தென்னாபிரிக்கா இலங்கை ஆகிய இரு அணிகளுக்குமே மிக முக்கியமான போட்டி மழை காரணமாக இறுதித் தருணத்தில் கைவிடப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 268 ஓட்டங்களைப் பெற்றது. மாவன் அத்தப்பத்து 124 ஓட்டங்களையும், அரவிந்த டி சில்வா 73 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 45 ஓவர்களில் 6 விக்கட் இழப்புக்கு 229 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை குறுக்கிட்ட இலங்கை அணிக்கு அதிஷ்டம் கை கொடுத்தது.

அதாவது 30 பந்துகளில் 40 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் போட்டி கைவிடப்பட்டது. மாக் பவுச்சர், லான்ஸ் குளுஸ்நர் ஆகிய துடுப்பாட்ட வீரர்கள் களத்தில் இருந்தனர்.

பின்னர் போட்டியை மீண்டும் ஆரம்பிக்க முடியாது என்ற நிலையில் டக்வேத் லுவிஸ் விதிகளுக்கமைய போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டு இரண்டு அணிகளுக்கும் தலா இரு புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டன. ■

# என் வாழ்வில் சிறந்த ஆட்டங்களில் ஒன்று!

## சச்சின் பெருமிதம்

பாகிஸ்தானுக்கு எதிரான தனது ஆட்டத்தை வாழ்வின் மிகச் சிறந்த ஆட்டங்களுள் ஒன்றாகக் கருதுவதாக சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

"என் வாழ்வின் மிகச் சிறந்த ஆட்டங்களுள் ஒன்று அந்த ஆட்டம். அதுவும் பாகிஸ்தானுக்கு எதிராக என்பதால் டபுள் ஸ்பெஷல் எனலாம்.

பாகிஸ்தானுடனான ஆட்டம் என்றாலே, அது மிகப் பெரியதாகி விடுகிறது. அது மிக முக்கியமான ஆட்டம். நாட்டில் அனைத்து மக்களும் இதைக் காண ஆவலாக இருந்தனர்.

இந்த ஆட்டத்தைப் பற்றி ஒன்றரை ஆண்டுகளாகப் பேசப்படுவதைக் கேட்டிருக்கிறேன். அவர்கள் முகத்தில் புன்னகை நிலவுவது குறித்து மகிழ்ச்சியடைந்துள்ளேன்.

என் மனைவி உடனே அழைத்து, இந்தியாவில் நடக்கும் கொண்டாட்டங்களைப் பற்றிக் கூறினார். கொண்டாட்டங்கள் தொடரும் வண்ணம் தொடர்ந்து விளையாட முடியும் என நம்புகிறோம்.



ஆட்டத்தில் இறங்கும்போது என் மனதில் எந்தத் திட்டமும் இல்லை. சலனமில்லாமல் காலியாக இருந்தது. பந்தின் லைன் மற்றும் லெங்க்தை ஆரம்ப கட்டத்திலேயே கணித்துவிட்டேன். முதல் ஓவரில் அக்ரமின் பந்தை பவுண்டரிக்கு அனுப்பும் போது மிகவும் வசதியாக உணர்ந்தேன்.

இந்த ஆட்டத்தை எனது அண்ணன் அஜித் டெண்டுல்கருக்கு அர்ப்பணிக்கிறேன்.

இந்த ஆட்டத்தின்போது காலில் தசைப்பிடிப்பு ஏற்பட்ட உடனேயே ரன்னர் ஒருவரை வைத்துக்கொள்ளும் வாய்ப்பைக் கூறினார்கள். ஆனால் நான் ஆரம்பத்தில் மறுத்துவிட்டேன். நான் அடிக்கும் ஷாட் வேகமானதா, மெதுவானதா என்பது எனக்குத்தான் தெரியும். என் வாழ்வில் நான் "பை ரன்னர்" வைத்துக் கொண்டதே கிடையாது என்று தெரிவித்துள்ளார்.

## சுப்பர் சிக்ஸுக்கு எவ்வாறு அணிகள் தெரிவாகின்றன!

## ஐ.சி.சி. விளக்கம்

உலகக் கிண்ணப் போட்டியில் பல அணிகள் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான திறமையை வெளிப்படுத்தியதால் இறுதி நேரம் வரையில் சுப்பர் சிக்ஸுக்குத் தெரிவாகும் அணி எது என்பது தொடர்பில் சர்ச்சை நிலவியது.

லீக் ஆட்டங்களில் ஏ, பி பிரிவுகளில் சுப்பர் சிக்ஸில் இடம் பெறுவதற்கான தகுதிகளை ஐ.சி.சி அறிவித்திருந்தது.

இதன் பிரகாரம் லீக் சுற்றின் இறுதியில் ஒன்றுக்கும் மேற்பட்ட அணிகள் சமமான புள்ளிகளைப் பெற்றிருந்தால் அவற்றில் எவை தகுதி பெறும் என்பதற்குப் பிரதானமாக மூன்று வழிமுறைகளை ஐ.சி.சி வகுத்திருந்தது.

1. அதிக வெற்றி பெற்ற அணி.
2. இரு அணிகள் சமமான புள்ளி, சமமான வெற்றியைப் பெற்றிருந்தால் அவை இரண்டும் மோதியபோது எது வென்றதோ அந்த அணி.
3. இரண்டுக்கும் மேற்பட்ட அணிகள் சமமான புள்ளி, சமமான வெற்றியைப் பெற்றிருக்குமானால் அவற்றிடையே நடந்த மோதலில் அதிக வெற்றியைப் பெற்ற அணி.

இதுவும் சமமாக இருக்குமானால், விக்கெட் பந்து விகிதத்தில் முதலிடம் பெறும் அணி.

இதுவும் சமமாக இருந்துவிட்டால் யார் தகுதி பெறுவது என்பது சீட்டிழுப்பு மூலம் முடிவு செய்யப்படும்.

# பாகிஸ்தான் இரசிகர்களுக்குக் கிடைத்த ஏமாற்றம்!

சுமார் மூன்று வருடகாலத்தின் பின்னர் கோடிக்கணக்கான மக்களின் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டியில் பாகிஸ்தான் தோல்வியடைந்தது குறித்து அந்நாட்டு இரசிகர்கள் ஏமாற்றத்தை வெளியிட்டிருக்கின்ற போதிலும் பத்திரிகைகள் தமது அணியை மோசமாகக் குறை கூறுவதைத் தவிர்த்துக்கொண்டன.



பாகிஸ்தான் அணியின் குறைகளைச் சுட்டிக் காட்டியிருக்கும் அதே வேளை இந்திய வீரர்களின் திறமைகளைப் பாகிஸ்தான் பத்திரிகைகள் ஏராளமாகப் புகழ்ந்துள்ளன.

பாகிஸ்தானின் வேகத்தை இந்திய வீரர்கள் விஞ்சிவிட்டனர் என்று 'தி நியுஸ்' செய்தித்தாள் எழுதியிருக்கிறது. வக்கார் யூனிஸும், கங்குலியும் கைகுலுக்கிக் கொள்ளும் புகைப்படத்தை இப் பத்திரிகை அரைப் பக்கத்தில் பிரசுரித்திருக்கிறது. எனினும் இலட்சக் கணக்கான மக்களை ஏமாற்றிய பாகிஸ்தான் அணி என்று தனது ஆதங்கத்தையும் அப் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

அன்வரின் சதத்தை சச்சினின் 98 ரன்கள் மறைத்துவிட்டன என்று திடான் எனும் செய்திப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறெனினும் சிம்பாப்வேயுடனான லீக் போட்டியில் பாகிஸ்தான் அபார வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்குத் தெரிவாகி மீண்டும் இந்தியாவுடன் மோதக் கிடைத்தால் அப் போட்டியில் வெற்றி அடையும் என்ற நம்பிக்கையைப் பாகிஸ்தான் கிரிக்கெட் விமர்சகர்கள் பலரும் வெளியிட்டுள்ளனர். ■

# விலைபோனதா இலங்கை அணி!

உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் முதல் சுற்றில் இலங்கை அணி கென்யாவிடம் எதிர்பாராத தோல்வியைத் தழுவிய ஆட்டத்தின் ஒளிப்பதிவு நாடாக்களை ஐ.சி.சி. கேட்டிருப்பது ஒரு வழமையான நிகழ்வு எனத் தெரிவித்திருக்கும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் அதிகாரிகள் இது பெரிது படுத்தப்பட வேண்டிய விடயமல்லவெனக் கூறியிருக்கிறார்கள்.



நைரோபியில் நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி கென்யாவிடம் மோசமான தோல்வியைத் தழுவியது. இப் போட்டியில் சூதாட்டம் இடம் பெற்றிருக்கலாமா என்ற சந்தேகங்கள் எழுப்பப்பட்ட நிலையில் இப் போட்டியில் இலங்கை அணியினர் ஆடிய விதத்தைக் கவனமாக ஆராய இருப்பதாக ஐ.சி.சி. அறிவித்தது.

ஆனால் உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் அவ்வப்போது சில ஆட்டங்களைத் தெரிவு செய்து ஆராய்வது ஐ.சி.சி. ஊழல் தடுப்புப் பிரிவின் வழமையான நடவடிக்கையே எனப் பின்னர் அறிவிக்கப்பட்டது. ■

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்கு கொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.09க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

கே. அரசேஸ்வரன், கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. திருமதி ஜே. ரஞ்சிதமலர், ராஜேந்திரகுளம், வவுனியா.
2. அனுலா நாகரத்தினம், தெஹிவளை.
3. சிவஸ்ரீ ஏ. அரசரெத்தினம், சேனையூர் — 6, மூதூர்.
4. எஸ். பிரியா, அட்டன் வீதி, கொட்டகலை.
5. அமுதா ஜெயராஜா, எழுத்தூர், மன்னார்.
6. ஆ. ஜீவகுமார், வெவர்லி குரூப், அக்கரப்பத்தனை.
7. எஸ் பாத்திமா பர்ஸானா, பெரியபாலத்தடி வீதி, ஏறாவூர் — 1ஏ.
8. க. வரதராசா, பிரதான வீதி, பண்டாரவளை.
9. கே. மார்ஷல் பெர்ணான்டோ, முன்னக்கரை, நீர்கொழும்பு.
10. எம்.என். பாத்திமா நஷ்கா, சந்தை வீதி, சாய்ந்தமருது — 7.

## குறுக்கெழத்துப் போட்டி 09

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ |
| 5 | ■ | ■ | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | ■ |
| ■ | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | ■ | ■ |
| 19 | ■ | 20 | 21 | 22 |

### இடமிருந்து வலம்

(1). குந்திதேவியின் மூத்த மகன்.
(6). முல்லைக்குத் தேர் கொடுத்த மன்னன்.
(8). கணவன் (குழம்பியுள்ளது)
(12). விவசாயிகளின் சின்னம் (குழம்பியுள்ளது)
(16). காடு. (குழம்பியுள்ளது)
(20). நவமணிகளில் ஒன்று. (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

(1). இரக்கம்.
(4). புலவன். (குழம்பியுள்ளது)
(9). இந்த மூலிகையுடன் சிறிதளவு மஞ்சளும் உப்பும் கலந்து அரைத்துத் தடவினால் சொறி தீரும். (குழம்பியுள்ளது)
(10). 'அப்பிள்' பழத்தை ஒப்பிடும் பெண்களின் வதனத்தின் ஒரு பகுதி. (குழம்பியுள்ளது)
(16). தழும்பு.

**குறுக்கெழுத்துப் போட்டி 07 விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| அ 1 | ங் 2 | க 3 | த 4 | ன் 5 |
| பி 6 | ■ | ரு 7 | ■ | கு 8 |
| ம 9 | றி 10 | ■ | ஏ 11 | ர் 12 |
| ன் 13 | ■ | த 14 | ■ | ஆ 15 |
| யு 16 | த 17 | ம் 18 | த 19 | ■ |
| ■ | டி 20 | பே 21 | ■ | மர் 22 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 18.03.2003க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி

**குறுக்கெழுத்துப் போட்டி இல-09**
**தினமுரசு வாரமலர், த.பெ. இல. - 1772, கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக்கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250/= ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.

# காதில பூ கந்தசாமி

**நோட்டீஸ் பலகை**



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

ஈராக் யுத்தம் தொடங்குமாப் போலதான் இருக்கு. புஷ்ஷின்ர மூஞ்சியப் பாத்தால் சண்டைக் கோழி மாதிரித்தான் கிடக்கு. ஐ.நா. சபை தடுத்தாலும், வீட்டோ நாடுகள் மாட்டனெண்டு சொன்னாலும் தான் அடிக்கிறது அடிக்கிறதுதானெண்ட கணக்கா பொரிஞ்சு தள்ளுது மனிசன். தேப்பன்காறனும் உப்பிடித்தான், போன முறை சண்டைப் பிரசண்டம் எடுத்து வித்தை காட்டிப்போட்டுப் பிறகு எலக்ஷனில தோத்துப் போனவர். அப்பவும் ஈராக்காறன் குளப்படி. கீரிப்பிள்ளை கோழிக் குஞ்சைக் கௌவிக்கொண்டு ஓடின மாதிரி சும்மாயிருந்த குவைத்தைப் போய் பாய்ஞ்சு பிடிச்சவன். அந்த நேரத்தில ஆள் விட்டது பிழை எண்டுதான் உலகம் முழுக்க கெம்பினது. எண்டாலும் அமெரிக்கக்காறர் அதிகப்பிரசங்கித்தனம் காட்டினமெண்டும் முனுமுனுப்புக் கிளம்பினது.

இப்ப என்னடாவெண்டால் வலுச்சண்டைக்கு வளம்போட்டுக்கொண்டு வாறார் மேன்காறன். அப்பற்ர சாதனையைத் தான் மிஞ்சிடவேணுமெண்ட எண்ணம்போல. வெறுமனே, ஈராக்காறனிட்ட அழிவாயுதம் இருந்தாலும் இருக்கலாமெண்டு ஐமிச்சத்தைக் கட்டிவிட்டுட்டுச் சண்டைக்குப் போக நிக்கிறார்.

எந்த ஆயுதங்கள் ஈராக்காறனிட்டக் கிடக்கெண்டு வெருளுகினமோ, அதே ஆயுதங்கள் தங்கட நாட்டுக்க இல்லையெண்டு திறந்து காட்டுவினமோ இவை? இதே ஆயுதப் பரிசோதகர்களக் கொஞ்சம் பென்ரகன் பக்கம் போய்வர விடுவினமோ?

அழிவாயுதங்கள் ஈராக்கிட்ட மட்டும்தான் இருக்கெண்டு எப்பிடிச் சொல்லினம்? அமெரிக்காவின்ர செல்லப் பிள்ளைகளிட்ட இல்லையெண்டு யார் கண்டவை? இஸ்ரேலுக்க யார் போய்ச் சோதின செய்யிறதாம்? அரபு நாடுகளெல்லாம் சேர்ந்து இஸ்ரேலுக்க சோதனை நடத்தச் சொன்னால் அந்தத் தீர்மானத்தை முந்தி விழுந்துபோய் வீட்டோப் பவரைப் பாவிச்சுத் தடுக்கிறவர் அமெரிக்காவாத்தான் இருக்கும். அங்க ஒரு சட்டம் இங்க ஒரு சட்டமெண்டிறதுதான் இவையிட நியூ வேர்ல்ட் ஓடரோ?

போன கிழமை நடந்து முடிஞ்ச கொமன் வெல்த் மாநாட்டுக்குத் தலைமை தாங்கின மலேசியப் பிரதமர் டாக்டர் மகதீர் முகமட் அமெரிக்காவின்ர, சண்டைக் கெடுபிடியை கிழிகிழியெண்டு கிழிச்சதக் கேட்டியளோ? சனத்தைக் கொல்லுறதுதான் புது உலக ஒழுங்கெண்டு முடிவு செய்திட்டினமா எண்டு கேட்டார்பாருங்கோ, மூஞ்சியில அடிச்ச மாதிரி.

ஆனால் பாருங்கோ, நான் சொல்லுறன் இந்த முறை சண்டைக்கு இறங்கினால் அமெரிக்கா சண்டையில வெல்லுதோ தோக்குதோ, உலகச் சனத்திட்ட பரிசிகேடாத்தான் இருக்கும்.

போன முறை பெரியளவு எதிர்ப்பு வராததக் கண்டு, இந்த முறையும் வெறுமெனே தாங்கள் உலகம் முழுக்க வலைவிரிச்சிருக்கிற மீடியாவால மட்டும் சனத்தைச் சத்தம் போடாமல் இருக்கப் பண்ணிடலாமெண்டு நெச்சால் பிழைக்கும். கிட்டடியில ஆப்கானுக்குள்ள படையெடுத்த நேரம்கூட அமெரிக்கக் கோபுரங்கள் வீழுந்து நொறுங்கின அதிர்ச்சியில சனம் மலைச்சுப்போய் நிண்டது உண்மைதான். அதப்போல இதையும் வேடிக்கை பாத்துக்கொண்டு நிக்குமெண்டால் அது கற்பனை. இப்பவே எண்டைக்கும் இல்லாதளவு சனம் எல்லா நாட்டிலயும் வீதிக்கு இறங்கியிருக்கு. அமெரிக்காவில கூட ஊர்வலந்தான்.

அமெரிக்க வேட்டைக்கு நாய்க்குட்டிபோல பின்னால ஓடுற பிருட்டன் பிளேயருக்கு சொந்த நாட்டில மட்டுமில்ல பாராளுமன்றத்துக்குள்ளேயே பெருத்த எதிர்ப்பு. அதிலயும் திறிலான விஷயம் என்னெண்டால் ஐரோப்பாவிலயிருந்து ஒரு கூட்டம் கிளம்பி ஈராக்குக்குப் போய் நிண்டுகொண்டு, குண்டு போடுறதெண்டால் முதலில எங்களுக்கு மேல குண்டு போடெண்டு, தங்கட தலையக் குடுத்துக் கொண்டு நிக்குது. என்னயிருந்தாலும் எங்கட நாடுகளில இந்தளவு பொது உணர்வு இன்னும் வரேல்லையெண்டதுக்கு நானும் நீங்களும் கொஞ்சம் வெக்கப்படத்தான் வேணும். இன்னும் நாங்கள் கிடுகு வேலிக்குள்ள நிண்டு கதியாலுக்குச் சண்டைபோடுற கணக்கிலதான். இந்தளவு இனப் பிரச்சினைக்குக் கூட்டம் போட்டுக் கவிதையரங்கெல்லாம் நடந்திற எங்கட சங்கங்கள், உலகம் முழுக்க ஊர்வலம் நடக்கக்க, எதுவுமே அறியாத மாதிரி, உண்டோம் உறங்கினோமெண்டு நீளப் பாய் விரிச்சு ஆழத் துயில்வதப் பாக்க வினோதமாப் படேல்லையே உங்களுக்கு? அட நீங்களும் நித்திரைபோல.....

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# நினைத்து, நினைத்து சிரிக்க

## கவனி



மருத்துவக் கல்லூரி. பேராசிரியர் ஒரு போத்தலை எடுத்தார். "மாணவர்களே, இது சிறுநீர். ஒருவர் டாக்டர் ஆக வேண்டுமானால். நிறம், மணம், சுவை எல்லாவற்றையும் கூர்ந்து கவனிப்பவராக இருக்க வேண்டும்." இப்படிச் சொல்லிவிட்டு, போத்தலுக்குள் விரலை விட்டார். விரலை தன் நாக்கில் வைத்துக் கொண்டார். மொத்த வகுப்பும் பார்த்துக் கொண்டிருந்தது. அப்புறம் அந்த போத்தலை வகுப்பு முழுவதும் சுற்றிவர விட்டார் பேராசிரியர். எல்லாரும் போத்தலுக்குள் விரலை விட்டு அந்த விரலை நாக்கில் வைத்துக்கொண்டார்கள். எல்லாம் முடிந்ததும் பேராசிரியர் சொன்னார்: "நீங்கள் கூர்ந்து கவனிப்பவராக இருந்தால் நான் ஆட்காட்டி விரலால் சிறுநீரைத் தொட்டுவிட்டு நடுவிரலை நாக்கில் வைத்துக் கொண்டதைப் பார்த்திருப்பீர்கள்."

# இந்தவாரம் உங்கள் பலன்

09.03.2003 தொடங்கி 15.03.2003 வரை

**சோதிட மாமணி தில்லை**

### கிரக நிலை

**கும்பம்** - சூரியன், புதன், **இடபம்** - சனி, இராகு, **கர்க்கடகம்** - வியாழன், **விருட்சிகம்** - கேது, **தனு** - செவ்வாய், **மகரம்** - வெள்ளி,
**சந்திரன் கும்பம், மீனம், மேடம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.**

**மேடம்:-**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை, முதற்கால்,) மனமகிழ்ச்சி, செய் தொழில் விருத்தி, பணவரவு, வெளியிடப் பயணம், உயர்ந்தநிலை, உத்தியோக முன்னேற்றம், மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள், இலாபம் பெறுவர்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**இடபம்:-**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் முன்னேற்றம் காரியானுகூலம், இனசன நன்மை, துயர் நீங்கும், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள், மத்திம இலாபம் அடைவர்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**மிதுனம்:-**
(மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்,) இனசனப் பகை, கௌரவக் கேடு, பணவிரயம், அன்னியர் சகவாசம், உத்தியோகத்தர் நன்மை, பிரயாண மிகுதி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிர்ஷ்ட நாள்: புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**கர்க்கடகம்:-**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம் ஆயிலியம்,) தொழில் கஷ்டம், பணச் செலவு கடன்படல், வார இறுதி நன்மை, உத்தியோக முயற்சி, புதிய பதவி, மாண்வர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**சிங்கம்:-**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் விருத்தி, முயற்சி மேன்மை, இனசன நன்மை, பணக் கஷ்டம் உத்தியோகச் சிறப்பு, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:-04.

**கன்னி:-**
(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) பொருள் விரயம், அன்னியரால் தொல்லை, அதிகார விருத்தி, கடன்படல், உத்தியோக முயற்சி, மேலதிகாரிகள் கெடுபிடி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிர்ஷ்ட நாள்: புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**துலாம்:-**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) முயற்சி பலிதம், உறவினர் உதவி குடும்ப கவலை, பிள்ளைகளால் தொல்லை, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி, மாணவர்கல்வி நன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்:- வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்:- 06.

**விருட்சிகம்:-**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம் கேட்டை,) பெரியோர் உதவி, உறவினரால் கஷ்டம், பணவிரயம், திடீர் பிரயாணம் உத்தியோக நன்மை, மாணவர் கல்வி மேன்மை விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**தனு:-**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) முயற்சி மேன்மை, உறவினர் உதவி, பணவரவு, செலவு மிகுதி, உத்தியோக கஷ்டம், மாணவர் கல்வி உயர்வு, பாராட்டு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் குறைவு.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**மகரம்:-**
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை,) தொழில் நன்மை, காரியானுகூலம், பணவரவு உயர்ந்த நிலை, உத்தியோக மேன்மை, பெரியோர் உதவி, மாணவர் கல்வி சிறப்பு, பரீட்சைகளில் வெற்றி விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 5.

**கும்பம்:-**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழில் கஷ்டம், பணவிரயம், புதிய முயற்சி, அன்னியர் உதவி, மனமகிழ்ச்சி உத்தியோக மாற்றம், வீண் கவலை, மாணவர் கல்வி நன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்:- வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்:- 06.

**மீனம்:-**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி) தொழில் சிரமம், மனக்குறை நீங்கும், பொருள் பேறு, இனசன நன்மை, பிரயாண மிகுதி, உத்தியோகப் பிரச்சனை, மேலதிகாரிகளால் கவலை, மாணவர் கல்வி நன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:-

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2003)



ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# இசை மகள்



இசைத்துறையில் வழங்கப்படும் → மிகப்பெரிய விருது கிராமி விருது. ஒவ்வொரு கட்டி இசைத்துறை ஆர்வலர்களினதும் தூரத்துக் கனவுகளில் இதுவும் ஒன்று.

கடந்தவாரம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள மொடிஷன் கார்டினில் நடைபெற்ற 45 ஆவது கிராமி விருது வழங்கும் வைபவம் திரைப்படத் துறையின் ஒஸ்கார் விருது நிகழ்ச்சிபோல மிகக் கோலாகலமாக அமைந்திருந்தது. உலகம் முழுவதிலுமிருந்தும் இசைக்குயில்கள் பல இவ்விழாவிற்காக நியூயோர்க்கில் ஒன்று கூடியிருந்தன.

மேலே உள்ள படத்தில் விருதை உயர்த்திப் பிடித்து ஆர்ப்பரிப்பவர் ஸ்டீவ் மெக்குயின் ஆல்பத்திற்காக கிராம்மி விருது பெற்ற ஷெரைல் குரோ என்ற பிரபல பாடகி.

→ இரண்டாவது படத்தில் இருப்பவர் புகழ்பெற்ற இந்திய இசை மேதை ரவி ஷங்கரின் மகள் நோரா ஜோன்ஸ்.



தனது தந்தை வழியில் இசைப் பயணம் தொடங்கிய நோரா இம்முறை 5 கிராம்மி விருதுகளைத் தட்டிக் கொண்டு தனது தந்தையின் அடிச்சுவட்டை ஒட்டிய யாத்திரையின் முக்கிய மைல் கல் ஒன்றை அடைந்திருக்கிறார். பூரிப்பு அவர் முகத்தில் தெரிகிறதல்லவா...?

சிறந்த குரல் வளம் கொண்ட பாடகியாகவும் இவர் தெரிவு செய்யப்பட்டார்.

இந்திய தொடர்பைக் கொண்டிருந்தாலும் அமெரிக்காவிலேயே அதிக காலம் வாழ்ந்து விட்ட நோரா இசைத்துறை தொடர்பான ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுள்ளார்.




அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு




← சிங்கம் துரத்தத் தொடங்கினால் ஓடித்தப்ப முடியாது என்று தெரிந்து கொண்ட வரிக்குதிரை வேறு வழியின்றி...

## எட்டிப் பிடிக்க





S.T.P. Cargo
அதி விரைவான சேவையை உறுதியோடு வழங்குகிறோம்
4–5 நாட்கள் விமானம் மூலம்
2–4 வாரம் கப்பல் மூலம்
பெற்றுக் கொள்ளலாம்
விரைவான நம்பிக்கையான சேவையே எங்கள் தரச் சிறப்பு
S.T.Parameswaran & Co (Pvt) Ltd
(Mahaladsumi Stores)
180, Central Road, Colombo-12.
வெள்ளவத்தை
5/C, Perera Lane, Colombo-06. Tel/Fax: 559927
சர்வதேச முகவர்கள்
London U.K. Neson.
Tel: 0044208 755 2794, 0044 793 1234 194
Canada Ravi Tel: 001 416 817 8479
ஏனைய சேவைகள்
யாழ்/கொழும்பு விமான டிக்கட்டுகள்
யாழ்/கொழும்பு பொதிகள் சேவை (தரைவழியாக)


## 1வது பிறந்தநாள் வாழ்த்து 13.03.2003



செல்வி தரணிகா சுதேஸ்ஹரன்

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி ஜலஜா 11.03.2003

செல்வி அச்சகா 16.03.2003